## சட்டப்பேரவைத் தேர்தல்

## 2021

# தி.மு.க. தேர்தல் அறிக்கை

# சட்டப்பேரவைத் பொதுத்தேர்தல் - 2021

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையினைத் தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவினர்

1. டி.ஆர்.பாலு, எம்.பி. – குழுத்தலைவர்
2. சுப்புலட்சுமி ஜெகதீசன்
3. ஆ.ராசா, எம்.பி.
4. அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி.
5. கனிமொழி, எம்.பி.
6. திருச்சி சிவா, எம்.பி.,
7. டி.கே.எஸ்.இளங்கோவன், எம்.பி.
8. பேராசிரியர் அ.இராமசாமி

# தி.மு.க. தேர்தல் அறிக்கை - 2021


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 9 |
| 2. | மாநில சுயாட்சி | 14 |
| 3. | மொழிக் கொள்கை – தமிழ் ஆட்சி மொழி | 15 |
| 4. | மத்திய அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழி | 16 |
| 5. | உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாகத் தமிழ் | 16 |
| 6. | செம்மொழி மற்றும் தமிழ் வளர்ச்சி | 17 |
| 7. | ஈழத் தமிழர் நல்வாழ்வு | 19 |
| 8. | நிர்வாகச் சீர்திருத்தம் | 20 |
| 9. | வேளாண்மை | 23 |
| 10. | நீர் மேலாண்மை | 34 |
| 11. | சேது சமுத்திரத் திட்டம் | 43 |
| 12. | கச்சத்தீவு | 44 |
| 13. | மீனவர் நலன் | 44 |
| 14. | நெசவாளர் நலன் | 48 |
| 15. | தொழிலாளர் நலன் | 49 |
| 16. | உயர் கல்வி | 53 |

| | | |
|---|---|---|
| 17. | பள்ளிக் கல்வி | 55 |
| 18. | வேலை வாய்ப்பு | 57 |
| 19. | தொழில் வளர்ச்சி | 60 |
| 20. | மின்சாரம் | 65 |
| 21. | பொது விநியோகத் திட்டம் | 68 |
| 22. | சுற்றுலா | 69 |
| 23. | மகளிர் நலன் | 69 |
| 24. | சுய உதவிக் குழுக்கள் | 74 |
| 25. | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் | 74 |
| 26. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் | 78 |
| 27. | தூய்மைப் பணியாளர் நலன் | 80 |
| 28. | சிறுபான்மையினர் நலன் | 80 |
| 29. | மாற்றுத் திறனாளிகள் நலன் | 81 |
| 30. | வணிகர் நலன் | 82 |
| 31. | ஆசிரியர் மற்றும் அரசு அலுவலர்கள் நலன் | 84 |
| 32. | கோயில் பணியாளர்கள் ஒய்வூதியம் | 86 |

| | | |
|---|---|---|
| 33. | திருநங்கையர் நலன் | 86 |
| 34. | முதியோர் நலன் | 86 |
| 35. | குழந்தைகள் நலன் | 87 |
| 36. | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் | 87 |
| 37. | பத்திரிக்கையாளர்கள் நலன் | 89 |
| 38. | மக்கள் நல்வாழ்வு | 90 |
| 39. | சுற்றுச் சூழல் | 93 |
| 40. | விளையாட்டு | 96 |
| 41. | சட்டமன்றம் | 96 |
| 42. | நிர்வாகம் | 97 |
| 43. | காவல் துறை | 98 |
| 44. | நகர்ப்புற மேம்பாடு | 99 |
| 45. | குடிநீர் வசதி | 100 |
| 46. | வீட்டு வசதி | 101 |
| 47. | இந்து சமய அறநிலையத்துறை | 103 |
| 48. | துறைமுகம் | 106 |

| | | |
|---|---|---|
| 49. | போக்குவரத்து வசதிகள் | 106 |
| 50. | சாலைப் போக்குவரத்து | 107 |
| 51. | ரயில் போக்குவரத்து | 109 |
| 52. | மெட்ரோ ரயில் | 110 |
| 53. | விமானப் போக்குவரத்து | 110 |
| 54. | கலை மற்றும் பண்பாடு | 111 |
| 55. | பேரிடர் மேலாண்மை | 113 |
| 56. | கிராமப்புற வளர்ச்சி | 114 |
| 57. | கட்டடத் தொழில் | 115 |
| 58. | நீதித்துறை | 116 |
| 59. | முன்னாள் ராணுவத்தினர் | 117 |
| 60. | கால்நடை வளம் | 117 |
| 61. | பொது | 117 |
| 62. | பால் | 123 |
| 63. | 10 ஆண்டுகாலத் தொலைநோக்குத் திட்டங்கள் | 125 |

# தமிழ்நாடு 16 வது சட்டப்பேரவைத் தேர்தல்

## 2021

# தி.மு.க. தேர்தல் அறிக்கை

## முகவுரை

தகுதியும் பாரம்பரியமும் மிக்க தமிழ்ப் பெருமக்களே!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புக்களே!

வணக்கம்.

திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் பேரியக்கமாக, பேரறிஞர் அண்ணா அவர்களால் 17.9.1949 அன்று தொடங்கப்பட்டது. எனினும் திராவிட இயக்கத்திற்கான தேர்ந்த விதை 1912–ஆம் ஆண்டே விதைக்கப்பட்டு விட்டதால், திராவிடப் பேரியக்கம் நூறாண்டு காலப் பாரம்பரியத்திற்கும், நீண்ட நெடிய வரலாற்றுக்கும் சொந்தமானதாகத் திகழ்கிறது.

1916–ல் சர் பிட்டி. தியாகராயரும், டாக்டர் டி.எம்.நாயரும், டாக்டர் சி.நடேசனாரும் இணைந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தைத் துவக்கினார்கள். இந்த அமைப்புதான் பிறகு நீதிக்கட்சி என்று அனைவராலும் அழைக்கப்பட்டு – புகழ்பெற்ற இயக்கமாக விளங்கியது. பல நூறாண்டுகளாக மண்ணுக்குள் மறைக்கப்பட்ட – புறக்கணிக்கப்பட்ட பிராமணரல்லாதோரின் சமூக, பண்பாட்டு, அரசியல் அடையாளங்கள் மற்றும் உரிமைகளை மீட்டு எடுக்கவும் – அவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் குறித்தும் குரல் கொடுத்தது நீதிக்கட்சி. இதனால் திராவிடர்களின் பெருமையும், உரிமைகளும் அடுத்தடுத்த ஆண்டுகளில் தென்னிந்திய மக்களின் ஆழ்ந்த கவனத்தைப் பெற்று, மேலும் மேலும் வலுப்பெறத் தொடங்கியது. அதன் விளைவாக, சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தது. சமூக சீர்திருத்தக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை மிகுந்த அர்ப்பணிப்போடு நிறைவேற்றிய நீதிக்கட்சியின் ஆட்சி – சென்னை மாகாண மக்களின் எதிர்காலத்தையே வியத்தகு வகையில் முன்னேற்றப் பாதைக்கு மெல்லமெல்ல ஆனால் உறுதியாக அழைத்துச் சென்றது.

இதற்கிடையில் 1925—ல், திராவிட எழுச்சியின் காரணமாகவும் — மற்றுமொரு திருப்புமுனையாகவும், பகுத்தறிவுக் கொள்கை பரப்பும் சுயமரியாதை இயக்கத்தை தந்தை பெரியார் அவர்கள் தோற்றுவித்தார்கள். 1938—ல் நீதிக்கட்சியின் தலைவரானார் தந்தை பெரியார். அடுத்தடுத்த ஆண்டுகளில் சமூகநீதியின் புதியதொரு பரிமாணம் எழுச்சி பெற்று, 1944—ல் திராவிடர் கழகம் பிறந்தது.

சமூக சீர்திருத்த இயக்கமாக திராவிடர் கழகம் செயல்பட்டதால் — தென்னிந்திய மக்களின் — குறிப்பாக தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வலிமையான அரசியல் இயக்கம் அவசியம் என்பதை உணர்ந்த பேறறிஞர் அண்ணா அவர்கள் 1949—இல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். அன்றிலிருந்து 70 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு பொறுப்புள்ள — துடிப்பு மிகுந்த — சீரிளமைத் திறம் மிக்க அரசியல் பேரியக்கமாக, திராவிட இனம் — மொழி — கலை — பண்பாடு — நாகரிகம் ஆகியவற்றின் அருமை பெருமைகளை — அரிய பாரம்பரியத்தை வெற்றிகரமாகப் பாதுகாத்து, போற்றி வளர்த்து வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆற்றல் மிக்க பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையின் கீழ் — மக்களின் பேராதரவைப் பெற்று திராவிட முன்னேற்றக் கழகம் 1967 தமிழக சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றது. முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றவும் — செழிப்படையவும் செய்தார்.

1969—இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு — அவரது அடிச்சுவட்டில் — முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஒப்பற்ற தலைமையின்கீழ் 50 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் சீர்மிகு பணியாற்றி — தமிழகத்திலும், தேசிய அளவிலும் வளரும் ஜனநாயகத்திற்கும் — சாதி, மத பேதங்களைத் தகர்த்து ஒரு சமத்துவ சமதர்ம சமுதாயத்தை உருவாக்கிடவும் சளைக்காமல் பாடுபட்டு வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 19 ஆண்டு பொற்கால ஆட்சியில், தமிழகம் அனைத்துத் துறையிலும் முன்னேற்றம் கண்டது; நாட்டின் முன்னணி மாநிலமாகக் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது.

இன்று என்னைத் தலைமைத் தொண்டனாகக் கொண்டு, பேரறிஞர் அண்ணா — கலைஞர் வழி நாம் பெற்ற திராவிட மறுமலர்ச்சி என்ற அணையா தீபம் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

பகுத்தறிவு – சுயமரியாதைச் சுடரொளி வீசும் தமிழ்நாட்டில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வாழ்நாளெல்லாம் பாடுபட்டு உருவாக்கிய சாதனைகளைப் பாழ்படுத்த, திராவிட இயக்க விரோதிகள், சுயநல நோக்கில், பொய் வாக்குறுதிகளைக் கொண்டு, குழப்பத்தையும் பிளவையும் ஏற்படுத்த என்னென்ன வேடமோ புனைந்து ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

அ.தி.மு.க.வின் பிற்போக்குத்தனமான ஆட்சியினால், தமிழக மக்கள் அனைத்துவகைப் பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டு, நெருக்கடியான சூழ்நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சி ஊழல் நிறைந்த ஆட்சியாக – நிர்வாகத் திறனற்ற ஆட்சியாக இருக்கிறது; தமிழக மக்களின் சுயமரியாதை, ஜனநாயகப் பண்புகள், உரிமைகள், கலாச்சாரம் மற்றும் அமைதியான பொதுநலன் ஆகியவற்றை முற்றிலும் சீரழித்துவிட்ட ஆட்சியாக இருக்கிறது.

சீரழிந்த இந்தச் சூழ்நிலையை முற்றிலும் மாற்றி அமைப்பதற்காகவும், தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் சீராகக் கொண்டு செல்வதற்காகவும்; தொலைநோக்குப் பார்வை கொண்ட– நமது வழிகாட்டும் ஆசான்களான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய இருவரும் ஓய்வு கொண்டிருக்கும் திக்கு நோக்கித் தெண்டனிட்டு வணங்கி, தமிழக வாக்காளர்கள்முன் இந்தத் தேர்தல் அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

2021 சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கையை வழங்கிடும் இந்த நேரத்தில்; ஊழலற்ற – நேர்மையான – மதச்சார்பற்ற – வெளிப்படையான அரசு நிர்வாகத்தைத் தமிழக மக்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

மத்தியில் 7 ஆண்டுகால பாரதிய ஜனதா கட்சி ஆட்சியும், தமிழகத்தில் 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியும் முறையே இந்திய நாட்டின் – தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து விட்டதன் விளைவாக, பெருநிலைப் பொருளாதாரத் துறைகள் (**Macro Economic Sectors**) மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு விட்டன. தங்களின் தவறுகள், முறைகேடுகள், ஊழல்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, எவ்வித முணுமுணுப்பும் காட்டாமல் – எதிர்ப்பும் தெரிவிக்காமல், மத்திய அரசின் காலடியைக் கண்மூடித்தனமாகப் பிடித்துக்கொண்டு நத்திக் கிடக்கும் அ.தி.மு.க. அரசு – நம்

அரசியல் சட்டத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள கூட்டாட்சித் தத்துவத்தின் சாரமான மாநில உரிமைகள் அனைத்தையும் தாரை வார்த்துவிட்டது.

அ.தி.மு.க. அரசின் நிர்வாகச் சீரழிவினால், “எங்கும், எதிலும்” ஊழல் மயத்தால், அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டுள்ள படுதோல்விகளால், மாநிலம் மிகப்பெரிய பாதிப்பை அடைந்திருக்கிறது. அ.தி.மு.க. அரசின் தவறுகளை மத்திய பா.ஜ.க. அரசு உள்நோக்கத்துடன் மூடி மறைத்துப் பாதுகாத்து நிற்பதால்:–

- மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.
- மிக மோசமான சூழல்கள் மற்றும் அரசின் அலட்சியத்திலும் அக்கறையின்மையிலும் சிக்கி வேளாண்துறை கடும் சோதனைக்குள்ளாகி நிற்கிறது.
- தொழில் முதலீடுகள் கடும் வீழ்ச்சி கண்டு – பெரிய முதலீட்டாளர்கள் எல்லாம் கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தைவிட்டு அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிட்டார்கள்.
- அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கடன் அனைத்தும் கடுமையாக உயர்ந்து – வரலாறு காணாத வகையில் 9 லட்சம் கோடி ரூபாய் கடன் சுமையில் தமிழகம் தத்தளிக்கிறது.
- ஊழல் விண்ணைத் தொட்டு விட்டது.
- வேலை இல்லாத் திண்டாட்டம் உச்சாணிக் கொம்பில் தலைவிரித்தாடி – மாநிலத்தில் உள்ள வேலைகளில் தமிழக இளைஞர்களுக்கு முன்னுரிமை இல்லை என்ற அபாய நிலையை உருவாகி விட்டது.
- சமூகநீதியும், இடஒதுக்கீட்டுக் கொள்கையும் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது.
- சட்டம் ஒழுங்கு சீரழிந்து விட்டது. பொள்ளாச்சி பாலியல் நிகழ்வு மட்டுமின்றி உயர் பெண் போலீஸ் அதிகாரிகளுக்கே பாதுகாப்பு இல்லாத அளவிற்குப் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் எங்கும் பரவி, பெருகிவிட்டது.

மிகக் கடுமையான இந்தச் சூழ்நிலையிலிருந்து தமிழகத்தை மீட்டெடுத்து முன்செல்லத் தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும், விருப்பு வெறுப்பின்றி – வேண்டியவர் வேண்டாதவர் எனும் வேறுபாடின்றி – சமநிலையில், அர்ப்பணிப்பு உணர்வுடன் திராவிட முன்னேற்றக் கழகம் முனைப்புடன் மேற்கொள்ளும் என்ற உறுதியினை மீண்டும் வழங்குகிறேன்.

கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான திரு. டி.ஆர். பாலு அவர்கள் தலைமையில், துணைப் பொதுச் செயலாளர்கள் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், திரு. ஆ.ராசா எம்.பி., திரு. அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., கழக மகளிரணிச் செயலாளரும் கழக மக்களவைக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி, கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திரு. திருச்சி சிவா எம்.பி., செய்தித் தொடர்புச் செயலாளர் திரு. டி.கே.எஸ்.இளங்கோவன் எம்.பி., பேராசிரியர் திரு. அ.இராமசாமி ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு – தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டங்களுக்கு ஐந்து கட்டங்களாக சுற்றுப்பயணம் செய்தது. ஆயிரக்கணக்கான மக்களையும் – அமைப்புகளைச் சார்ந்தவர்களையும் சந்தித்து, லட்சக்கணக்கான மனுக்களைப் பெற்றது. அந்த மனுக்களை – கருத்துகளையெல்லாம் பலமுறை அமர்ந்து விவாதித்து – பாதிக்கப்பட்டுள்ள மாநிலப் பொருளாதாரத்தை மீட்பதற்கும் – துறைவாரியான முன்னேற்றத்திற்கும் – தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளைக் குறிப்பிட்டதொரு கால வரையறைக்குள் நிறைவேற்றுவதற்கும் ஏற்ற வகையில் இந்தத் தேர்தல் அறிக்கையைத் தயாரித்து அளித்துள்ளது.

இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கும் கழகக் குழுவினரின் கூர்த்த அறிவுக்கும், ஆற்றலுக்கும் எனது மனமார்ந்த பாராட்டையும்; அவர்தம் குறைவிலா உழைப்புக்கு நன்றியையும் உரித்தாக்குகிறேன்!

சென்னை

13.3.2021

அன்புள்ள

**(மு.க.ஸ்டாலின்)**

தலைவர், தி.மு.க.

# மாநில சுயாட்சி

1. பேரறிஞர் அண்ணா அவர்களின் மாநில சுயாட்சி பற்றிய இறுதி விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக மத்திய – மாநில உறவுகளை ஆராய்வதற்காக, 1969 ஆம் ஆண்டில் நீதிபதி இராசமன்னார் தலைமையில் நீதிபதி சந்திராரெட்டி, டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை கலைஞர் தலைமையிலான தி.மு. கழக அரசு அமைத்தது. மத்திய – மாநில உறவுகள் குறித்துப் பரிசீலனை செய்ய நீதிபதி சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை 1983 ஆம் ஆண்டில் மத்திய அரசு, அமைத்தது. மீண்டும், 2000 ஆம் ஆண்டில் நீதிபதி வெங்கடாசலய்யா தலைமையில் ஒரு குழுவை மத்திய அரசு அமைத்தது. அதன் தொடர்ச்சியாக, 2004 ஆம் ஆண்டு மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்தபோது, மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டுமென்று தி.மு.க வலியுறுத்தியது, அதன் காரணமாக, 2007 இல் மத்திய – மாநில அரசுகளின் உறவுகளைச் சீரமைப்பதற்காக நீதிபதி எம்.எம்.பூஞ்சி தலைமையில் மத்திய அரசு ஓர் ஆணையத்தை அமைத்தது. அப்போது, திராவிட முன்னேற்றக் கழக அரசு வல்லுநர் குழு அமைத்து, அவ்வாணையத்திற்கு உரிய பதில்களையும், பரிந்துரைகளையும் அனுப்பியது. ஏனினும் முக்கியமான இந்தத் தேசியப் பிரச்சினையில் ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

   ஆகவே,மாநில சுயாட்சி மற்றும் மாநில உறவுகள் குறித்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு குழுக்களின் பரிந்துரைகளையும் முழுமையான விவாதங்களுக்கு உட்படுத்தி மாநிலங்கள் உண்மையான சுயாட்சி பெற்றிடும் வண்ணம், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு முழு ஈடுபாட்டோடு மேற்கொள்ள வேண்டும் என்று தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

2. அரசியலமைப்புச் சட்டத்தில் பொதுப் பட்டியலில் உள்ள கல்வித் துறையை மீண்டும் மாநில அரசுப் பட்டியலில் இடம்பெறச் செய்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

3. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டுவரும்

சமூகநீதி மற்றும் மொழிக்கொள்கை உள்ளிட்ட பல்வேறு கூறுகளை அழித்தொழிப்பதாக அமைத்துள்ளதால் திராவிட முன்னேற்றக் கழகம் அதனை முற்றிலும் நிராகரிக்கிறது.

தமிழகத்திற்கெனத் தனியே மாநில கல்விக் கொள்கை உருவாக்கப்படும். இதற்கெனக் கல்வியாளர்களை உள்ளடக்கிய உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டு உரிய பரிந்துரைகள் அடிப்படையில் இக்கொள்கை உருவாக்கப்படும்.

## மொழிக் கொள்கை (Language Policy)

## தமிழ் ஆட்சி மொழி (Tamil as an Official Language)

4. நம் தாய் மொழியாம் செம்மொழித் தமிழ் மொழியைக் காத்திடவும், இந்தித் திணிப்பு - மொழி ஏகாதிபத்தியம் எந்த வடிவத்தில் வந்தாலும் அதை எதிர்த்திடவும் எப்போதும் ஈட்டி முனையாகச் செயல்படுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம், அதற்காக எண்ணிலடங்கா இழப்புகளை ஏற்றுக் கொண்டுள்ளதோடு தொடர்ந்து அவ்வழியில் பணியாற்றிடவும் உறுதிபூண்டுள்ளது.

இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற காலம்வரை, மத்திய ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்கும் என்றும், பிறமொழி பேசும் மக்கள் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது என்றும் அப்போதைய பிரதமர் பண்டித நேரு அவர்கள் வழங்கிய வாக்குறுதி எப்பொழுதும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள், தமது உரையில் மாநிலங்களில் ஆட்சி மொழிகளாக உள்ள இந்திய மொழிகள் அனைத்தும் (Official Languages of all the States) மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்படுவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். எனினும், இதுவரை மத்திய அரசு அனைத்து இந்திய மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்குவதற்கான எத்தகைய முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. குடியரசுத் தலைவர் அறிவித்ததைப் போல் மாநிலங்களில் ஆட்சி மொழிகளாக உள்ள தேசிய மொழிகள் அனைத்தும் (Official Languages of all the States) மத்திய அரசின் ஆட்சி மொழிகளாகிடும் வகையில், ஆட்சி மொழிச் சட்டத்தில் உரிய திருத்தத்தை மத்திய அரசு கொண்டுவர திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

அதனடிப்படையில், திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த மொழியான, இலக்கணச் செறிவும் இலக்கியப் பண்பாட்டுச் செழிப்பும் நிறைந்த தமிழ்மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்க வேண்டுமென்று, **1996** ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமெனத் திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

அதுவரை மத்திய அரசுப் பணிகளுக்கும், மத்திய பணியாளர் தேர்வு வாரியம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் நடைபெறும் பணியாளர் தேர்வுகளுக்கும், தமிழ் உள்ளிட்ட அந்தந்த மாநிலங்களின் ஆட்சி மொழிகளாக உள்ள மொழிகளையும், இணைத்து எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்த வேண்டும் எனவும் தி.மு.கழகம் வலியுறுத்தும்.

## மத்திய அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழி

**5.** செம்மொழியான தமிழ், தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் இணை ஆட்சி மொழியாக (Co-official Language) பிரகடனப்படுத்தப்பட்டு, தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் தமிழிலும் செயல்பட வேண்டுமென்றும், இதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டம் **343** ஆவது பிரிவில் உரிய சட்டதிருத்தம் கொண்டுவர வேண்டுமென்றும் மத்திய அரசைத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

## உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாகத் தமிழ்

**6.** உச்சநீதிமன்றத்தின்(Supreme Court) பணிகளைப் பரவலாக்கிடும் நோக்கத்துடன் மேல்முறையீட்டு நீதிமன்றங்களை (Court of appeal) நான்கு மண்டலங்களில் அமைத்திட வேண்டுமெனச் சட்ட வல்லுநர்கள் வலியுறுத்தி வந்த, அக்கோரிக்கை தற்போது உச்சமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு (Constitutional Bench) விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தி.மு.கழகம், அத்தகைய மேல்முறையீட்டு நீதிமன்றங்களை உடனடியாக அமைத்திட வழிவகை செய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்தும். மேலும், தெற்கு மண்டலத்திற்கான மேல்முறையீட்டு நீதிமன்றத்தைத் தமிழகத்தில் அமைக்குமாறும் வலியுறுத்தும்.

இந்திய ஆட்சி மொழிச் சட்டம் **1963**, பிரிவு–7ன்படி, இந்தி அல்லது மாநிலங்களின் ஆட்சி மொழிகள் மாநில உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளில் மற்றும் உத்தரவுகளில் பயன்படுத்தப்படலாம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதனை ஆளுநர் பரிந்துரையுடன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினால், அவர் அதனையேற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் இந்திய ஆட்சிமொழிச் சட்டம் கூறுகிறது.

அதன் அடிப்படையில், கலைஞர் தலைமையிலான தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தமிழகச் சட்டப் பேரவையில் **6–12–2006** அன்று தமிழை உயர்நீதிமன்ற மொழி ஆக்கிட வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி, அது சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி, மற்றும் ஆளுநர் ஆகியோரின் பரிந்துரையுடன் மத்திய அரசுக்கு **11–2–2007** அன்று அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால், இதுவரை மத்திய அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை. எனவே, தமிழகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தமிழை, சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக ஏற்க வேண்டுமெனத் தி.மு.கழகம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

## தமிழ் வளர்ச்சி

## செம்மொழி

7. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் சென்னையில் அமைக்கப் பெற்ற செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (Central Institute of Classical Tamil, Chennai) தன்னாட்சி பெற்ற அமைப்பாகத் தொடர்ந்து சென்னையிலேயே இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், புதுப்பொலிவுடன் அந்நிறுவனம் செயல்பட வும் வழிவகை செய்யப்படும்.

**2004** ஆம் ஆண்டில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்த நேரத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் விளைவாக, மத்திய அரசு தமிழ் மொழியைச் 'செம்மொழி' என்று அறிவித்தது. இதனால், தமிழறிஞர்களின் நூறாண்டு கால வேண்டுகோள் நிறைவேறியது. செம்மொழித் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் உலகெங்கிலும் உள்ள தமிழறிஞர்களை அழைத்து, கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை

மிகச் சிறப்பாக நடத்தினார் கலைஞர். செம்மொழித் தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் உலகப் பொது மறையான திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசைத் தி.மு.கழகம் வலியுறுத்தும்.

8. உலகெங்கிலும் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் அமைக்க படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

9. தமிழ், செம்மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதின் அடையாளமாகத் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் சென்னை அண்ணா மேம்பாலம் அருகே, ஒரு மிகப்பெரிய பூங்காவை உருவாக்கி அதற்கு, 'செம்மொழிப் பூங்கா' என்று பெயர் சூட்டப்பட்டது. பொதுமக்கள் பலரும் மாலை நேரங்களில் அந்தப் பூங்காவிற்குச் சென்று மகிழ்ச்சியோடு நேரத்தைக் கழித்தனர். ஆனால், அ.தி.மு.க அரசு காழ்ப்புணர்ச்சி காரணமாகச் செம்மொழிப் பூங்கா என்ற பெயரையே மறைத்துவிட்டது. அந்தப் பூங்காவைப் பராமரிப்பு இல்லாமல் புறக்கணித்துவிட்டது. தி.மு. கழக ஆட்சி அமைந்ததும் அந்தப் பூங்கா மீண்டும் சீர் செய்யப்படுவதுடன் இந்தச் செம்மொழிப் பூங்கா போல தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் செம்மொழிப் பூங்காக்கள் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் அமையவிருக்கும் கலைஞர் அரசினால் அமைக்கப்படும்.

10. உலகப் புகழ்பெற்ற பிறமொழி நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிட்டு வெளியிடப்படும். இதைப் போலவே மிகச்சிறந்த தமிழ் நூல்கள் உலகமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டு தமிழ், தமிழர்களின் பெருமை உலக அளவில் பெருகிப் பரவிட அச்சு மற்றும் இணையதள வசதிகளைப் பயன்படுத்தி ஆவன செய்யப்படும்.

11. தமிழ் எழுத்துகளை எழுதும்போது, சில வரிவடிவங்களில் அரசு அங்கீகரித்துள்ள நடைமுறைகளுக்கு மாறாகச் சிலர் தம் விருப்பம் போல் எழுத்து வடிவங்களை மாற்றி எழுதுவதைப் பத்திரிகைகள் உள்ளிட்ட ஏனைய ஊடகங்களில் காண முடிகிறது. எழுத்து வடிவம் சிதைந்திடா வகையில் பின்பற்றப்படும் தூய தமிழ் வரிவடிவத்தை மட்டுமே எல்லா இடங்களிலும் கண்டிப்பாகப் பயன்படுத்திட வேண்டும் என உரிய சட்டம் இயற்றி அரசு ஆணை வெளியிட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

## அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ் அலுவல் மொழிப் பிரிவு
## (Tamil Offical Language Section)

12. அனைத்து அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களில் ஆட்சி மொழியாகத் தமிழ் சிறப்பாகச் செயல்படுத்தப்பட தலைமைச் செயலகம் தொடங்கி வட்டாட்சியர்/வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகங்கள்வரை ஒவ்வொரு துறையிலும்/ அலுவலகத்திலும் தமிழ் மொழி அலுவலகப் பயன்பாட்டில் உறுதி செய்வதற்கும் மேம்படுத்துவற்கும் தமிழ் அலுவல் மொழி வளர்ச்சிப் பிரிவு அமைக்கப்படும்.

## ஈழத் தமிழர் நல்வாழ்வு

13. இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவை குறித்துச் சுதந்திரமானதும், நம்பகத் தன்மை வாய்ந்ததுமான சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்திச் செயல்படுத்த வேண்டுமென மத்திய அரசைத் தி.மு .கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

14. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முழுவதும் நீர்த்துப்போன அரசியல் அதிகாரப் பங்கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிரந்தரமான அரசியல் தீர்வு அமைய இலங்கையில் உள்ள தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே ஐ.நா. சபையின் மேற்பார்வையில், பொதுவாக்கெடுப்பு நடத்தவும், இலங்கையில் புதிதாக உருவாக உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் முழுமையான அதிகாரங்கள் தமிழர்களுக்குக் கிடைத்திடும் வகையில் சட்டப் பிரிவுகளை உருவாக்கவும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமென மத்திய அரசைத் தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

## தாயகம் திரும்பிய ஈழத் தமிழர் குடியுரிமை

15. இலங்கையிலிருந்து அகதிகளாக வந்த ஆயிரக்கணக்கான தமிழர்களும், அதே போல் 1964–ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாஸ்திரி - சிறீமாவோ பண்டார நாயகா இந்திய–இலங்கை ஒப்பந்தப்படி தாயகம் திரும்பிய பல்லாயிரக்கணக்கான தமிழர்களும் இன்று வரை அகதிகள் முகாம்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

16. இலங்கையிலிருந்து இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு தமிழகத்தில் தஞ்சம் அடைந்த தமிழர்கள் மற்றும் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 1964–ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாஸ்திரி – சிறீமாவோ பண்டார நாயகா இந்திய–இலங்கை ஒப்பந்த அடிப்படையில் நாடு திரும்பியவர்களாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய – இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழர்களும், அவர்களது குழந்தைகளும் இந்தியக் குடியுரிமை பெறுவதற்கும்.

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாக அகதிகள் முகாம்களில் தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் உறவுகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கும் மத்திய அரசைக் கழக அரசு வலியுறுத்துவதுடன், இவர்களில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புபவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்யும்.

17. வெளிநாடுவாழ் தமிழர்களின் நலன் பேணிடவும், அங்கே பல்வேறு பாதிப்புக்கு உள்ளானோர்க்கு உதவிடவும், வெளிநாடுகளில் இறந்துபோக நேரிடுவோரின் குடும்பங்களுக்குத் தமிழ்நாட்டில் தேவையான அடிப்படை உதவிகளை நல்கிடவும், நாடு திரும்பிய வெளிநாடுவாழ் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்குத் துணை நிற்கவும், வெளிநாடு வாழ் தமிழர்கள் நலனுக்காகத் தமிழக அரசில் வெளிநாடு வாழ் தமிழர்கள் துறை என்று ஒரு புதிய அரசுத் துறை உருவாக்கப்படும்.

## நிர்வாகச் சீர்திருத்தம்

## லோக் ஆயுக்தா செயல்பட வைத்தல்

18. லோக் ஆயுக்தா முறையாகவும் முழுமையாகவும் செயல்படத் தேவையான நடவடிக்கைகளைத் தி.மு.க. அரசு உடனடியாக மேற்கொள்ளும்; அதன் மூலம் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட பொது ஊழியர்கள் மீதான ஊழல் புகார்கள் தாமதமின்றி விசாரிக்கப்பட்டு; குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

19. பொது மக்களுக்கு அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய சாதிச் சான்றிதழ், பிறப்பு இறப்புச் சான்றிதழ், வருவாய்ச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், ஒய்வூதியப் பலன்கள், பொது விநியோகத் திட்டப் பலன்கள் உள்ளிட்டவற்றை விண்ணப்பித்தபின் குறிப்பிட்ட நாட்களுக்குள் இவற்றைப் பெறுவதை உறுதி செய்யும் வகையில் சேவை உரிமைச் சட்டம் (Right to Services Act) நிறைவேற்றப்படும்.

## ஊழலற்ற நேர்மையான நிர்வாகம்

20. மக்களோடு நெருங்கி உறவாடும் அரசுப் பணிகளில் ஊழலற்ற சுதந்திரமான வெளிப்படையான நிர்வாகத்தைத் தி.மு.க. ஆட்சி வழங்கும். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அரசின் தலையீடுகளால் விருப்பு வெறுப்பின்றி நேர்மையாகச் செயல்படாமல் இருக்கிறது. அது சீர்படுத்தப்பட்டு செம்மையாகச் செயல்படவும், ஊழல் செய்வோர் மீது சட்ட விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

21. கடந்த பத்தாண்டுகளாக ஊழல் மலிந்த அ.தி.மு.க. ஆட்சியில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு, ஊழல் புகார்களுக்கு ஆளாகி உள்ள அ.தி.மு.க. அமைச்சர்கள்மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தமிழக ஆளுநரை கழகம் வலியுறுத்தி உள்ளதைத் தொடர்ந்து, கழக ஆட்சி மலர்ந்தவுடன் அத்தகைய ஊழல் அமைச்சர்கள் மீதான புகார்களை விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ள தனி நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

## முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதாவின் மர்ம மரணம் குறித்து விசாரணை

22. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் இறப்பில் உள்ள மர்ம மரணம் குறித்து, கழக ஆட்சியில் முறையான விசாரணை நடத்தப்பட்டு தவறு இழைத்தவர் எவராயினும் அவர் உரிய சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவர்.

## வெளிப்படையான மாவட்ட நிர்வாகம்

23. மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(BDO) ஆகிய அதிகாரிகள் தங்கள் வலைதளத்தில் (Website) நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் மனுக்கள் மீது வைத்த கோரிக்கைகள் / கடிதங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களைப் பதிவிட வேண்டும். இதனால், பொதுமக்கள் தங்களது குறைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் வலைதளத்தில் தொகுதிவாழ் மக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் ஒவ்வொன்றின் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்களைப் பதிவிட வேண்டும். இதற்கு ஏதுவாக ஒவ்வொரு சட்டமன்ற

உறுப்பினர் அலுவலகத்திலும் இரண்டு கணினி அலுவலர்கள் சட்டப்பேரவைச் செயலகத்தால் நியமிக்கப்படுவர்.

24. அரசு நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அமைச்சர்கள் அதிகாரிகள் ஆகியோரின் தேவையற்ற செலவுகள், பயணங்கள் ஆகியவை தவிர்க்கப்பட்டு அதன் மூலம் செலவினங்கள் கட்டுப்படுத்தப்படும்.

## தமிழ்நாட்டின் கடன் சுமை

25. கடந்த பத்தாண்டுகளில் திறமையற்ற – ஊழல் நிறைந்த – கையாலாகாத அ.தி.மு.க. அரசின் தவறான நிர்வாகம் மற்றும் தவறான பொருளாதாரக் கொள்கையினால் தமிழ்நாட்டின் கடன்சுமை ரூ.9 லட்சம் கோடி அளவில் உள்ளது. தமிழ்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ரூ.1,25,000/– கடனோடு பிறக்கிறது. இந்தக் கடன் சுமையை இறக்குவதற்கும், மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான, சரியான நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரைப்பதற்காக ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்படும். குழுவின் அறிவுரைகள் உரிய ஆய்வு செய்யப்பட்டு, அரசு முடிவுகளை விரைந்து எடுக்கும்.

## தமிழ்நாடு அரசுப் பொதுத்துறை நிறுவனங்கள் சீரமைப்பு

26. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், மின்சாரத் துறை நிறுவனங்கள், டாஸ்மாக், காகித நிறுவனம், டிட்கோ போன்ற தமிழக அரசு மூலதனத்தில் இயங்கிடும் 83 பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. இவை அனைத்தும் வணிகம் சார்ந்த தொழில் நிறுவனங்களே. இவற்றில் சில நிறுவனங்களைத் தவிர ஏனைய நிறுவனங்கள் அனைத்தும் தொடர்ந்து பெரும் நஷ்டத்தில் செயல்படுகின்றன. இந்த அரசு நிறுவனங்களின் மொத்தத் திரண்ட இழப்பு மார்ச் 2017 வரை ரூ.78,854 கோடி ஆக இருந்தது. அரசு நிறுவனங்களில் தமிழக அரசின் மொத்த முதலீடு ரூ.1,53,870 கோடி ஆகும். பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தின் மொத்தக் கடன்சுமை இன்றைய நிலையில் ஏறத்தாழ ரூ. 3 லட்சம் கோடி அளவில் உள்ளது.

சுமார் 3 லட்சம் பணியாளர்களுடன் இயங்கும் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் மொத்த ஆண்டு வருவாய் ரூபாய். 1,10,850 கோடியாகும். மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (STATE GROSS DOMESTIC

PRODUCT) இவற்றின் பங்கு ஏறத்தாழ 10 சதவிகிதம் அளவிற்கு உள்ளது. எனவே, தமிழகப் பொதுத்துறை நிறுவனங்களின் பேரிழப்புக்கான காரணங்களைக் கண்டறிந்து இந்த நிறுவனங்களை லாபம் ஈட்டும் அமைப்புகளாக மாற்றுவது மிகவும் இன்றியமையாதது . இதனைக் கருத்தில் கொண்டு அரசு பொதுத்துறை நிறுவனங்களைத் தொழில்நுட்ப ரீதியாகவும், மேலாண்மை அடிப்படையிலும் நவீன மயமாக்குவதற்கும், பொருட்களையும் சேவைகளையும் திறம்படச் சந்தைப்படுத்துவதற்கும் ஒரு உயர்நிலை வல்லுநர் குழு (HIGH LEVEL EXPERT COMMITTEE) அமைக்கப்படும். இந்தக் குழுவின் அறிவுரைகள் மூன்று மாதங்களுக்குள் பெறப்பட்டு அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழக பொதுத்துறை நிறுவனங்கள் லாபத்துடனும் சிறப்பாகவும் செயல்படுவது உறுதிப்படுத்தப்படும்.

## வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன்

27. சென்ற ஆண்டு மத்திய அரசு நாடாளுமன்ற நடைமுறைகளைப் புறக்கணித்து அவசரம் அவசரமாகக் கொண்டு வந்த

I. விலை உறுதி மற்றும் பண்ணைச் சேவைகள் சட்டம் 2020,

II. வேளாண்மை உற்பத்தி வர்த்தகம் மற்றும் வர்த்தக மேம்பாட்டுச் சட்டம் 2020,

III. அத்தியாவசியப் பொருள்கள் திருத்தச் சட்டம் 2020

ஆகிய இந்த மூன்று வேளாண் சட்டங்களையும் எதிர்த்து இந்தியாவில் உள்ள அனைத்து விவசாயிகளும் டெல்லியில் கடந்த நூறு நாட்களுக்கும் மேலாகத் தொடர்ந்து கடுமையாகப் போராடி வருகின்றனர். பிரதமர், போராடி வரும் விவசாயிகளை அழைத்துப் பேச முன்வரவில்லை என்பது அதிர்ச்சி தரத்தக்கதாகும். இச்சட்டங்களைத் திரும்பப் பெற தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி; இவற்றை ரத்து செய்திட மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டுமென வலியுறுத்தப்படும். ஆதேபோல், மத்திய அரசுடன் இணைந்து விவசாயிகளின் நலனுக்கு எதிராக மாநில அ.தி.மு.க அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தையும் தி.மு.க. அரசு ரத்து செய்யும்.

28. காவிரி டெல்டா பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்று மாநில அரசு அறிவித்த பிறகும், டெல்டா பகுதி விவசாய நிலங்களில், 'மீத்தேன் வாயு'

(Methane Gas) மற்றும் 'ஷேல்வாயு' (Shale Gas) எடுக்கும் புதிய திட்டங்களை மத்திய அரசு மீண்டும் கொண்டுவர முயற்சித்தால், அதனை விவசாயிகளின் நலன் காக்கும் தி.மு.க. அரசு தடுத்து நிறுத்தும்.

29. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கிடும் வகையிலும், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் வகையிலும் ஆண்டுதோறும் விவசாயிகள் சங்கங்கள் மற்றும் அமைப்புகளைக் கலந்தாலோசித்து வேளாண்மைக்கென்று தனியாக நிதிநிலை அறிக்கை (Budget for Agriculture) தாக்கல் செய்யப்பட்டு வேளாண் பணிகள் மேம்படுத்தப்படும்.

30. கிராமப்புறங்களில் சிறு, குறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல், காய்கறிகள், தானியங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் உருவாக்கும் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றைச் சந்தைப் படுத்தும்போது இடைத்தரகர்களின் தலையீட்டால் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உழவர் சந்தைகளைத் தமிழகம் முழுவதும் அமைத்து, அரசே தலையிட்டு விற்பனையை முறைப்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அதே அடிப்படையில், ஊரகப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்குமான விற்பனை சந்தைகளை உருவாக்குவோம். அரசின் மேற்பார்வையில் இச்சந்தைகள் இயங்கும். விவசாயிகள் சந்தையில் பலியிடப்படுவது தவிர்க்கப்படும்.

31. தமிழக வேளாண் மக்கள் தங்கள் வருவாயில் மூன்றில் ஒரு பங்கு விவசாயம் சார்ந்த தொழில்களிலிருந்து பெறுகின்றனர். அவர்களது இவ்வருவாயை அதிகரிக்கும் வண்ணம் புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, தனி நபர்களாகவோ அல்லது கூட்டாகவோ மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

32. கேரள மாநிலத்தில் வேளாண் விளை பொருட்களுக்குத் தகுந்த விலை நிர்ணயிக்கப்பட்டு, அவ்விலை விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அத்திட்டம் ஆராயப்பட்டு, அதனைத் தமிழகத்திலும் செயல்படுத்துவோம். சந்தையின் ஏற்ற இறக்கங்களிலிருந்து விவசாயிகள் துயருறுவதைத் தவிர்ப்போம்.

## சிறு குறு விவசாயிகள் கடன்கள் தள்ளுபடி

**33.** சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள பயிர்க் கடன்கள் மற்றும் நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று தி.மு.க தலைவர் தளபதி அவர்கள் 2019ல் நடைபெற்ற தேர்தல் நேரத்திலேயே ஏற்கனவே அறிவித்திருந்தார். தற்போது, அ.தி.மு.க. அரசு தேர்தல் லாபத்திற்காக அவசர கதியில் எவ்வித முன்னேற்பாடும் போதிய நிதி ஒதுக்கீடுகளும் இல்லாமல் இது தொடர்பாக அறிவித்துள்ளது. எனவே, தி.மு.க. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அறிவித்தபடி சிறு குறு விவசாயிகளின் கடன்கள் முறையாக நிதி ஒதுக்கி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும்.

**34.** கரும்பு விவசாயிகளுக்குக் கூட்டுறவு ஆலைகளும் தனியார் ஆலைகளும் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை ஒரு கால வரையறைக்குள் பெற்றுத் தந்திட உரிய தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும்.

## அனைத்து உணவுப் பொருள்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலை

**35.** வேளாண்துறை சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளை ஆய்ந்து உடனடி நிவாரணம் வழங்குவதற்கும், விவசாய நலத் திட்டங்களை உருவாக்கவும்; விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல், கரும்பு, ஆகியவற்றிற்கு நிர்ணயிக்கப்படுவது போல் வாழை, மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு, பருப்பு வகைகள், மிளகாய், சிறுதானிய வகைகள், தேயிலை, எண்ணெய் வித்துகள், தோட்டக்கலை விளைபொருள்கள் போன்றவற்றிற்கும் குறைந்தபட்ச ஆதாரவிலை (MSP) நிர்ணயிக்க மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விவசாயப் பிரதிநிதிகள் அடங்கிய வேளாண் மேம்பாட்டுக் குழுக்கள் (Agriculture Development Council) அமைக்கப்படும். தேவையான அளவு சிறு தானியங்களை அரசே கொள்முதல் செய்து, நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

**36.** இயற்கை வேளாண்மையை (Organic Farming) ஊக்கப்படுத்த வேளாண் துறையில் தனியே ஒரு பிரிவு உருவாக்கப்படும்.

**37.** இயற்கை வேளாண் அறிவியல் அறிஞர் கோ.நம்மாழ்வார் பெயரில் 'இயற்கை வேளாண்மை ஆய்வு மையம்' தொடங்கப்படும்.

38. இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம் வழங்கப்படும்.

39. தோட்டக்கலை விளைபொருள்களான காய் கனிகள், மலர்கள் மற்றும் மருத்துவ மூலிகைகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், புதியவகை இனங்களை உருவாக்குவதற்கும் கொடைக்கானலில் உள்ள மன்னவனூரில், அரசிடம் இருக்கும் 390 ஏக்கர் நிலத்தில் மண்டலத் தோட்டக்கலை ஆய்வு மையம் (Horticulture Research Centre) அமைக்கப்படும்.

40. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நீர் நிலைகளின் கொள்ளளவையும், நீரோட்டத்தையும் பாதிக்கும் வகையில் பரவி உள்ள சீமைக் கருவேலமரங்களும், ஆகாயத் தாமரைச் செடிகளும் அழிக்கப்பட்டு, நீர்நிலைகள் முறையாகப் பராமரிக்கப்படும்.

41. சொட்டு நீர்ப்பாசன முறையை ஊக்குவிப்பதற்காக அனைத்து விவசாயிகளுக்கும் அதிகபட்சம் 5 ஏக்கர் வரை சொட்டு நீர்ப்பாசன முறையை அமைக்க 90 சதவிகித மானியம் வழங்கப்படும்.

## 100 நாள் ஊரக வேலை நாட்கள் 150 ஆக அதிகரிப்பு

42. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தற்போது வேலை நாட்களின் எண்ணிக்கை 150 நாட்களாக அதிகரிக்கப்படும். இந்தத் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிகளில் விரிவுபடுத்த மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும். தினக்கூலி ரூ.300/– என உயர்த்தி வழங்கப்படும்.

43. விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் வகையில், விவசாயிகளின் ஒப்புதல் இல்லாமல், விளை நிலங்களை வேறு பயன்பாட்டிற்கு மாற்றுவதைத் தடுத்திட நடவடிக்கைகள் மேற்கொண்டு, விளை நிலங்கள் பாதுகாக்கப்படும்.

44. மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த விவசாயிகள் அனைவருக்கும், தடையின்றி இலவச மும்முனை மின் இணைப்பு வழங்கப்படும்.

## ஏழை விவசாயிகளுக்கு மின் மோட்டார் வாங்க மானியம்

45. மூன்று ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும், மின் மோட்டார் வசதி இல்லாத விவசாயிகளுக்கு புதிய மின் மோட்டார் வாங்கும் போது 10,000 ரூபாய் வரை மானியம் வழங்கப்படும்.

46. சிறு குறு விவசாயிகள் 10 பேர் இணைந்து கூட்டுப் பண்ணை முறையில் வேளாண்மை செய்தால் வேளாண் கருவிகள் வாங்க, விலையில் 10 சதவிகிதம் அளவுக்கு மானியமாக ஒருமுறை வழங்கப்படும்.

## வேளாண் மகளிர்க்கு மானியம்

47. கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற பெண்கள் பத்து பேர் இணைந்து நடத்தும் ஆடு மற்றும் கோழி வளர்ப்புப் பண்ணைகளுக்கு 30 சதவிகித மானியம் வழங்கப்படும்.

48. பன்னிரண்டாம் வகுப்பு படித்த, கிராமப்புற மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்தப்படும். அவற்றின் மூலம் மலர்த்தோட்டம் அமைத்தல், மீன் வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு, பாய்முடைதல், கூடைமுடைதல், மண்பாண்டம் செய்தல், கறிக்கோழி வளர்த்தல் முதலிய பணிகளில் ஈடுபடுவோருக்கு, அரசு 25 சதவிகித மானியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

49. நீர் ஆதாரம், நிலவளம், தட்பவெட்பம் ,இயற்கை பாதிப்புகள் உள்ளிட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு வேளாண் மண்டலங்கள் உருவாக்கப்பட்டு விவசாயிகள், அரசு அதிகாரிகள், சுற்றுச்சூழல் வல்லுநர்கள் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மண்டலக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழு தங்கள் மண்டலத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி விவசாயிகள் இயற்கை பாதிப்புக்கு ஆளாகாமல் காக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும்.

50. ஒன்றியங்கள் தோறும் தேவைக்கேற்ற அளவிற்குத் தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும். இவை உலர் களங்களுடன் கூடிய கொள்முதல் நிலையங்களுடன் இணைக்கப்படும்.

51. வன விலங்குகளால் ஏற்படும் மனித உயிர் இழப்புகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றன. யானைகளால் உயிர் இழப்போர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையினைக் கருத்தில் கொண்டு, மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே ஏற்படும் மோதலைத் (Human -Animal Conflict) தவிர்க்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். ஆகவே, வனங்களில்

யானைகளும் மற்ற விலங்குகளும் பயணிக்கும் வழித்தடங்களைக் கண்டறிந்து, அப்பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்து தரும். வன விலங்குகளால் ஏற்படும் மனித உயிரிழப்புகளுக்குத் தற்பொழுது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை **3** லட்சம் ரூபாய் என்பது, **5** லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

## மரபணு மாற்றுத் தொழில்நுட்பத்துக்கு அனுமதி மறுப்பு

**52.** பன்னாட்டு நிறுவனங்களின் மரபணு மாற்றுத் தொழில்நுட்பத்தை இந்தியாவில் புகுத்த மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சியை தி.மு.கழகம் முற்றிலுமாக எதிர்ப்பதோடு, தமிழகத்தில் அதற்கான சோதனை முயற்சிகளுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## கிருஷ்ணகிரியில் தோட்டப் பல்கலைக் கழகம்

**53.** கிருஷ்ணகிரி மாவட்டம் ஜீனூரில் **360** ஏக்கர் நிலப்பரப்பில் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**54.** தென் தமிழகத்திற்கென மதுரையில் வேளாண் பல்கலைக் கழகம் அமைக்கப்படும்.

**55.** சத்துணவு மையங்கள், அரசு மாணவர் தங்கும் விடுதிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களின் உணவு விடுதிகளுக்குத் தேவையான பால், பழங்கள், காய்கறிகள், வெல்லம், பனை வெல்லம் சர்க்கரை, பருப்புவகைகள், தானிய வகைகள் போன்றவை அனைத்தும் கூட்டுறவு விற்பனை மையங்கள் மூலம் மட்டுமே வாங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## பனை வெல்ல உற்பத்திக்கு ஊக்கத் திட்டம்

**56.** பனைவெல்ல உற்பத்தியாளர்களுக்குப் பனைவெல்லம் காய்ச்சுவதற்குத் தேவையான சிறப்புக் கடன் வசதி மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகள் செய்து தரப்படும். மேலும், மாவட்ட வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகப் பனை வெல்லம் கொள்முதல் செய்யப்படும். பனைப் பொருள்கள் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும், உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தவும் தேவையான திட்டம் வகுத்துச் செயல்படுத்தப்படும். அரசின்

நியாயவிலைக் கடைகளில் மற்ற பொருள்களுடன் பனை வெல்லமும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்பனை செய்யப்படும்.

57. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில், தற்போது அந்தப் பகுதி முழுவதிலும் இயற்கைச் சீற்றத்தால் அழிவு ஏற்பட்டால் மட்டுமே இழப்பீடாகப் பயிர்க் காப்பீட்டுத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஒரு தனி விவசாயியின் நிலத்தில் பாதிப்பு ஏற்படும்போது காப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு தனி நிலத்தில் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டாலும் இழப்பீடு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இயற்கைச் சீற்றம் மட்டுமின்றி, வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கும் இழப்பீடு வழங்கக் கூடிய வகையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்படும்.

58. கண்மாய்கள் மற்றும் அணைகளில் படிந்துள்ள வண்டல் மண்ணை விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும், மண்பாண்டங்கள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கும் மற்றும் கிணற்று மண்ணை எடுத்துச் செல்வதற்கும் அடையாள அட்டை அடிப்படையில் விவசாயிகள் இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படும்.

59. தமிழகத்தின் பல பகுதிகளில் மூலிகைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டு, சித்த மருத்துவத்திற்குத் தேவையான மூலிகைச் செடிகளை வளர்க்கவும், அவற்றிற்கு உரிய விலை கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

60. வேலூர் மாவட்டம் காவலூரில், முந்தைய தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, தற்போது மூடப்பட்டிருக்கும், மூலிகைப் பண்ணை மீண்டும் திறக்கப்பட்டுச் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

61. பட்டுப்புழு வளர்ப்பு ஊக்குவிக்கப்படும் வகையில், தேவைப்படும் மாவட்டங்களில் பட்டுக்கூடு விற்பனை மையம் அமைக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புழுக் கூட்டிற்கு உரிய விலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

62. தமிழகம் முழுவதும் தென்னை விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தென்னை மரத்திலிருந்து 'நீரா' போன்ற பதநீர் இறக்கி விற்பனை செய்ய ஊக்குவிக்கப்படும்.

**63.** தென்னை விவசாயிகளின் நலன் கருதி, இளநீர், தேங்காய் ஆகியவற்றின் பயன்பாடுகள் பல்கிப் பெருகுவதற்கும், தென்னந்தோப்புகளில் அடுக்கு விவசாய முறை மூலம் பலவகைப் பயிர்களைப் பயிரிட்டு, ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான வருவாய் ஈட்டுவதற்கும் ஏற்ற திட்டங்கள் நிறைவேற்றப்படும். இது போன்ற வேளாண்மையில் ஈடுபடுவோருக்கு ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.

**64.** சிலந்தி நோய் மற்றும் வறட்சியால் பாதிக்கப்படும் தென்னை மரங்களுக்கும், அவ்வப்போது வருகின்ற நோய்களால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கும் உரிய இழப்பீடு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**65.** பொள்ளாச்சி மற்றும் பட்டுக்கோட்டையில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் துணை மண்டல மையமும், ஒருங்கிணைந்த தென்னைப் பொருள்கள் உற்பத்தி வளாகமும் அமைத்துத் தரப்படும். மேலும், சேலம், பேராவூரணி, பட்டுக்கோட்டை போன்ற தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் கயிறு சார்ந்த பல்வேறு பொருள்கள் சிறு மற்றும் குடிசைத் தொழிலாகவும், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலமாகவும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றைத் தமிழக அரசுக் கூட்டுறவு நிறுவனங்கள் நேரடியாகக் கொள்முதல் செய்து விற்பனைக்கு உதவி செய்யப்படும்.

**66.** கொப்பரைத் தேங்காய்களைத் தமிழ்நாடு தென்னை நலவாரியத்தின் (Tamil Nadu Coconut Welfare Board) மூலம் அரசே கொள்முதல் செய்வதோடு, கொள்முதல் விலையையும் அரசே நிர்ணயம் செய்யும். மேலும், தேங்காய் எண்ணெயை அரசு கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகளில் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**67.** தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள வட்டார வேளாண்மை அலுவலகங்களில் மண் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் நிறுவப்படும்.

**68.** சிறு தானியங்கள், செக்கு எண்ணெய், நாட்டுச் சர்க்கரை மற்றும் வெல்லம் உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் நியாய விலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரையும், வெல்லமும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

69. தமிழகத்தில் விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களுக்குத் தேவையான இடுபொருள்கள் அனைத்தும், அந்தந்தக் கிராமங்களுக்கு நடமாடும் உழவர் நண்பன் ஊர்திகளில் எடுத்துச் சென்று அரசு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கிடும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

70. தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் போன்ற இந்த நூற்றாண்டின் தலைமைத் தொழில்நுட்பங்களைத் தக்க வகையில் பயன்படுத்தி, வேளாண்மையை உயர்தொழில் நுட்பத் தொழிலாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.

71. புஞ்சை நிலங்களையும், தரிசு நிலங்களையும் தகுந்த விளைச்சல் நிலங்களாக (Dry Land Farming and Wasteland Development) மாற்றிட, நுண்ணிய நீர்ப்பிரிமுகடு மேலாண்மை (Micro Watershed Management) போன்ற புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும். இவ்வகை நிலங்களில் சிறுதானிய வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அரசு உதவிடும் வகையில் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

72. கடலோரப் பகுதிகளில் இறால் பண்ணைகள் கட்டுப்பாடின்றி அமைக்கப்படுவதால், விவசாயிகளுக்கு ஏற்படும் இன்னல்கள் களையப்படும் வகையில் இறால் பண்ணைத் தொழில் முறைப்படுத்தப்படும்.

73. முந்தைய தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் குடுமியான் மலையில் 1000 ஏக்கர் நிலத்தில் உருவாக்கப்பட்ட வேளாண் ஆய்வு மையமான அண்ணா பண்ணை, அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் செயலிழந்த நிலையில் உள்ளது. இந்த மையம் தரம் உயர்த்தப்பட்டுத் திறம்பட மீண்டும் செயல்பட ஆவன செய்யப்படும்.

74. காவிரி பாசனப் பகுதி மற்றும் டெல்டா பகுதிகளில் உள்ள அனைத்துக் கால்வாய்களும் தூர்வாரப்பட்டுக் கரைகள் பலப்படுத்தப்படும்.

## நெல், கரும்புக்குக் கூடுதல் ஆதார விலை

75. அ.தி.மு.க. அரசு நெல்லுக்குத் தற்போது குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 2000-க்கும் குறைவாக நிர்ணயித்துள்ளது. இந்தத் தொகையை தி.மு.க. அரசு ரூபாய் 2500 ஆக உயர்த்தித் தரும். அதைப் போல் கரும்புக்கான குறைந்தபட்ச ஆதார விலையும் ரூபாய் 4000/- ஆக உயர்த்தி நிர்ணயிக்கப்படும்.

## வேளாண் இயந்திரங்கள் வாங்க கூட்டுறவு அமைப்புகளுக்கு அரசு உத்தரவாதம்

76. விவசாயத் தொழிலாளர்கள் எண்ணிக்கை தற்போது குறைந்து வருகிறது. வேளாண்மையில் இயந்திரங்களின் பயன்பாடும் தேவையும் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், வேளாண்மையில் அக்கறை கொண்ட இளைஞர்கள் பலரும் வேறு வழியின்றி மாற்றுத் தொழிலில் ஈடுபடச் சென்று விடுகிறார்கள். அறுவடை இயந்திரங்கள் தட்டுப்பாடின்றிச் சலுகைக் கட்டணத்தில் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும்,அவர்களை விவசாயத் தொழிலுக்கு ஈர்த்திடவும், நவீனத் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி வேளாண்மையை மேம்படுத்திடவும், மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பள்ளிப்படிப்பு முடித்த, குறைந்தது 40 ஆண்கள், மற்றும் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கி, அரசு நேரடியாக உதவிடும் வகையில், ஒவ்வொரு கூட்டுறவு அமைப்பிற்கும் உத்தேசத் திட்டமதிப்பு 2 கோடியே 50 லட்சம் ரூபாய்ச் செலவில், டிரெய்லருடன் கூடிய 5 டிராக்டர்கள், 5 நடவு இயந்திரங்கள் 5 அறுவடை இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு வங்கிக் கடன் பெற அரசு உத்தரவாதம் (Govt. Guarantee) வழங்கும். கூட்டுறவு அமைப்பின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் முதலீடாக 50 ஆயிரம் ரூபாய் செலுத்துவர். அத்தொகையிலிருந்து வங்கிக்கு முன்தொகை செலுத்தப்படும்.

இந்தக் கூட்டுறவு அமைப்புகள், அந்தந்தப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் – கட்டண அடிப்படையில் – உழவு, நடவு, அறுவடை ஆகிய பணிகளைச் செய்து கொடுக்கும். இந்தத் திட்டத்தின் மூலம் குறைந்தது 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மாநிலம் முழுவதிலும் 500 க்கும் குறையாத வேளாண் தொழில்நுட்பக் கூட்டுறவு அமைப்புகள் உருவாக்கப்படும்.

77. உழவர் சந்தைத் திட்டம் உயிரூட்டப்பட்டு, மேலும் பல நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும். நகர்ப்புற நுகர்வோர் நியாயமான விலையில் பொருள்களைப் பெறவும், விவசாயிகள் போதுமான இலாபத்தை ஈட்டிடவும் பயன்படும் வகையில், விவசாயப் பொருள்களை விற்பனை செய்ய நடமாடும் உழவர் சந்தைகளுக்கு (Mobile Marketing) அனுமதி வழங்கப்படும்.

78. தமிழகத்திற்கு ஆண்டுக்கு 1,05,000 டன் விதை நெல் தேவைப்படுகிறது. குறிப்பாக, குறுவை சாகுபடிக்கு ADT 43, ADT 36, ADT 16 மற்றும் CO(R) 50, CO(51) ஆகியவைகளும், சம்பாசாகுபடிக்கு CR 1009 (சாவித்திரி), BPT 5204, (ஆந்திராபொன்னி) ஆகியவைகளும், தாளடிக்கு ADT 38, ADT 39, ADT 46, CO 43 மற்றும் ADT 49, ADT 50 ஆகியவைகளும் பயிரிடப்படுகின்றன. இவற்றில் அறிமுகப்படுத்தப்பட்டு பத்தாண்டு காலத்திற்கு மேற்பட்ட விதைநெல் வகைகளுக்கு மானியம் வழங்கப்படுவதில்லை. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட CO (R) 50, CO (51), ADT 49, ADT 50 போன்றவைகளுக்கு மட்டுமே ஒரு கிலோ விதை நெல்லுக்கு 10 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயத்திற்குத் தேவையான மொத்த விதைநெல்லில், அரசு 17 சதவிகிதம் மட்டுமே வழங்குகிறது. அனைத்து ரக விதை நெல் வகைகளும், அவற்றின் காலவரையறையைக் கணக்கில் கொள்ளாமல், முழு மானியத்தோடு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

## ஈரோட்டில் மஞ்சள் ஆராய்ச்சி நிலையம்

79. தமிழகத்தில் மஞ்சள் விளைச்சலின் தலைநகராகத் திகழும் ஈரோட்டில் நவீன மஞ்சள் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும்.

80. ஈரோடு மாவட்டத்தில் அரசு வேளாண் கருவிகள் உற்பத்தித் தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

## தூத்துக்குடி, வேலூர், கரூர், தருமபுரி மாவட்டங்களில் பேரீச்சை வளர்க்க சிறப்பு நிதியுதவி

81. தூத்துக்குடி, வேலூர், கரூர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பேரீச்சை வளர்வதற்கு உரிய மண்வளம் இருப்பது தெரிய வந்துள்ள நிலையில், இரும்புச்சத்துச் செறிவுள்ள பேரீச்சை மரங்களை இம்மாவட்டங்களில் வளர்ப்பதற்கும், பேரீச்சை சார்ந்த தொழில்களை உருவாக்கவும் சிறப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பேரீச்சை வளர்க்க முன் வருவோருக்கு அரசு மானியத்துடன் கூடிய சிறப்பு நிதி உதவி வழங்கப்படும்.

## மலைப்பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகளுக்குத் தடை

82. தமிழக மலைப் பகுதிகளில் பெரிய அளவில் நிலங்கள் வாங்கிப் பணப்பயிர் விளைவிப்பதற்கென மலைப்பகுதிகளில் ஆழ்குழாய்க்கிணறுகள் அமைத்து நிலத்தடி நீரினை முழுவதுமாக வெளியேற்றிவிடும் சூழ்நிலை தற்போது உள்ளது. இதனால் மழைக் காலங்களில் நீரைத்தேக்கி வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றும் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஓடைகள் வற்றி விடுவதால், வறட்சிக்கு வழி வகுப்பதோடு வன விலங்குகள் நீர் தேடி, காடுகளை விட்டு வெளியேறி மக்கள் வாழும் சமவெளிக்குச் செல்ல நேரிடும். இதனால் மனித – விலங்கு மோதல் அதிகரிக்கும்.

வேளாண் வயல்களில் வளரும் பயிர்களைத் தாக்குகின்ற பூச்சிகள் குறித்தும், அதனால் ஏற்படும் மோசமான விளைவுகள் குறித்தும் முன்கூட்டியே அறிந்து அந்த நோய்களைத் தடுக்கின்ற வகையில் ஆலோசனைகளைப் பெறுவதற்கு வசதியாக ஒவ்வொரு வட்டம் அளவிலும் ஒரு வேளாண் நோய் தடுப்பு நிலையம் (AGRO CLINIC) அமையும்.

விவசாயிகள் அவர்களின் வயல்களின் மண் தரம், நீர் ஆதாரம் மற்றும் விதைகளின் தரம் பற்றிய முழு விவரங்களைத் தெரிந்துகொள்ள வேளாண் பொறியியல் வல்லுநர்களை எளிதில் சந்தித்துக் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெறலாம்.

## நீர் மேலாண்மை

## காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டம்

83. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்படும் என அறிவித்து, முதற்கட்டமாக 5–2–2009 அன்று ரூபாய் 189 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கரூர் மாவட்டம் மாயனூர் அருகே கட்டளை கிராமத்தில் காவிரியில் கதவணை கட்டிட 9–2–2009 அன்று அடிக்கல் நாட்டி திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார். 2011 ல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு பத்தாண்டுகளாக இத்திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, இப்போது சட்டமன்றத் தேர்தல் வந்துவிட்டது என்பதற்காக தாம் புதிதாகக் கொண்டுவந்த திட்டம் போல அறிவித்து அடிக்கல் நாட்டி ஒரு நாடகத்தை நடத்தியுள்ளது. ஆனால், அவர்கள்

இத்திட்டத்தை நிறைவேற்றப் போவதில்லை. கலைஞர் அவர்கள் அன்று தொடங்கிய இந்தக் காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டத்தை அமையவிருக்கும் தி.மு.க. அரசு விரைந்து நிறைவேற்றிப் பாசன வசதியும் குடிநீரும் கிடைத்து வறண்ட பகுதிகள் பயன்பெறச் செய்யும்.

## தாமிரபரணி – கருமேனி – நம்பியாறு இணைப்புத் திட்டம்

இதே போல, தாமிரபாணி – கருமேனி – நம்பியாறு இணைப்புத் திட்டம் 369 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என 2008 ஆம் ஆண்டில் அறிவித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 21–2–2009 அன்று அடிக்கல் நாட்டி திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார்கள். நான்கு கட்டங்கள் கொண்ட இத்திட்டப் பணிகளில் இரண்டு கட்டங்கள் முடிவடைந்து பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்த வேளையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜெயலலிதாவினால் திட்டம் கிடப்பில் போடப்பட்டது. தற்போது, தேர்தல் நேரம் என்பதால் அ.தி.மு.க அரசின் திட்டம் போல இத்திட்டத்தையும் புதிதாக அறிவித்துள்ளது. ஆயினும், இத்திட்டத்தை கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமையவிருக்கும் கழக அரசு முன்னுரிமை அளித்து நிறைவேற்றி நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளை வளப்படுத்தும்.

## நெல்லை, தூத்துக்குடி, விருதுநகரில் 40,000 ஏக்கர் பயனடைய கன்னிகா மதகுக் கால்வாய் சீரமைக்கப்படும்

84. தமிழ்நாடு – கேரள எல்லையில் அமைக்கப்பட்டுள்ள செண்பகவல்லி அணையிலிருந்து தமிழகத்துக்கு நீர் பகிர்ந்திட அமைக்கப்பட்ட கன்னிகா மதகுக் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டதன் விளைவாக தமிழகத்திற்கு வரவேண்டிய தண்ணீர் வரத்து பல்லாண்டுகளாக நின்று விட்டது. இந்த மதகு சீர்செய்யப்பட்டால் நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் உள்ள 40,000 ஏக்கர் நிலங்கள் வளம் பெறும். கடந்த 30 ஆண்டு காலமாக இந்த மாவட்ட விவசாயிகள் இந்தப் பிரச்சனைக்காகப் போராடி வருகிறார்கள். கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி கன்னிகா மதகினைச் சீரமைக்கும் பணி முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்படும்.

## புதிய நீர்வள ஆதாரங்கள் அமைச்சகம்

85. கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதம், வறட்சித் துயர் போன்ற இயற்கைப் பேரிடர் முரண்பாட்டு நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு உரிய திட்டங்களைச் செயல்படுவதற்கும், தமிழகத்திற்குக் கிடைக்கும் நீரை முறைப்படுத்தித் தொடர்ச்சியாக வேளாண்மைக்குப் பயன்படும் வகையில் சேமித்து வைப்பதற்கும், தற்போது பொதுப்பணித் துறையோடு இணைந்திருக்கும் நீர்ப் பாசனத்துறைக்கெனத் தனியாக ஒரு அமைச்சகம் உருவாக்கப்படும்.

86. தமிழகத்தில் உள்ள நீர் நிலைகள், நீரோடைகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றைச் சீரமைக்கவும், ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும், அகற்றவும் மற்ற மாநிலங்களிலிருந்து, தமிழகத்திற்குக் கிடைக்கக் கூடிய நீரின் அளவை உறுதி செய்யவும் நீர் மேலாண்மை ஆணையம் (Water Management Authority) ஒன்றினை அமைப்பதற்குச் சட்டம் இயற்றப்படும். இந்த ஆணையத்தில் வானிலை ஆய்வறிஞர்கள், நீரப்பாசனத்துறைப் பொறியாளர்கள் உள்ளிட்டவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள்.

## காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆற்றின் கரைகள் மேம்பாடு

87. திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் காவிரி வைகை மற்றும் தாமிரபரணி ஆற்றுக் கரைகள், சாலைகள் ஆகியவற்றில் பூங்காக்கள் ஏற்படுத்தி அழகுபடுத்துவதற்காகத் தனித்தனியான ஆணைய ங்கள் உருவாக்கப்படும்.

## தரைப்பாலங்கள் உயர்மட்ட பாலங்களாக மாற்றப்படும்

88. வெள்ளக் காலங்களில் கிராமங்கள் துண்டிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்படாமல் தடுப்பதற்காக மாநிலம் முழுவதிலும் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் இதர நீர்நிலைகள் ஆகியவைகளில் கட்டப்பட்ட தரைப் பாலங்கள் உயர்மட்டப் பாலங்களாக மாற்றிக் கட்டப்படும்.

## முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பில் ரூபாய் 10,000 கோடியில் ஏரி, குளங்கள் பாதுகாப்புச் சிறப்புத் திட்டம்

89. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டமாகத் தமிழகத்தில் உள்ள பாரம்பரியமான நீர்நிலைகளாகிய மதுராந்தகம் ஏரி (காஞ்சிபுரம்), தாமல் ஏரி (காஞ்சிபுரம்), சிங்காநல்லூர் ஏரி (கோயமுத்தூர்), உக்கடம் பெரிய ஏரி (கோயமுத்தூர்), வீராணம் ஏரி (கடலூர்), காவேரிப் பாக்கம் (வேலூர்), கள்ளபெரம்பூர் ஏரி (தஞ்சை), வடுவூர் ஏரி (திருவாரூர்), கலுமங்கலம் ஏரி (எடகீழையூர்), செல்லிக்குறிச்சி ஏரி (பட்டுக்கோட்டை), மாரியம்மன் கோயில்ஏரி (தஞ்சை), அரியலூர் மாவட்டத்திலுள்ள பழங்காநத்தம் ஏரி, கண்டிற தீர்த்தம் ஏரி, சுக்கிரன் ஏரி, பு.ஆதனூர் பெரிய ஏரி, புள்ளம்பாடி கால்வாய், சித்தேரி, பொன்னாற்றுத் தலைப்பு, வடபுறம் செட்டி ஏரி, ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய் (இராமநாதபுரம்), இராமநாதபுரம் பெரிய கண்மாய், பேரூர் பெரிய குளம் (கன்னியாகுமரி), சுசீந்திரம் குளம் (கன்னியாகுமரி), புத்தேரி பெரிய குளம் (கன்னியாகுமரி), விஜயநாராயணத்தில் உள்ள பெரிய குளம், மானூர் பெரிய குளம் (திருநெல்வேலி), களரி பெரிய கண்மாய் (இராமநாதபுரம்), தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி நதியில் உள்ள வடகால், தென்கால், மருது மேலக்கால், கீழக்கால் வாய்க்காலில் உள்ள 53 குளங்கள், சாலைக்கிராமம் (சிவகங்கை), திருப்பத்தூர் பெரிய கண்மாய் (சிவகங்கை), கவினாடு கண்மாய் (புதுக்கோட்டை), மாரப்பூர் பெரிய கண்மாய் (புதுக்கோட்டை), வாகவாசல் பெரிய கண்மாய் (புதுக்கோட்டை), நிலையூர் – கூத்தியார் குண்டு (திருப்பரங்குன்றம்), திருவில்லிபுத்தூர் பெரியகண்மாய் (விருதுநகர்), மதுரை குன்னத்தூர் கண்மாய், மாடக்குளம் கண்மாய், செல்லூர் கண்மாய், பூந்துறை ஏரி (ஈரோடு) முதலியவற்றில் தூர் வாரி, வீணாகக் கடலில் கலக்கும் உபரிநீரை, அந்தந்த நீர் நிலைகளில் தேக்கிப் பயன்படுத்த வசதியாகவும், வறட்சியான பகுதிகளுக்கு நீர் எடுத்துச் செல்வதற்கும், புதிதாகக் கால்வாய்கள் அமைப்பதற்கும், தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பாசன வசதியையும், குடிநீர் வசதியையும் மேம்படுத்துவதற்கும் தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன், மாநிலம் தழுவிய நீர் மேலாண்மைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென 10 ஆயிரம் கோடி ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பில் (Chief Minister`s Monitorable Target) பணிகள் மேற்கொள்ளப்படும்.

## ரூபாய் 2000 கோடி செலவில் 200 தடுப்பணைகள்

**90.** திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் பாயும் பாமினி, கோரையாறு, வெண்ணாறு, காவிரி, கொள்ளிடம், குடமுருட்டி ஆகிய ஆறுகளில் தேவைப்படும் இடங்களிலும், தஞ்சை மாவட்டம் மகாராஜபுரம் காட்டாற்றில் பாச்சூர், பொய்யுண்டார் கோட்டை, வெட்டிக்காடு, சில்லத்தூர், வடக்கி கோட்டை ஆகிய இடங்களிலும் பெரம்பலூர் மாவட்டம் மருதையாற்றில் திருமானூர், தா.பழூர், கொள்ளிடம் குருவாடி, புளியம்கோம்பை அருகில் காட்டாறு, குண்டேரி, புஞ்சைபுகலூர், நன்னியூர், குளித்தலை ஆகிய இடங்களிலும், கரூர் மாவட்டம் காவிரியில் நெரூரிலும், உத்திரமேரூர் வட்டம் கடம்பர்கோவில், செங்கற்பட்டு வட்டம் பாலூர், மதுராந்தகம் வட்டம் பூதூர், வாலாஜாபாத் வட்டம் அவலூர், பழையசீவரம் செய்யாறு, உத்திரமேரூர் வட்டம் திருமுக்கூடல், திருக்கழுக்குன்றம் வட்டம் வாயலூர் ஆகிய இடங்களில் பாலாற்றிலும், கிருஷ்ணகிரி மாவட்டம் தென் பெண்ணையாற்றில் எண்ணேகொள் அருகே வாணிஒட்டு, சென்றாயன் மலைக்குக் கிழக்கே உள்ள பன்னீர் குட்டை ஆகிய இடங்களிலும், தொட்டியம் ஒன்றியம் காட்டுபுத்தூரில் காவிரியிலும், தென் பெண்ணையாற்றின் குறுக்கே ஒரத்தூரிலும், பாலாற்றின் குறுக்கே காவனூர் கந்தனேரி இடையிலும், சோழவரம் ஒன்றியத்தில் பு.எ.வெ.பாளையம் அருகே குசஸ்தலை ஆற்றிலும், அறந்தாங்கி வட்டம் மறமடக்கி அருகில் மோக்குளம் என்ற ஊரில் வில்லுன்னி ஆற்றிலும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியில் அசுமாநதி, வைகை ஆற்றின் குறுக்கே சோழவந்தான் பகுதியிலும், விழுப்புரம் மாவட்டம் சங்கராபரணி ஆற்றிலும் (ரெட்டிக்குப்பம் பெரம்பூர் எல்லைக்குக் குறுக்கே), கொள்ளிடம் கடலூர் மாவட்டம் கான்சாகிப் வாய்க்கால் சந்திப்பிலும், காவிரியின் குறுக்கே குளித்தலையிலும், செஞ்சிசங்கராபரணி ஆற்றின் குறுக்கேயும், குழித்துறையாறு, வள்ளியாறு, பழையாறு ஆகிய ஆற்றின் குறுக்கேயும் தடுப்பணைகள் அமைத்து விவசாயிகள் பயன்பெற வழிவகை செய்யப்படும். முதற்கட்டமாக, **200**க்கும் குறையாத தடுப்பணைகள் கட்டப்படுவதற்கு உரிய மதிப்பீடு செய்யப்பட்டு, **2000** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ரூபாய்.3000 கோடியில் கொள்ளிடத்தில் கல்லணைக்கு கிழக்கே விசுவந்தட்டை,

விளாங்குடி, வீரமாங்குடி, குடிதாங்கி, வாழ்க்கை ஆகிய இடங்களில் உயர்மட்ட மேம்பாலத்துடன் கூடிய 5 கதவணைகள் கட்டப்படும்.

91. தமிழகப் புவியியல் அமைப்பின் தற்போதைய நில மட்டங்களைப் புதிதாக அளவிட்டு, (Contour Level) நீர்மட்டத்தைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் நீர்நிலைகளின் ஓடுபாதைகள் சரியாகக் கணிக்கப்பட்டு நீர்நிலைகளின் தரைமட்டங்களும், அவற்றில் ஓடும் நீரின் மேல்மட்டமும் மேலாண்மை செய்யப்படுவதற்கு அரசு முழு முயற்சி மேற்கொள்ளும்.

92. சென்னையில் புயல் வெள்ளக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தவும், மழைநீர்க் கால்வாய்கள் போன்ற அமைப்புகளை உருவாக்கி, சென்னையை வெள்ளத்திலிருந்து காப்பாற்றும் வகையிலும் நகரமைப்பு வல்லுநர்கள், சுற்றுச் சூழல் அறிஞர்கள் மற்றும் நீர் நிர்வாகத் துறை வல்லுநர்கள் அடங்கிய சென்னைப் பெருநகர் வெள்ளத் தடுப்பு மேலாண்மைக் குழு (Chennai Metro Flood Management Committee) ஒன்று அமைக்கப்பட்டு, அவர்களுடைய ஆலோசனையின் பேரில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## சென்னை நகரின் ஆறுகள் பாதுகாப்புக்கு ரூபாய் 5000 கோடி ஒதுக்கீடு

93. சென்னையின் மையப் பகுதியில் கூவம், அடையாறு ஆகிய இரண்டு ஆறுகளும், திருவள்ளூர் மாவட்டத்தில் குசஸ்தலை ஆறும் ஓடுகின்றன. சென்னை மாநகராட்சியின் ஏழு நீர் மண்டலங்களில் பெரும்பாலான நீரைக் கடலுக்குக் கொண்டு செல்லும் பணியை அடையாறு செய்கிறது. இந்த ஆற்றில் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீரைத் திறப்பதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. ஆனால் பெரிய ஏரியான செம்பரம்பாக்கம் ஏரி நிரம்புவதற்கு உதவுகின்ற குன்றத்தூர் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டத்தில் உள்ள 50க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பி, உபரி நீர் அடையாறு ஆற்றில் பல்வேறு கிளைக் கால்வாய்கள் மூலம் இணைகின்றன. இந்த வகையில், திருப்பெரும்புதூர் வட்டத்தில் உள்ள 96 ஏரிகளில் 50 ஏரிகளின் உபரி நீர் அடையாறு வழியாகக் கடலுக்குச் செல்கின்றது. அடையாற்றில் உபரி நீர் கடலுக்குச் செல்லும்போது ஏற்படுகின்ற வெள்ளச் சேதம் சென்னையின் மையப் பகுதியையும், தென் சென்னைப் பகுதியையும் மிகவும் பாதிப்புக்குள்ளாக்குகிறது.

அதைப் போலவே, ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் உற்பத்தியாகின்ற குசஸ்தலை ஆறு, திருவள்ளூர் மாவட்டம் வழியாக 120 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து மீஞ்சூரை அடுத்த நாப்பாளையம் அருகே வங்கக் கடலில் கலக்கிறது. ஆகவே, மழை நீர் மற்றும் உபரி நீர் வெள்ளத்தால் ஏற்படுகின்ற பேரழிவிலிருந்து சென்னை மாநகரைக் காப்பாற்றுவதற்குச் செம்பரம்பாக்கம், போரூர், திருநீர்மலை, எருமையூர், சோமங்கலம், நந்தம்பாக்கம், நடுவீரப்பட்டு, நல்லூர், மணிமங்கலம், பிள்ளைப்பாக்கம், திருப்பெரும்புதூர், மலைப்பட்டு, மண்ணிவாக்கம், வண்டலூர், முடிச்சூர், பெருங்களத்தூர், இரும்புலியூர், ஊரப்பாக்கம், ஆதனூர், கூடுவாஞ்சேரி, நந்திவரம், படப்பை, நாட்டரசன் பட்டு, காட்டாங்கொளத்தூர், ஆதனஞ்சேரி, ஒரத்தூர், சாலமங்கலம், வஞ்சுவாஞ்சேரி, வல்லம், மாகாண்யம், அழகூர், வைப்பூர், சரப்பணஞ்சேரி, வடக்குப்பட்டு, சென்னாங்குப்பம், போந்தூர், கண்ணந்தாங்கல், பால்நெல்லூர், மாம்பாக்கம், வெங்காடு கொளத்தூர், பூந்தண்டலம், பழந்தண்டலம், பழவேற்காடு, ரெட்டேரி, வேளச்சேரி, சோழவரம் ஆகிய ஏரிகளையும் பாப்பான் கால்வாய், மண்ணிவாக்கம் கால்வாய், மணப்பாக்கம் கால்வாய், ராமாபுரம் கால்வாய், திருமுடிவாக்கம் இணைப்புக் கால்வாய், ஊரப்பாக்கம் இணைப்புக் கால்வாய், வீராங்கால் ஓடை, ஒக்கியம் வடிகால், ஒரத்தூர் ஓடை கால்வாய்களையும், சென்னை நகரைச் சுற்றியுள்ள பூண்டி, புழல் ஆகிய பெரும் நீர் நிலைகளையும் தூர்வாருவதற்காகவும் மேலும் பக்கிங்காம் கால்வாய், மாம்பலம் கால்வாய், ஒட்டேரி நல்லா, கேப்டன் காட்டன் கால்வாய், ஆகிய ஆறுகளையும் ஆழப்படுத்தி தூய்மைப்படுத்திடவும், குசஸ்தலை ஆறு, கூவம், அடையாறு ஆகிய நதிகளை இணைக்கும் வகையில், வடக்கு தெற்காக ஓடும் பக்கிங்காம் கால்வாய் கூடுதல் நீரைக் கடத்திச் செல்வதற்கேற்ற வகையில் சீரமைக்கப்படுவதற்காகவும் வெள்ளத்தினால் ஏற்படும் சேதத்தைத் தடுத்திடும் நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் முதற்கட்டமாக 5 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்த வழிவகை காணப்படும்.

94. கடலில் கலக்கும் தமிழக ஆறுகளின் முகத்துவாரங்களில் அடிக்கடி ஏற்படும் கடல் அலையின் திசை மாறுபாடுகளாலும், வேகத்தினாலும் ஏற்படும் விளைவுகளால் மழைக்காலத்தில் ஆற்றில் கரைபுரண்டு பெருக்கெடுத்துவரும் வெள்ளநீர் கடலுக்குள் செல்ல இயலாமல் நகருக்குள் புகுந்து பெரும் சேதம் விளைவிப்பதைத் தடுக்கும் வகையில் முகத்துவாரங்கள் மணல் திட்டுகளால் அடைபடுவதைத்

தடுத்திடவும், பெருமழைக் காலங்களில் ஏரிகளிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவை அவ்வப்போது கட்டுப்படுத்திடவும், கண்காணிக்கவும் மழைக் காலச் சிறப்புக் கட்டுப்பாட்டு மையங்கள் **24** மணிநேரமும் செயல்படும் வகையில் அமைக்கப்படும்.

**95.** தமிழகத்தில் அ.தி.மு.க அரசு வெளிநாட்டுக் குளிர்பான நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்காகவும், அரசே குடிநீரைச் சந்தை விலையில் விற்பனை செய்வதற்கு வசதியாகவும், **2013** ஆம் ஆண்டில் தமிழக நிலத்தடி நீர் பாதுகாப்புச் சட்டத்தையே ரத்து செய்துவிட்டது. இதனால், நிலத்தடி நீரை முறையாக நிர்வகிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் சட்டம் புதிதாக நிறைவேற்றப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**96.** தஞ்சை மாவட்டத்தில் கல்லணைக் கால்வாய்ப் பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, சேதுபாவாசத்திரம் மற்றும் கடைமடைப் பகுதிகளுக்கு நீர் முறையாகக் கிடைக்கும் வகையில் நீரோடை வழித்தடங்கள் தூர்வாரப்படும். அது போலவே, கட்டளை வாய்க்கால், உய்யக் கொண்டான் வாய்க்கால் பாசனப் பகுதிகளான செங்கிப்பட்டி, பூதலூர், வல்லம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் நீர்வரத்தை உறுதி செய்யும் வகையில் நீரோடை வழித் தடங்கள் உருவாக்கப்படும்.

**97.** தி.மு.கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாலாறு – தாமிரபரணி ஆற்றுப் படுகைகள் சீரமைப்புத் திட்டத்தைத் தொடர்ந்து மற்ற ஆற்றுப் படுகைகளுக்கும் விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**98.** இந்திய நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றுமாறு மத்திய அரசை வலியுறுத்துவதோடு, முதற்கட்டமாக, தென்னக நதிகளை இணைக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயல்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**99.** கேரள அரசோடு **1969**ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டத்தின் கீழ் இடைமலையாறு அணையினைக் கேரள அரசு கட்டி முடித்த நிலையில், ஆனைமலையாற்றில் அணை கட்ட பேச்சு வார்த்தை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

100. மேல் நீராற்றிலிருந்து 15 கி.மீ தூரத்திற்குச் சுரங்க நீர்ப்பாதை அமைத்து அதன் மூலம் நல்லாறு – திருமூர்த்தி அணைக்கு நீர் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

101. பெரியார் – வைகை பிரதானப் பாசனக் கால்வாயிலிருந்து சாத்தையாறு அணைக்குப் புதிய கால்வாய் அமைத்துச் சாத்தையாறு அணையினுடைய ஆயக்கட்டுப் பகுதியை அதிகரிப்பதோடு, விவசாயத்திற்குப் போதுமான தண்ணீர் விநியோகம் செய்வது உறுதி செய்யப்படும்.

102. பேச்சிப்பாறை அணை தூர்வாரப்பட்டுச் சீரமைக்கப்படும்.

103. நொய்யல் ஆறு சீர்படுத்தப்பட்டு, பவானி – நொய்யலாறு –அமராவதியாறு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

104. வரதமா நதி, சண்முகா நதி, அமராவதி ஆகிய ஆறுகளில் உபரி நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி பகுதிகளுக்குக் கால்வாய் அமைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும்.

105. விருதுநகர் மாவட்டத்தின் வறட்சியான கிழக்குப் பகுதிகள் பாசன வசதி பெற தெற்காறு – குண்டாறு இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்படும்.

106. சேலம் மேச்சேரி நீரேற்றுத் திட்டம் நிறைவேற்றப்படும்.

107. கொளத்தூர் தோணிமடுவுத் திட்டம் – நான்கு மலைகளிலிருந்து வரக்கூடிய நீரைத் தடுப்பணை கட்டித் தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

108. சேலம் சாணார்பட்டி – மூலக்காடு சாம்பல் நீரேற்றுத் திட்டம் நிறைவேற்றப்படும்.

109. பவானி ஆற்றில் வெள்ளப் பெருக்கு காலங்களில் கிடைக்கும் உபரிநீரைக் கொண்டு கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள குளங்களில் நீர் நிரப்பி, அந்தப் பகுதிகளில் குடிநீர் மற்றும் பாசனத் தேவைகளுக்குப் பயன்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட அத்திக்கடவு – அவினாசித் திட்டம் போர்க்கால அடிப்படையில் விரைந்து நிறைவேற்றப்படுமென 2016 தேர்தல் அறிக்கையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. பத்தாண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் இத்திட்டத்தை நிறைவேற்றாமல் விட்டுவிட்டுத், தேர்தல் ஆதாயத்திற்காகத் தற்போது இத்திட்டத்தைத் தொடங்கியுள்ளது. கலைஞர்

உருவாக்கிய இந்தத் திட்டத்தை தி.மு.க. அரசு முனைப்போடு செயல்படுத்தி விரைந்து நிறைவேற்றும்.

110. கிருஷ்ணகிரியில் உள்ள படேதால் ஏரியிலிருந்து வெண்ணம்பள்ளி, அச்சமங்கலம், சிகரளபள்ளி, கப்பல்வாடி, கோடமண்டபட்டிகால்வாயையும் சுண்டம்பட்டி, ஒரப்பம், பாலினயனப்பள்ளி, ராசிப்பள்ளி, கெட்டூர், செந்தாரப்பள்ளி, மோடிக்குப்பம், நக்கல்பட்டி, புதுார், கரீம் சாயபுஏரி ஆகிய ஏரிகளையும் இணைக்கும் வகையில் கால்வாய்கள் வெட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## கடலூரில் வெள்ளப் பாதுகாப்புக்கு அரிவாள் மூக்கு வடிகால் திட்டம்.

111. கடலூர் துறைமுக முகத்துவாரம் முதல் புவனகிரி அருகில் வெள்ளாற்று வடிகால் முகத்துவாரம் வரையில் உள்ள 40 கி.மீ தூரத்திற்குக் கீழ் பரவனாற்றிலிருந்து நேரடி தனி வடிகால் இல்லாத காரணத்தால் புயல், வெள்ள காலங்களில் ஏற்படும் வெள்ளச் சேதத்தால் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகிறது. இப்பாதிப்பிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காகக் கீழ்பரவனாற்றில் பூண்டியாங் குப்பத்திற்கும் ஆலப்பாக்கத்திற்கும் இடையே கடலில் நேரடியாகக் கலக்க ஏதுவாக வடிகால் ஒன்றினை ஏற்படுத்தி, கடல் முகத்துவாரத்தில் மதகுகள் அமைத்து வெள்ளக் காலங்களில் திறக்கவும், மற்ற நாட்களில் கடல் நீர் உட்புகாமல் தடுக்கவும், அப்பகுதி மக்களின் நீண்ட காலக்கோரிக்கையான “அரிவாள்மூக்கு வடிகால் திட்டம்” போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றப்படும்.

## சேது சமுத்திரத் திட்டம்

112. தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வேலைவாய்ப்புகளைப் பெருமளவு உருவாக்கக் கூடிய தமிழக மக்களின் 150 ஆண்டு காலக் கனவுத் திட்டம் – பெருந்தலைவர் காமராசரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் நீண்ட காலமாகப் போராடி வந்த மாபெரும் திட்டம் சேதுசமுத்திரத் திட்டம். இத்திட்டம், ஏறத்தாழ 2500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.7.2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கணிசமான பணிகள் முடிவடைந்த நிலையில் பிற்போக்குச் சக்திகளால் முடக்கப்பட்டுள்ளது. தடைகளை

உடைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதையில் இத்திட்டம் முழுமையாக நிறைவேறவும், தென் தமிழகம் பொருளாதார வளர்ச்சி பெறவும் தி.மு.கழக அரசு தொடர்ந்து பாடுபடும்.

## கச்சத் தீவு

113. கச்சத் தீவின் உரிமையை மீட்டெடுக்க வேண்டும் என்று 1974 ஆம் ஆண்டிலிருந்து தி.மு.கழகம் இந்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. 1974 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்தில் தமிழக மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மீன் பிடிப்பதற்கும், மீன் வலைகள் உலர்த்துவதற்கும், தேவாலயங்களில் வழிபாடு நடத்துவதற்கும் இருந்த உரிமைகள் தொடர்பான பிரிவுகள் 1976 ஆம் ஆண்டு அவசரநிலை காலத்தில் பறிக்கப்பட்டன. இதன் காரணமாக அடிக்கடி கச்சத்தீவு அருகே தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்படுவதும், சிறைப் பிடிக்கப்படுவதும் தொடர் நிகழ்வுகளாக அதிகரித்து வருவதால் தமிழக மீனவர்களைப் பாதுகாத்திட, கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## மீனவர் நலன்

## மீனவர் சமுதாயம் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படும்

114. மீனவ சமுதாயத்தைக் கடல்சார் பழங்குடியின மக்கள் என்று பழங்குடியினர் பட்டியலில் (ST) சேர்ப்பதற்கும், பழங்குடியினருக்குள்ள அனைத்துச் சலுகைகளையும் மீனவர்கள் பெறுவதற்கும் தி.மு.கழகம் முயற்சி செய்யும்.

115. தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தொடர்ந்து தாக்கப்படுவதையும், சிறைப்பிடிக்கப்படுவதையும், கொல்லப்படுவதையும் குறித்து தி.மு.கழகம் கடுமையான முறையில் தனது கண்டனத்தைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு இலங்கை அரசு இதுவரை உரிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. மத்திய அரசு உடனடியாக இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றினைக் காணவேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்துவதுடன், இரு நாட்டுக் கடற்கரைப் பகுதிகளிலும் சிக்கல் தீர்க்கும் மையங்களை (Crisis Management Centre) உருவாக்கிட மத்திய அரசைத் தி.மு.கழகம் வற்புறுத்தும்.

## மீனவர்களுக்கு 2 லட்சம் புது வீடுகள்

116. சென்னை மாநகரிலும், கடலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது மக்களைக் காப்பாற்ற முன்வந்த மீனவர்கள் சமுதாயம் நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழகத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற புயல்வெள்ளப் பாதிப்பில் சிக்கிக் கொள்ளும் நிலை உருவாகின்றது. இந்த நிலையில் இருந்து மீனவமக்களைப் பாதுகாக்க முந்தைய தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட சிங்காரவேலர் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தமிழகக் கடற்கரையோரப் பகுதிகளான சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு 2 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும். மேலும், ஏற்கனவே குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டு 25 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட வீடுகள் சிதிலமடைந்துள்ளதால், அங்கு வசிக்கும் மீனவர்கள் நலன் கருதி புதிய குடியிருப்புகள், மீனவர் வீட்டு வசதி வாரியத்தால் கட்டித் தரப்படும்.

117. இந்தியாவில் உள்ள அனைத்துக் கடலோர, உள்நாட்டு மீனவர்களின் நலன்களைப் பாதுகாத்திட தேசிய மீனவர் நல ஆணையம் (National Commission for the Welfare of Fishermen) அமைத்திட வேண்டும் என்று தொடர்ந்து தி.மு.கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

118. ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கையை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட மீனாகுமாரி குழுவின் பரிந்துரைகள் இந்திய மீனவர்களின் நலன்களுக்கு எதிராக அமைந்திருப்பதால், அந்த அறிக்கையை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

119. நடுக்கடலில் உயிரிழக்கும் மீனவர்களின் குடும்பங்கள், இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு ஏழாண்டுகள் காத்திருக்கும் அவலநிலையைப் போக்கி, மீனவர் சங்கங்களின் பிரமாண வாக்குமூலத்தின் அடிப்படையில் இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட ஆவன செய்யப்படும்.

120. மீனவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக மீன்வளத்துறை அமைச்சர் - மாவட்ட ஆட்சித் தலைவர் பங்கேற்புடன் தலைமையில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குறை தீர்ப்புக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

121. உயர் கல்வியைப் பரவலாக்கும் நோக்கிலும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கிலும், புதிய மீன்வளக் கல்லூரிகள், கடல்சார் கல்லூரிகள் உருவாக்கப்படும்.

122. மீனவர் பகுதிகளில் புதிய பள்ளிக் கூடங்கள் தொடங்கப்படும். மேலும், ஏற்கனவே உள்ள மணப்பாடு, ஆலந்தலை, கல்லாமொழி போன்ற மீனவப் பகுதிகளில் தொடங்கப்பட்ட ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படும்.

## மழைக்கால மற்றும் மீன்பிடித் தடைக்கால நிவாரணம் ரூபாய் 8000 ஆக உயர்த்தப்படும்

123. மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையாகத் தற்போது வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் என்பது 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், மழைக்கால நிவாரணமாக மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 5 ஆயிரம் என்பது 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

124. விசைப் படகிற்கு வழங்கப்படும் மானிய விலை டீசல் 1800 லிட்டர் என்பது 2000 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும். இதைப் போல் கட்டுமரம், நாட்டுப் படகு, ஃபைபர் படகு இவற்றிற்குத் தற்போது வழங்கப்படும் எரிபொருள் அளவு 300 லிட்டர் என்பது 400 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும்.

125. மீனவர்களுக்குத் தேவையான படகு, வலை, கட்டுமரம், தேடுவிளக்கு (Search Light) ஆகியன மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வாங்கிட, மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும். உள்நாட்டு மீனவர்கள் பரிசில் மற்றும் வலைகள் வாங்குவதற்காக 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

126. மீன்வளத்துறை சார்பில் தேவைப்படும் இடங்களில் படகுகளை மீட்டெடுக்கத் தேவையான டிராக்டர்களைக் குறைந்த வாடகையில் மீனவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

127. முந்தைய தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் FRP - IB கட்டுமரம் போன்ற படகுகளில் மீன் பிடிப்பவர்களுக்கு மானிய விலையில் முன்பு வழங்கப்பட்ட ஐஸ் பெட்டிகள் மீண்டும் வழங்கப்படும். அதேபோல், மீன் வியாபாரம் செய்யும் பெண்களுக்கும் ஐஸ் பெட்டிகள் வழங்கப்படும்.

128. படகுகளில் இஞ்சின்களைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 20 சதவிகித மானியம் உயர்த்தி வழங்கப்படும்.

129. கன்னியாகுமரி – திருநெல்வேலி – தூத்துக்குடி மாவட்டங்களின் கடல் அமைப்பின் காரணமாக மீனவர்கள் பயன்படுத்திவரும் வெளிநாட்டு வெளிப்பொருத்தும் (OBM) இயந்திரங்கள் ஆண்டுக்கு 750 வீதம் இறக்குமதி செய்யப்பட்டு தேவையான பகுதிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

130. அனைத்து மீனவ கிராமங்களுக்கும் மீன் உலர்த்தும் தளம்(Fish Landing Site) அமைத்துத் தரப்படும்.

131. மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர் ஒருவரின் குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு 250 ரூபாய் வீதம் நிதி உதவி இரண்டு ஆண்டுகளுக்கு வழங்குவது போல், தோணியில்(பெரியபடகு) சென்று கடலில் காணாமல் போன மீனவர் குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

132. தேவைப்படுகின்ற கடற்கரையோர மீனவ கிராமங்களில் கடல் அரிப்பினைத் தடுக்கத் தூண்டில் வளைவுத் தடுப்புச் சுவர் அமைத்துத் தரப்படும்.

133. தமிழகத்தில் உள்ள கடலோர மாவட்டங்களில் மீன்பிடித் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மீன்பிடித் துறைமுகங்களும், குளிர்பதன சேமிப்புக் கிடங்குகளும் தேவையான பகுதிகளில் உருவாக்கப்படும்.

134. தமிழகத்திலுள்ள அனைத்து மீன்பிடித் துறைமுகங்களும் மறு சீரமைப்பு செய்யப்படும். காசிமேடு, அக்கரைப் பேட்டை, இராமேஸ்வரம் மற்றும் தொண்டியில் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் நவீன வசதிகளுடன் விரிவுபடுத்தப்படும்.

135. குளச்சலில் மீன்பிடிப் படகுத் தொழிற்சாலை தொடங்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

136. சுற்றுச்சூழல் மாற்றங்களால் ஏற்படும் புயல், சுனாமி போன்ற நிகழ்வுகளின்போது ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தகவல் தொடர்புகள் கிடைக்காமல், மீனவர்கள் கரை சேர முடியாமல், நடுக்கடலில் மாயமாகி மாள்கிறார்கள். திசை தெரியாமல், பிற மாநிலங்களின் கரைகளைச் சேர்ந்தாலும், அம்மாநிலத்தைச் சேர்ந்தவர்களால் விரட்டியடிக்கப்படும் தொல்லைகளுக்கும்

துன்பங்களுக்கும் ஆளாகிறார்கள். இத்தகைய தருணங்களில் தமிழக மீனவர்களைக் காப்பதற்காகத் தகவல்களை உடனுக்குடன் அவர்களுக்குத் தெரிவிக்க; அவர்களிடமிருந்து தகவல்கள் கரைக்குக் கிடைத்திடத் தக்கவகையில் தமிழகக் கரையோரங்களில் உயர்கோபுரங்கள் (Seamless Communications) அமைத்துத் தங்கு தடையற்ற தொலைத் தொடர்பு வசதிகளை உருவாக்கப்படும். அவற்றின் மூலம் தகவல்களை நெடுந்தொலைவில் பயணிக்கும், ஆழ்கடல் மீன் பிடி வணிகக் கப்பல்களுக்கும் (MERCHANT VESSELS), மத்திய பாதுகாப்பு அமைச்சக கப்பல்களுக்கும் (NAVY, COAST GUARD), மற்றும் துறைமுகக் கழகங்களின் (PORT TRUST) தொலைத் தொடர்பு மையத்திற்கும் உடனுக்குடன் தெரிவித்து மீனவர்களையும் படகுகளையும் காத்திட வழிவகுக்கப்படும்.

## நெசவாளர் நலன்

137. தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் காஞ்சிபுரத்தில் அறிவிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பட்டுப் பூங்கா மீண்டும் தொடங்கப்பட்டு, 25,000 நெசவாளர்கள் பயன் பெறத்தக்க வகையில் செயல்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

138. நெசவாளர்களுக்கென்று தனியாகக் கூட்டுறவு வங்கி அமைக்கப்படும். நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.

139. மக்களுக்கு அரசு வழங்குவதற்குத் தேவையான இலவச வேட்டி, சேலைகளை நெய்வதில் தமிழகக் கைத்தறி நெசவாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதுபோல், பள்ளிச் சீருடைகளுக்கான துணிகள் உற்பத்தி தமிழக விசைத்தறி நெசவாளர்களிடம் மட்டுமே ஒப்படைக்கப்படும்.

140. நெசவாளர்களுக்குத் தடையின்றி நூல் கிடைக்க அரசே கொள்முதல் நிலையங்கள் அமைத்து நெசவாளர் சங்கங்களுக்கு நூல் வழங்கப்படும்.

141. கைத்தறி நெசவாளர்களுக்குக் கூடுதல் பயன்கள் கிடைக்கும் வகையில் கைத்தறிக்கெனத் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் துணிவகைகளின் பட்டியல் மறுசீராய்வு செய்யப்படும்.

142. ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்குத் தனியாக ஜவுளி ஆணையம் அமைக்கப்படும்.

143. பட்டுநூல் முறுக்காலை அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும்.

144. தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகப் பட்டு / பருத்தி நூல் கொள்முதல் செய்யப்படும்போது தரப்படும் மானியத் தொகை 10 சதவிகிதம் என்பது 15 சதவிகிதமாக உயர்த்தித் தரப்படும்.

145. கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் இரண்டு மாதத்திற்கு 200 யூனிட் என்பது 300 யூனிட்டாக உயர்த்தி வழங்கப்படும்.

146. விசைத்தறிக்கு இரண்டு மாதத்திற்கு 750 யூனிட் ஆக உள்ள இலவச மின்சாரம் 1000 யூனிட் ஆக உயர்த்துவது குறித்துப் பரிசீலிக்கப்படும். இச்சலுகை விசைத்தறிப் பாய் நெசவுத் தொழிலுக்கும் அளிக்கப்படும். விசைத்தறித் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் அரசு முழுமையாக அளிக்கும்.

147. நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை 4 இலட்சம் ரூபாய் என உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டம் நகர்ப்புற நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

148. நெசவாளர்களுக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படும் கடனுக்கான வட்டி 12 சதவிகிதத்தில் இருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்படும்.

149. நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித்தொகை 1000 ரூபாய் என்பது 2000 ரூபாயாக உயர்த்தித் தரப்படும்.

150. அனைத்துக் கூட்டுறவு சங்கங்களுக்கும் அரசால் வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி மானியத் தொகை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## தொழிலாளர் நலன்

## அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள்

151. தமிழகத்தில் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கும் அமைப்புசாரா தொழிலாளர்கள் வாழ்வு மேம்படவும், அவர்களுடைய எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டும் 36 வகைத் தொழிலாளர்களுக்குத் தனித்தனி நலவாரியங்ளை அமைத்து அவர்களுக்கு

மருத்துவக் காப்பீடு, ஓய்வூதியம், கல்வி, திருமண உதவித்தொகை போன்ற சமூகப் பாதுகாப்பு உதவிகள் வழங்கப்பட்டன. அப்படி அமைக்கப்பட்ட நலவாரியங்கள் :

- தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியம்,
- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு ஆட்டோ ரிக்சா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுனர் நல வாரியம்,
- தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்.
- தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்.
- தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்,
- தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்,
- தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம்,
- சமையல் கலைஞர்கள் நல வாரியம்,
- தமிழ்நாடு கேபிள்டிவி தொழிலாளர்கள் நல வாரியம்,

- தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்,
- தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியம்,
- தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்,
- தமிழ்நாடு கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம்,
- தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்,
- தமிழ்நாடு அரவாணிகள்(திருநங்கையர்) நல வாரியம்,
- தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்,
- தமிழ்நாடு தூய்மைப்பணிபுரிவோர் நல வாரியம்,
- தமிழ்நாடு மீனவர் நல வாரியம்,
- தமிழ்நாடு உலமா மற்றும் பணியாளர் நல வாரியம்
- தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்,
- தமிழ்நாடு திரைப்படத் துறையினர் நல வாரியம்,
- தமிழ்நாடு ஆடு வளர்ப்போர் நல வாரியம்,
- தமிழ்நாடு கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு பாரம்பரிய மருத்துவர் நல வாரியம்,
- தமிழ்நாடு பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர் நல வாரியம்,
- தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல வாரியம்.

அ.தி.மு.க அரசு, இந்த அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை முடக்கிப் போட்டு, ஏறத்தாழ இரண்டு கோடித் தொழிலாளர்களுக்கு எவ்வித சமூகப் பாதுகாப்பும் இல்லாமல் செய்து விட்டது.

தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன், ஏற்கனவே தனித்தனியாக அமைக்கப்பட்ட தொழிலாளர் நலவாரியங்கள் மீண்டும் முழுவீச்சில் செயல்படுத்தப்படும்; நலவாரிய அமைப்புகளில் இதுவரை இடம் பெறாத தமிழ்நாடு புகைப்பட / வீடியோ

கலைஞர்கள் போன்ற பல அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் நல வாரியங்கள் புதிதாக உருவாக்கப்படும். மேலும், நலவாரிய உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவந்த ஓய்வூதியம், மருத்துவ உதவி, கல்வி உதவித் தொகை, விபத்து இழப்பீட்டுத் தொகை முதலியவை சீரமைக்கப்பட்டு உயர்த்தி வழங்கப்படும்.

## போக்குவரத்துப் பணியாளர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டம்

152. தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1998 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட போக்குவரத்துப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் அ.தி.மு.க ஆட்சியில் 1.4.2003 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்தத் திட்டம், அனைத்துப் போக்குவரத்துத் தொழிலாளர்களும் பயனடையும் வண்ணம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

153. அறநிலையத்துறை, காகித ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள், உள்ளாட்சித் துறையில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் பராமரிப்புப் பணியாளர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அரசுத் துறை மற்றும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களில் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துவரும் அனைத்து ஒப்பந்த மற்றும் தற்காலிகப் பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்வது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

154. தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை வலியுறுத்திப் போராட்டங்களில் ஈடுபட்டபோது, அவர்கள் மீது அ.தி.மு.க அரசால் போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்.

## சொந்தமாக ஆட்டோ வாங்க ரூபாய் 10,000 அரசு மானியம்

155. சென்னை உள்ளிட்ட மாநகரங்களிலும், நகரங்களிலும் சொந்தமாக ஆட்டோ ஓட்டும் தொழிலாளர்கள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) மூலமாக அல்லது வங்கிக் கடன் மூலமாக ஆட்டோ வாங்குவதற்கு அரசு 10,000 ரூபாய் மானியம் வழங்கும்.

## மழைக் காலத்தில் உப்பளத் தொழிலாளர் நிவாரணத் தொகை ரூபாய் 5000

156. மீன் பிடிப்பு இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படுவதுபோல் உப்பளத் தொழிலாளர்களுக்கும் மழைவெள்ளக் காலங்களில் நிவாரணத் தொகை 5000 ரூபாய் வழங்கப்படும்.

157. மத்திய அரசின் சேமநல நிதி பெற்று, பீடித் தொழிலாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் 50 படுக்கை வசதிகளுடன் உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

158. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் சலவைத் துறை (DhobiKhana) கட்டித்தரவும், சலவைத் தொழிலாளர்கள் மானிய விலையில் தொழில் கருவிகள் வாங்கிடவும் ஆவன செய்யப்படும்.

## கல்வி – உயர் கல்வி – கல்விக் கடன்

159. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் பயின்று, தமிழகக் கல்லூரிகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ள வங்கிக் கடன் பெற்ற தமிழக மாணவர்கள் ஓராண்டு காலத்துக்குள் கடனைச் செலுத்த இயலாவிட்டால் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் கல்விக் கடனை அரசே ஏற்றுத் திருப்பிச் செலுத்தும்.

## நீட் தேர்வு ரத்து

160. முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் பள்ளி இறுதி வகுப்பில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்லூரிக்கான சேர்க்கைகள் நடைபெற்றன. தற்போதைய மத்திய அரசு நீட் தேர்வை அறிமுகப்படுத்தி தமிழக மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேரும் வாய்ப்பினைத் தட்டிப் பறித்திருக்கிறது. கழக ஆட்சி அமைந்தவுடன் முதல் சட்டமன்றக் கூட்டத்திலேயே நீட் தேர்வை ரத்து செய்யும் சட்டத்தை நிறைவேற்றிக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

161. தமிழக மாணவ இளைஞர்கள் மாணவர்கள் மருத்துவக் கல்வி கற்பதற்கென்று தமிழக மக்களின் வரிப்பணத்தில் மாவட்டம் தோறும் புதிது புதிதாக தமிழக மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கி நடத்தி வருகிறது. இந்நிலையில் தமிழக மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த இடங்களில் பட்டப்படிப்பில் 15 சதவிகித இடங்களையும், பட்ட மேற்படிப்பில் 50 சதவித இடங்களையும், சிறப்பு மேற்படிப்பில் 100 சதவீத இடங்களையும் மத்திய தொகுப்புக்கு வழங்கிட வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவின் மூலம் தமிழக மாணவர்களுக்குப் பேரிழப்பு ஏற்படுவதுடன், தமிழக அரசின் நோக்கங்களுக்கும், அது கடைப்பிடித்து வரும் சமூக நீதிக் கொள்கைக்கும் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது மத்திய அரசு புதிதாக 500 மருத்துவக் கல்லூரிகளை அமைத்து 50,000 மருத்துவக் கல்வி இடங்களை உருவாக்கியுள்ளதால், மாநில அரசு நடத்தி வரும் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த இடங்களையும் மாநிலத் தொகுப்புக்கே கொண்டுவர அமையவிருக்கும் கழக அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## அரசுப் பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு இலவச நாப்கின்

162. அனைத்து அரசுப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்கள் இலவசமாக வழங்குவதற்குத் தானியங்கி இயந்திரங்கள் அமைக்கப்படும். அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்த வசதி செய்து தரப்படும்.

163. தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் நான்காம் தலைமுறை / ஐந்தாம் தலைமுறை (4G/5G) மாதம் 10 GB பதிவிறக்கம் செய்யும் வசதியுடன் கூடிய இணையதள இணைப்புடன் கைக்கணினி (Tablet) அரசு செலவில் வழங்கப்படும். அதோடு அனைத்துக் கல்வி நிலையங்களிலும் Wi-Fi வசதி செய்து கொடுக்கப்படும்.

164. தி.மு.கழகம் முந்தைய ஆட்சிக் காலங்களில் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்பதை ஒரு கொள்கையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளுடன், கூடுதலாக மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய, அரசு மருத்துவக் கல்லூரிகளை தி.மு.க. அரசு உருவாக்கும்.

165. பொறியியல், மருத்துவம், வேளாண்மை ஆகிய தொழிற் கல்விகள் பயில ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் தலைமுறை ஏழை மாணவர்கள் அனைவருக்கும் சாதி-மத வேறுபாடின்றிக் கல்விச் செலவை அரசு வழங்கும் என்ற கலைஞரின் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

166. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் வெளிநாடுகளுக்குச் சென்று வேலைவாய்ப்புப் பெறுவதற்கு வசதியாக – ஆர்வமுள்ள மாணவர்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப ஆங்கிலம், பிரெஞ்சுமொழி, ஜெர்மனிய மொழி, ஸ்பானியமொழி, அரபிக் மொழி, சீனமொழி, ஜப்பானிய மொழி, ரஷ்ய மொழி போன்ற மொழிகள் கற்றுத் தர சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

167. தமிழக மாணவர்கள் IIT, NIT, AIIMS, IIM போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுகளில் அதிகளவு வெற்றி பெற அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் அரசின் சார்பில் உயர்சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

168. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் IAS, IPS, IFS, IRS போன்ற தேர்வுகளுக்கும், தமிழக அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்–1, குரூப்–2 போன்ற தேர்வுகளுக்கும், ரயில்வே மற்றும் வங்கிகளால் நடத்தப்படும் பணியாளர்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கும் தயாராகும் மாணவர்களுக்குப் பயிற்சிகள் அளிப்பதற்கான மையங்கள் சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை ஆகிய மாநகரங்களில் தொடங்கப்படும்.

## பள்ளிக் கல்வி

169. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு ஊட்டச்சத்து பெறும் வகையில் காலை வேளையில் பால் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

## தமிழ்நாட்டில் நூறு சதவீத கல்வியறிவு

170. மூன்றாண்டுகளுக்குள் தமிழ்நாடு நூறு சதவீதம் பேர் எழுத்தறிவு பெற்ற மாநிலமாக உருவாவதற்கு உரிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு விரைவாகச் செயல்படுத்தப்படும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் பொதுப் பட்டியலில் உள்ள கல்வித் துறையை மீண்டும் மாநில அரசுப் பட்டியலில் இடம்பெறச் செய்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

171. அரசுப் பள்ளி மாணவர்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்குத் தேவையான பயிற்சி அளிக்கக் கூடிய வகையில், கடந்த தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் ஆங்கில மொழி ஆய்வகங்கள் உருவாக்கப்பட்டன. இப்போதைய அ.தி.மு.க ஆட்சியில் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மீண்டும் உயிரூட்டி பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு உரிய பயிற்சி வகுப்புகள் நடத்திட ஆவன செய்யப்படும்.

172. பள்ளிக் கல்வியில் சுற்றுச் சூழல் பிரச்சினைகள் குறித்தும், வேளாண்மை குறித்தும் அடிப்படைத் தகவல்களை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், பாடத் திட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வேளாண்மையை ஒரு பாடமாக இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அது போலவே, உடற்பயிற்சிக் கல்விக்கென வாரம் மூன்று பாடவேளைகளாவது ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

173. பள்ளிக்கூடங்களில் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளோடு மொழிவழிச் சிறுபான்மையினர் தங்களுடைய தாய் மொழியையும் பயில்வதற்கு உரிய வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

174. ஆசிரியர்களின் பொது மாறுதலுக்கான கலந்தாய்வில் தற்போது பல்வேறு முறைகேடுகள் நடைபெறுவதால் கழக ஆட்சி அமைந்ததும் ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையுடன் கலந்தாய்வு நடத்தப்படும்.

175. அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறும் வகையில் புனரமைக்கப்படும்.

176. தமிழ்நாட்டில் நூலக ஆணைக் குழுவின் கீழ் இயங்கும் அனைத்து நூலகங்களுக்கும் நூல்கள் வாங்குவதில் வெளிப்படைத்தன்மை கடைப்பிடிக்கப்பட்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற நூல்கள் உட்பட தரமான சிறந்த நூல்கள் வாங்க ஆவன செய்யப்படும்.

177. 2013 ஆம் ஆண்டுமுதல் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்று இன்னும் வேலை வாய்ப்பினைப் பெறாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆசிரியர் தேர்வுக்கான தகுதிச் சான்றிதழை ஆயுட்காலத் தகுதிச் சான்றிதழாக வழங்குவதற்குரிய சட்ட வழிவகைகள் குறித்து ஆராயப்படும்.

178. ஊர்ப்புற நூலகர்களாகக் கிராமங்களில் பணியாற்றும் நூலகர்களுக்குக் கால முறையிலான பணி வழங்கப்படும்.

## வேலைவாய்ப்பு

179. குடும்பத்தில் முதல் தலைமுறைப் பட்டம் பெற்ற ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும்.

180. கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கும்போதே தனது தொகுதியான கொளத்தூரில் "அனிதா அச்சீவர்ஸ் அகாடமி" மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

கழகத் தலைவர் கொளத்தூரில் அறிவித்து நிறைவேற்றியுள்ள படி கழக ஆட்சியில் படித்து விட்டு வேலை தேடும் பெண்களுக்குப் பணி வாய்ப்பைப் பெறுவதற்கு உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குவதற்கும், அவர்கள் வேலை பெறுவதற்கும் உதவிடும் வகையில் மாவட்டந்தோறும் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்படும்.

181. பள்ளிக் கல்வித் துறையில் தற்போது பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றி வரும் ஓவிய ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரைப் பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

182. தமிழகத்தில் உள்ள மாவட்ட நூலகங்கள் அனைத்தையும் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த நூலகங்களில் உள்ள அனைத்து புத்தகங்களின் விவரங்களையும் மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் இணைய தளத்தில் பதிவேற்றப்படும். கழக ஆட்சியில் கிராமப் பகுதிகளில் அமைக்கப்பட்ட

நூலகங்கள் தற்போது பராமரிப்பும் பயன்பாடும் இன்றி இருக்கும் நிலை மாற அவை அனைத்தும் புனரமைப்பு செய்யப்பட்டு புதிதாக நூல்களும் செய்தித்தாள்களும் வழங்கப்படும்.

183. தமிழ்த் தொண்டாற்றிய செந்நாப் புலவர் கார்மேகக் கோனார், தமிழவேள் உமா மகேசுவரனார், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் ஆகியோர் பெயர்களில் அவர்கள் பிறந்த ஊர்களில் நூலகங்கள் அமைக்கப்படும்.

184. பட்டுக்கோட்டையில் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி பெயரில் தன்மானத் தளபதி அழகிரி நினைவுமண்டபம் அமைக்கப்படும்.

## வேலை வாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி

185. தமிழகத்தைக் கடந்த 10 ஆண்டுகளாக ஆளுகின்ற அதிமுக அரசின் தொலை நோக்குச் சிந்தனையில்லாமை மற்றும் நிர்வாகத் திறன் இல்லாமையால் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. தற்போதுள்ள 3000 க்கும் மேற்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்கள், பொறியியல் பட்டய மற்றும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆண்டு தோறும் சுமார் எட்டு இலட்சம் மாணவ மாணவியர் தேர்ச்சிபெற்று வேலை வாய்ப்பிற்காகக் காத்திருக்கின்றனர்.

மேலும், சுமார் இரண்டு இலட்சம் மாணவ மாணவியர் பல்வேறு கல்வி நிலையில் தேர்ச்சி பெறுவதில்லை. ஆகவே, கலைஞர் வழியில் அமையவிருக்கின்ற கழக அரசு தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தினைக் கருத்தில் கொண்டு **2020-2021** முதல் ஒவ்வொரு ஆண்டும் பத்து இலட்சம் வேலை வாய்ப்புகள் என்ற அளவில் **2025-26** வரை ஐம்பது இலட்சம் வேலை வாய்ப்புகளைத் தமிழக படித்த இளைஞர்களுக்கு வழங்கிட தீவிர முயற்சிகள் மேற்கொள்ளும். இந்த மாபெரும் திட்டத்தினைத் திறம்பட நிறைவேற்றிட மாநில திறன் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்க அமைப்பு (State Board of Skill Training and Employment Promotion - STEP) எனப்படும் நிறுவனம் உருவாக்கப்படும்.

வேலை வாய்ப்பு அலுவலகங்கள் பயிற்சி மையங்களாக செயல்படும். இவ்வமைப்பின் மூலம் புகுமுகத் தொழில் முனைவோர் அமைப்புகள் (Incubation Centres) உருவாக்கி, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, செயற்கை அறிவு உள்ளிட்ட துறைகளில் கூட்டு முயற்சியால் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

## கட்டாய திறன் வளர்ச்சி உரிமைச் சட்டம் (Right to Skill Training Act)

186. இளம் வயதிலேயே பெற்றோரை இழந்து தனித்து விடப்பட்ட சிறுவர்,சிறுமியர், பெற்றோராலும், உற்றார் உறவினர்களாலும் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டு அன்றாட உணவுக்குக் கையேந்தி நிற்கும் திருநங்கையர், பள்ளிக்குச் செல்ல இயலாத மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் வேலை வாய்ப்புகளுக்குத் தகுதி ஏற்படுத்துவதற்கெனத் திறன் வளர்ச்சி உரிமைச் சட்டம் பயிற்சி (Right to Skill Training Act) நிறைவேற்றப்பட்டு அவர்கள் வேலைக்குச் செல்வதற்கோ, தொழில் தொடங்குவதற்கோ ஏற்ற வகையில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

## அரசுத் துறைகளில் 5.50 லட்சம் வேலை வாய்ப்புகள்

187. தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் 3 லட்சத்து 50 ஆயிரம் தமிழக இளைஞர்கள் நியமிக்கப்படுவர்.

188. தமிழகத்திலுள்ள நீர் நிலைகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள், ஓடைகள் உள்ளிட்ட அனைத்து நீர் வளங்களையும் வனம் உள்ளிட்ட இயற்கை வளங்களையும் பாதுகாக்கவும் கண்காணிக்கவும் அவை தொடர்பாக அரசின் சார்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு பெற்ற 75,000 இளைஞர்கள் பணி அமர்த்தப்படுவர். இவர்களில் **30** ஆயிரம் இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

189. தமிழகத்தில் உள்ள அனைத்து சாலைகள் பாலங்கள் உள்ளிட்ட பொதுச் சொத்துகளைப் பாதுகாக்கும் பணிகளில் 75,000 சாலைப் பணியாளர்கள் TNRDC நியமிக்கப்படுவர். இவர்களில் **30** ஆயிரம் இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

## அறநிலையங்கள் பாதுகாப்பு 25000 பேருக்கு வேலை வாய்ப்பு

**190.** தமிழகம் முழுவதும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்கள், வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான சொத்துகளைக் கண்காணித்துப் பாதுகாக்கும் பணியில் 25 ஆயிரம் இளைஞர்கள் திருக்கோவில் பணியாளர்களாகப் பணியமர்த்தப்படுவர்.

**191.** மக்கள் நலப் பணியாளர்களாக 25 ஆயிரம் மகளிர் நியமிக்கப்படுவர். இவர்கள் அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் அடிப்படை நிலையில் பணி அமர்த்தப்படுவர். இவர்கள், ஒவ்வொரு கிராமத்திலும் வட்டார வளர்ச்சி அலுவலர் (B.D.Os) கட்டுப்பாட்டில் செயல்படுவர்.

## தொழில் வளர்ச்சி

## தொழில் துறையை மீட்டெடுக்க ரூ. 15,000 கோடி நிதியுதவி

**192.** கொரோனா தொற்றின் காரணமாகத் தனிநபர் இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டுமென்ற அரசு உத்தரவு காரணமாகவும், போக்குவரத்து வசதிகள் ரத்து செய்யப்பட்ட காரணத்தாலும் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் இயங்க இயலாத நிலை ஏற்பட்டு வேலை இழப்பும், பொருளாதாரச் சரிவும் உண்டானது. தற்போது மாறிவரும் சூழ்நிலையில் தொற்றுக் காலத்தில் மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைக்கவும், அங்கேயே பணியாற்றிய தொழிலாளர்கள் மீண்டும் வேலை பெறவும், இந்த நிறுவனங்களுக்கு எளிய தவணைகளில் திரும்பச் செலுத்தக் கூடிய வகையில் கடன் உதவி செய்வதற்கென்று 15,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## தொழில் கொத்துகளை (Clusters) பரவலாக்குவோம்

**193.** தி.மு.க. முனைப்பாக மேற்கொண்ட தொழில் விரிவாக்கக் கொள்கைகளினால் தொழில் வளர்ச்சி புவியியல் ரீதியாகப் பரவியுள்ளபோதும் தொழில் வளர்ச்சி மேலும் பரவலாக்க உரிய கொள்கைகள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இதன் வாயிலாக ஆங்காங்கே வேளாண் அல்லாத தொழில் வாய்ப்புகள் பல்கிப் பெருகும்.

## நிதிச் சிக்கலைச் சமாளிக்க சிறப்பு நிறுவனங்கள்

194. TIDCO, SIDCO, TIIC போன்ற முன்னோடி அமைப்புகள் உருவாக்கப்பட்டதுபோல் வங்கிகள் / நிதி நிறுவனங்களுடன் இணைந்து சிறு / குறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிதியுதவியினை ஏற்பாடு செய்ய இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுச் செயல்படும்.

## தொழில்நுட்ப இடைவெளி நிரப்புத் திட்டம்

195. தொழில்நுட்பம் புயலென மாறி வரும் சூழலில் தொழில் நிறுவனங்களுக்கும் தொழில்நுட்ப உயர்கல்வி அமைப்புகளுக்கும் ஒரு வலுவான பிணைப்பு தேவை. அத்தகைய பிணைப்பினால் தொழில் துறையும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களும் ஆகிய இரு தரப்பும் பயனுறும். இதனைப் புதிதாக அமையவுள்ள தி.மு.க அரசு முனைப்புடன் செயல்படுத்தும்.

196. தமிழகத்தில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களில் 75 சதவிகிதம் வேலைவாய்ப்புகளைத் தமிழர்களுக்கே வழங்கப்பட சட்டம் இயற்றப்படும்.

## நலிவிலிருந்து தொழில் நிறுவனங்களை மீட்க

197. அ.தி.மு.க ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளால் செயல்பட முடியாமல் நலிவடைந்த – நலிவடைந்து கொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களின் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்ப்பதற்கு வசதியாக அரசுத் துறைகள், நிதி நிறுவனங்கள், தொழில்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றைத் தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன் உருவாக்கி; அக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுத் தொழில் நிறுவனங்களை நலிவிலிருந்து மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

198. அனைத்துத் தொழிற்சாலைகளுக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கத் தேவையான சிறப்பு மின் பாதைகள், அனைத்துத் தொழிற்பேட்டை மற்றும் தொழிற்சாலைகளுக்கான பகுதிகளில் அமைக்கப்படும்.

199. தமிழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு ஒற்றைச் சாளர முறையில்(Single

Window) அனைத்து அனுமதிகளும் வழங்கப்பட்டு வந்தன. தற்போது அதிமுக ஆட்சியில் ஊழல் அதிகரித்து ஒற்றைச் சாளர முறையையே பயனற்ற ஒன்றாக மாற்றிவிட்டது.

அதன் விளைவாக புதிய முதலீட்டாளர்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வரத் தயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கழக ஆட்சி அமைந்தவுடன் தொழில் தொடங்க முன்வருவோரை ஊக்குவிக்கும் வகையில் ஒற்றைச் சாளர முறையை முழுமையாகப் பயன்படுத்தி தொழில் வளம் பெருக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## புதிய கனிம வளங்கள் மற்றும் சுரங்கங்கள் அமைச்சகம்

200. தமிழகத்தில் உள்ள பல்வேறு கனிமவளங்களைப் பாதுகாக்கவும், பெருக்கவும், பயன்பாட்டை முறைப்படுத்தவும், முறை கேடுகளால் கொள்ளை போவதைத் தடுக்கவும், அரசுக்கு உரிய வருவாயை ஈட்டவும், தனியாக ஒரு புதிய கனிம வளங்கள் மற்றும் சுரங்கங்கள் அமைச்சகம் உருவாக்கப்படும். தமிழ்நாடு மினரல்ஸ் லிட் (டாமின்) நிறுவனம் தொழில் நுட்ப ரீதியாக வலுப்படுத்தப்பட்டு, மாலிப்டினம், வெர்மிகுலைட், டியுனைட், கார்னட், டைட்டானியம் தாது மணல், மாக்னசைட், கிரானைட், ஜிப்சம், சுண்ணாம்புக்கல், டங்க்ஸ்டன் உள்ளிட்ட மாநிலத்தின் அரிய கனிம வளங்கள் எடுக்கப்படும் முயற்சிகள் சீராக்கப்படும். இதன் வாயிலாக அரசுக்குக் கிடைத்திடும் வருவாய் பன்மடங்கு அதிகரிக்கத் தேவையான புதிய கொள்கையும் செயல் திட்டமும் வகுக்கப்பட்டுத் தேவையான செயல்பாடுகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

201. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களில் பல காலமாகப் பணியாற்றி வந்துள்ள மக்கள், இன்று ரப்பர் தொழிற்சாலைகள் குறைந்துவிட்ட காரணத்தால் வருவாய் இன்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனைப் போக்கிட கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தொடங்கப்படும்.

202. முந்தைய தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது போல, முதற்கட்டமாக, அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படுகின்ற பொருள்களைச் சிறு மற்றும் குறு தொழிற்சாலைகளிலிருந்து

கொள்முதல் செய்வதற்கு 15 சதவிகித ஒதுக்கீடும், ஒப்பந்தப் புள்ளி விலையில் 10 சதவிகித விலைச் சலுகையையும் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

203. தென் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட, மதுரை முதல் தூத்துக்குடி வரையிலான தொழில் வழித்தடத்தில் (Industrial Corridor) புதிய தொழில்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதுபோலவே, ஏற்கனவே சென்னை – திருப்பெரும்புதூர் வரை தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு தொழில் நிறுவனங்கள் தொடர்ச்சியாக அமைந்துள்ள தொழிற்பாதை ஒசூர் வரை நீட்டிக்கப்படும்.

204. புதிய தொழில் தொடங்க முதல் தலைமுறைப் பொறியியல் பட்டதாரிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும்.

205. தொழில் நகரங்களில் தேவையான புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் (ITI) அமைத்துத் தரப்படும்.

206. குறுந்தொழில்கள் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்கள் புதிய தொழில் தொடங்க முன்வருவார்களே ஆனால், ஆண்டுக்கு 25,000 பேருக்குக் குறைந்த வட்டியில் முதற்கட்டமாக 20 லட்சம் ரூபாய் TIIC மூலம் கடன் வசதி செய்து தரப்படும்.

207. இந்திய வார்ப்பட நிறுவனம் (Indian Institute of Foundries) கோவையில் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

208. சேலத்தில் ஒருங்கிணைந்த உருக்காலை விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படவும், அதன் பயன்பாடுகளை அதிகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

209. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் குறைந்த அழுத்த மின் அளவு 150 H.Pயிலிருந்து 200 H.Pயாக உயர்த்தப்படும்.

210. நாடா இல்லாத விசைத்தறித் தொழிலுக்கு 20 H.Pக்கு மேல் 40 H.P க்குள் மின் கட்டண விகிதம் IIIBயில் மின் கட்டணம் வசூலிக்கப்படுவதற்குப் பதிலாகக் குறைந்தபட்சக் கட்டணமாக, அதாவது, தனி விகிதப்படி விதி III A 1ல் வசூலிக்க ஆவன செய்யப்படும்.

211. திண்டுக்கல், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் தோல் பொருள்கள் பூங்கா அமைக்கப்படும்.

212. கோழிப்பண்ணை அமைக்க நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரிடம் அனுமதி பெறவேண்டும் என்ற நிலை மாற்றப்பட்டு, முன்பு இருந்தது போல ஊராட்சி ஒன்றிய அலுவலர்களிடம் அனுமதி பெற்றால் போதும் என்ற நிலை மீண்டும் கொண்டுவரப்படும்.

213. 10 லட்சம் மக்களின் வாழ்வாதாரமாக இருக்கும் பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

214. உலகப் புகழ்பெற்ற கவரிங் நகை தயாரிப்பில் முக்கிய கேந்திரமாக இருக்கும் சிதம்பரத்தில் கவரிங் நகை உற்பத்திக்கான சிறப்புத் தொழிற்பேட்டை உடனடியாக அமைக்கப்படும்.

## ஆலைக்கழிவு சுத்திகரிப்புப் பொது வசதிகள்

215. நிலம் மற்றும் நீர் மாசுபடுவதற்குக் காரணம் தொழில் மையங்களில் அமைந்துள்ள பெரிய மற்றும் சிறு, குறு ஆலைகளே. எனவே, ஆலைகளால் வெளியேற்றப்படும் மாசுக் கழிவுகளை முறையாக அகற்றி, சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட, திருப்பூர், ஈரோடு. கரூர், திண்டுக்கல், வேலூர், அருப்புக்கோட்டை போன்ற நகரப் பகுதிகளில் இயங்கும் சாய ஆலைகள், தோல் பதனிடும் ஆலைகள் போன்ற தொழிலகங்கள் வெளியேற்றும் கழிவுகளை சுத்திகரிக்க மத்திய நிதி உதவியுடன் அமைத்திடத் தேவையான CETP எனப்படும் கழிவு அகற்றும் பொதுவான சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்திட மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும்.

216. திருப்பூர், ஈரோடு, கோவை, உள்ளிட்ட தொழில் நகரங்களில் அமைக்கப்படும் பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு சலுகைக் கட்டணம் வசூலிக்கப்படும்.

## இளைஞர் நலன்

217. 12- ஆம் வகுப்பு மற்றும் தொழிற்கல்வி அடிப்படையில் தகுதியானவர், வேலை வாய்ப்பற்ற 40 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் குறைந்தபட்சம் 15 பேர் அடங்கிய “இளைஞர் சுய முன்னேற்றக் குழுக்கள்” உருவாக்கப்பட்டு, அந்தக் குழுவினர்

தொடங்க முன்வரும் சிறு, குறு தொழில்களுக்குத் தேவையான முதலீட்டில், குழுக்கள் 10 விழுக்காடு தொகையைச் செலுத்தினால், அரசு 25 விழுக்காடு மானியமாகத் தந்து மீதித் தொகையினை வங்கிக் கடனாகப் பெற்றுத் தரும். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை அரசு கொள்முதல் செய்யும்போது ஒப்பந்தப்புள்ளியில் பத்து விழுக்காடு சலுகை தரப்படும்.

இதன் மூலம் படித்த இளைஞர்கள் வேலை தேடுவோர் என்ற நிலையிலிருந்து தொழில் முனைவோராக மாறி அவர்கள் வேறு பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற நிலையினை எய்துவர்; அத்துடன், தமிழ்நாடு உற்பத்தித் துறையில் முன்னேற்றம் அடைந்து வேலை வாய்ப்பின்மை குறைந்து, இளைஞர்களின் பங்களிப்போடு நம்முடைய மாநிலப் பொருளாதாரம் மேம்படுவதற்கான ஒரு மைல் கல் திட்டமாகவும் இது அமையும். இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் இளைஞர்கள் பயன் பெறுவர்.

218. தமிழகத்திற்கே உரித்தான பட்டாசு, பூட்டு, பட்டு, மிக்ஸி, கிரைண்டர் போன்ற பல்வேறு சிறு குறு தொழில்கள் ஆண்டாண்டு காலமாக சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இதனால் லட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரம் பெறுவதுடன், தமிழகத்தின் பொருளாதாரத்திற்குப் பெருமளவில் வலுவூட்டுகிறது. எனவே, இது போன்ற தொழில்களைப் பாதுகாக்கவும் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தவும் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும். ஒவ்வொரு தொழிலுக்கும் பாதுகாப்பான தனித்தனி சிறப்புத் திட்டங்கள் உருவாக்கப்படும்.

219. நாமக்கல்லில் குளிரூட்டப்பட்ட முட்டை சேமிப்புக் கிடங்கு வசதிகள் அமைத்து முட்டை உற்பத்தியாளர்கள் இழப்பிலிருந்து விடுபட வழி காணப்படும்.

## மின்சாரம்

220. போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு மின் உற்பத்தியைப் பெருக்கி வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் விவசாயம் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளுக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கப்படும்.

## மின் கட்டணம் ஒவ்வொரு மாதமும் கணக்கிட்டு வசூலிக்கப்படும்

221. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மின் பயன் அளவீடு செய்யப்படுவதால் அதிகமாக மின் கட்டணம் வசூலிப்பதைத் தவிர்க்கும் வகையில் மாதம் ஒரு முறை மின் உபயோகம் கணக்கிடும் முறை கொண்டு வரப்படும். இதனால் இரண்டு மாதங்களுக்கு 1000-யூனிட்களுக்குக் குறைவாக மின்சாரம் பயன்படுத்துவோர் ஆண்டுக்கு 6000 ரூபாய் வரையில் பயன்பெறுவர்.

222. மின்சாரக் கட்டணத்துடன் ஒவ்வொரு முறையும் வசூலிக்கப்படும் நிலைக் கட்டணம் 50 ரூபாய் தடை செய்யப்படும்.

223. மின் கட்டணம் செலுத்துவதற்குத் தற்போது வங்கிகளில் செலுத்தும் முறை, இணையம் வழியாகச் செலுத்தும் முறை மற்றும் மின்வாரிய அலுவலகத்திலேயே நேரடியாகச் செலுத்தும் முறை என மூன்று வழிகள் நடைமுறையில் உள்ளன. இனி வீடுகளுக்குச் சென்று மின்சார மீட்டர் அலகுகளைக் கணக்கெடுக்கும் பணியாளரே மின் கட்டணத்தைப் பெற்றுக் கொள்வதற்கேற்ற நடைமுறையையும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

224. தமிழகத்திலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மின் உற்பத்தியைத் தொடங்க ஊக்கமளிக்கப்படுவதுடன், அதனைத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

225. அனைத்து அரசு அலுவலகக் கட்டடங்கள், கல்வி நிலையங்கள், கோயில்கள் முதலியவற்றில் சூரியஒளி மின் உற்பத்தி சாதனங்கள் பொருத்தப்பட்டு, மின் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

226. விவசாயம் சார்ந்த திடக் கழிவிலிருந்து 10 MW திறனுக்குக் குறையாமல் உற்பத்தி செய்யக் கூடிய சிறு மின் திட்டங்களை அரசு ஊக்குவிக்கும். அதன் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியார் துறையும், பொதுத்துறையும் இணைந்து (Public-Private Partnership) உற்பத்தி செய்யும் மின்சாரத்தை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் முன்னுரிமை அளித்துக் கொள்முதல் செய்யும். வேலையில்லாப் பட்டதாரிகள் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்த முன் வந்தால் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும்.

227. காற்றாலை மின்சாரம் உற்பத்தியாகும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருப்பூர், திண்டுக்கல், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை மற்றும் தேனி ஆகிய பகுதிகளில் சிறப்பு மின்வழித் தடங்கள் உருவாக்கப்பட்டு, மின் இழப்புகள் ஏற்படாமல் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

228. மின் திருட்டையும் விபத்துகளையும் தடுப்பதற்கு அனைத்து நகரங்களிலும் நிலத்தடிப் புதைவட மின்சாரக் கம்பிகள் (Underground Cabling) படிப்படியாக அமைக்கப்படும்.

229. கடந்த தி.மு.கழக ஆட்சிக் காலத்தில், நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும், குடும்ப அட்டை உள்ள அனைவரின் வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஆனால், அ.தி.மு.க ஆட்சியில் அது நிறுத்தப்பட்டுவிட்டது. தி.மு.கழக அரசு அமைந்தவுடன் இத்திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

## உடன்குடி – செய்யூர் மின் திட்டங்கள்

230. தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, அ.தி.மு.க ஆட்சியின் குளறுபடிகள் நிறைந்த நிர்வாகத்தால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஆட்பட்டுச் சிக்கலாகிப் போயுள்ள உடன்குடி மின் திட்டத்தையும், செய்யூர் அனல்மின் நிலைய திட்டத்தையும் சிக்கல்களை அகற்றி, மீண்டும் உடனடியாகச் செயல்படுத்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 20 ஆயிரம் மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தி

231. கடந்த கால தி.மு.க. ஆட்சியில் திட்டமிடப்பட்ட பல்வேறு மின் உற்பத்தித் திட்டங்களை அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் கிடப்பில் போட்டுவிட்டு, தற்போதைய அரசு தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து சந்தை விலையைவிட அதிக விலைக்கு மின்சாரம் வாங்கி வருவதன் விளைவாகப் பெரும் ஊழல் நடைபெறுவதோடு தமிழ்நாடு மின்சார வாரியம் பெரும் அளவில் இழப்பைச் சந்தித்து வருகிறது. பொதுமக்களும் கடுமையான கட்டண உயர்வைச் சந்திக்க வேண்டிய நிலை தற்போது உள்ளது. தனியார் நிறுவனங்களிடம் இருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதைக் குறைத்து சூரியஒளி, காற்றாலை, போன்ற மாசற்ற மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து, அவற்றின் மூலம் 20,000

மெகாவாட் மின் உற்பத்தி செய்து மக்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

232. காலாவதியான தனியார் காற்றாலைகளை(WINDMILL) அப்புறப்படுத்தி விட்டு அதே இடத்தில் புதிய காற்றாலைகளை ஏற்கனவே அரசுடன் செய்யப்பட்ட பழைய ஒப்பந்த விதிகளின் அடிப்படையில் அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்படும்.

233. சோலார் (சூரிய சக்தி) மின்சார வாரியத்தின் மூலம் பொருத்தப்படும் EN METER கிடைப்பது மிகவும் சிரமமாகவும் தாமதமாகவும் உள்ளது. இதை விரைவுபடுத்தினால் சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பெருமளவு உயர வாய்ப்புள்ளது. எனவே EN METER அதிகளவில் கொள்முதல் செய்து விரைவாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## பொது விநியோகத் திட்டம்

234. குடும்ப அட்டைகள் இல்லாத தகுதியானவர்களுக்கு விண்ணப்பித்த 15 நாட்களில் புதிய குடும்ப அட்டைகள் ஸ்மார்ட் கார்டு (Smart Card) வடிவில் வழங்கப்படும்.

235. குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் இலவசமாக 20 கிலோ அரிசி வழங்கும் திட்டம் தொடரும். இத்திட்டத்தில் தரம் மிகுந்த அரிசி வழங்குவது உறுதி செய்யப்படும்.

236. தமிழ்நாட்டில் பல துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள நியாயவிலைக் கடைகள் அனைத்தும் ஒரே துறையின் கீழ் கொண்டு வரப்படும்.

237. பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பழைய குடும்ப அட்டைகளை மாற்றி, ஸ்மார்ட் கார்டுகள் (Smart Card) வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். பொதுவிநியோகத் திட்டத்தில் ஏற்படும் குளறுபடிகளைத் தவிர்க்க இத்திட்டம் முழுவதும் கணினிமயமாக்கப்படும். மேலும், நியாயவிலைக் கடைகளில் இருப்பில் உள்ள பொருள்களின் விவரங்கள் மின்னணுத் தகவல் பலகைகளில் வெளியிடப்படும்.

238. சுகாதாரத்தையும், எடையையும் உறுதிப்படுத்தும் வகையில் நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் சர்க்கரை, மைதா, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் உள்ளிட்ட எல்லாப் பொருட்களும் பாக்கெட்டுகளில் வழங்கிட ஆவன செய்யப்படும்.

239. மின்சேமிப்பைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மானிய விலையில் மூன்று LED பல்புகள் வழங்கப்படும்.

240. நியாயவிலைக் கடைகளில் தற்போது வழங்கப்படும் சர்க்கரையின் அளவு உயர்த்தப்பட்டு மாதம் தோறும் ஒரு கிலோ கூடுதலாக வழங்கப்படும். மேலும், அ.தி.மு.க ஆட்சியில் நிறுத்தப்பட்ட உளுத்தம் பருப்பு மீண்டும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும்.

## சுற்றுலா

241. சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணிகளின் நலன்களை கருத்தில் கொண்டும் பெருமளவில் அந்நிய செலாவணி மற்றும் வேலை வாய்ப்புகளை பெருக்கிடவும் பல்வேறு வகையான சுற்றுலாக்களை ஊக்குவிக்கவும் புதிய கண்ணோட்டத்தோடு பெருந்திட்டம் (Master Plan) உருவாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் மாமல்லபுரம், குற்றாலம், உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, திருவரங்கம், செஞ்சி, இராமேசுவரம், மதுரை, நாகப்பட்டினம், தரங்கம்பாடி, ஏற்காடு, ஏலகிரி உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வாய்ந்த சுற்றுலா நகர்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

242. சுற்றுலாவை மேம்படுத்த பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாயக்கர்கள், பாளையக்காரர்கள், மராட்டியர் போன்றோர் காலத்து சிதிலமடைந்த அரண்மனைகள், கோட்டைகள், மாளிகைகள் புதுப்பிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

## மகளிர் நலன்

243. அரசுப் பணிக்குச் செல்லும் பெண்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 9 மாத பேறுகால விடுமுறையை 12 மாதங்களாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## சிறப்பு தாய்சேய் நலத் திட்டம்

244. திருமணமான பெண்கள் கருவுற்ற முதல் மாதம் மட்டும் மருத்துவமனைக்குச் சென்று, தடுப்பூசி பரிசோதனை செய்து கொண்டு மீதமுள்ள மாதங்களில் தாய்மார்களுக்குத் தடுப்பூசி அளிக்கவும் பரிசோதனை செய்து கொள்ளவும்

தாய்சேய் நல வாகனம் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டு, பரிசோதனைக் கருவிகள் கொண்ட அந்த வாகனத்தில் பெண் மருத்துவர் ஒருவரும், செவிலியர் ஒருவரும் கருவுற்ற பெண்களின் வீடுகளுக்கே சென்று மருத்துவ உதவிகள் வழங்குவர். பரிசோதனைக் கருவிகள், மருந்து மாத்திரைகள் அனைத்தும் வீடு தேடிவரும் வசதியான "தாய்சேய் நலத் திட்டம்" உடனடியாகச் செயல்படுத்தப்படும். இந்தச் சிறப்புத் திட்டம் முதலமைச்சரின் நேரடிப் பார்வையில் செயல்படுத்தப்படும்.

**245.** அனைத்துப் பொது இடங்களிலும், தாய்மார்கள் தம் குழந்தைக்குப் பாலூட்டுவதற்குத் தனி இடவசதி ஏற்பாடு செய்யப்படும்.

**246.** தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளி ஆசிரியர் நியமனத்தில் பெண்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள் என்று முந்தைய தி.மு.கழக ஆட்சியில் அறிவித்து, பின்னர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தல் காரணமாகத் தற்போது 75 சதவிகித விழுக்காடு நியமனம் பெண்களுக்கே அளிக்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. அனைத்து அரசு வேலை வாய்ப்புகளிலும் தற்போது பெண்களுக்கு வழங்கப்படுகின்ற 30 விழுக்காடு இடஒதுக்கீடு முன்னுரிமை அடிப்படையில் 40 விழுக்காடாக உயர்த்தப்படும்.

**247.** சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டும் நிறைவேற்றப்படாத நிலையில் உள்ளது. இந்தச் சட்டத்தை விரைந்து நிறைவேற்றிட வேண்டுமெனத் தி.மு.கழகம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

## மகளிர்க்குப் புற்றுநோய்ச் சோதனைகள்

**248.** பெண்களுக்கிடையே புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். பெண்களை அதிகமாகப் பாதிக்கக் கூடிய வாய்ப் புற்றுநோய், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் ஆகியவைகளுக்கான பரிசோதனைகள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் செய்யப்பட்டு, உரிய உயர் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட ஆவன செய்யப்படும்.

249. தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றி வரும் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளிலிருந்து பெண்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கிட, பணிபுரியும் இடங்களில் சட்டப்படி அமைக்கப்பட வேண்டிய பாதுகாப்புக் குழுக்களை முறையாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## கைம்பெண்கள் நலன்

250. தமிழகத்தில் கைம்பெண்களின் நிலை பரிதாபத்திற்குரியதாக உள்ளது. கைம்பெண்களின் பிரச்சினைகள் குறித்துப் பலமுறை கோரிக்கைகள் அளிக்கப்பட்டும் அ.தி.மு.க அரசு செவிசாய்க்கவில்லை. கைம்பெண்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல் மற்றும் அவர்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்துக்கு உரிய உத்திரவாதம் அளித்தல் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் 35 வயதுக்கு மேற்பட்ட கணவனால் கைவிடப்பட்ட மற்றும் கைம் பெண்களுக்கு அவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில் அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

251. கைம்பெண்கள் முன்னேற்றத்திற்காகக் கைம்பெண் மகளிர் நல வாரியம் அமைக்கப்படும்.

## கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூபாய் 24,000

252. டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், பேறு காலத்தில் மகளிர் உடல்நலம் பேணுவதற்காகத் தற்போது வழங்கப்படும் உதவித் தொகை 18 ஆயிரம் ரூபாய் என்பது 8 மாதத்திற்கு, மாதம் 3 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 24 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும்.

253. பணிபுரியும் மகளிர் நலனுக்காக மாவட்டந்தோறும், பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள் (Working Womens Hostel) ஏற்படுத்தப்படும்.

## பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் களைய சைபர் காவல் நிலையங்கள்

254. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பெருவாரியாக இணைய வழித் தகவல் பரிமாற்றங்களின் மூலம்தான் நடைபெறுகிறது. இதனைத் தடுப்பதற்குத் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் Cyber (சைபர்)

காவல் நிலையங்கள் அமைக்கப்படும். இந்தப் பணிக்கெனத் தகவல் தொழில்நுட்பக் கல்வி பெற்றவர்களுக்கு, உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு, காவல் நிலையங்களில் நியமிக்கப்படுவர்.

255. ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை கைம்பெண்களின் மகள் திருமண நிதி உதவித் திட்டத்தில் தற்போது வழங்கப்படும் உதவித்தொகை 25 ஆயிரம் ரூபாய் என்பது 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம் (22 கேரட்) தங்கமும் வழங்கப்படும்.

பட்டப்படிப்பு படித்த அல்லது பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாகத் தற்போது வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபாய் என்பது 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம்(22 கேரட்) தங்கமும் வழங்கப்படும்.

256. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற மகளிர் திருமண நிதி உதவித் திட்டத்தில் தற்போது வழங்கப்படும் உதவித்தொகை 25 ஆயிரம் ரூபாய் என்பது 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம் தங்கமும் வழங்கப்படும்.

பட்டப்படிப்பு படித்த அல்லது பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாகத் தற்போது வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபாய் என்பது 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம் (22 கேரட்) தங்கமும் வழங்கப்படும்.

257. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ், பத்தாம் வகுப்பு வரை படித்த பெண்களுக்குத் திருமணஉதவித் தொகையாகத் தற்போது வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாய் என்பது 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம் (22 கேரட்) தங்கமும் வழங்கப்படும்.

ஐந்தாம் வகுப்பு வரை படித்த ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் இனஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாகத் தற்போது வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாய் என்பது 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம் (22 கேரட்) தங்கமும் வழங்கப்படும்.

பட்டப்படிப்பு படித்த மற்றும் பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாகத் தற்போது வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபாய் என்பது 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம் (22 கேரட்) தங்கமும் வழங்கப்படும்.

258. டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், தற்போது வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாய் என்பது 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம் (22 கேரட்) தங்கமும் வழங்கப்படும்.

பட்டப்படிப்பு படித்த மற்றும் பட்டயப் படிப்பு படித்த விதவைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாகத் தற்போது வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபாய் என்பது 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், தாலிக்கு 8 கிராம் (22 கேரட்) தங்கமும் வழங்கப்படும்.

## அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்

259. கலப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தி பிறப்பு அடிப்படையிலான சாதி இன வேறுபாட்டை அகற்றி தீண்டாமையை ஒழிக்கும் நோக்கத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவி திட்டம் புதுப்பிக்கப்பட்டுச் செயல்படுத்த அரசாணை வெளியிடப்படும்.

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் மணமக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது மலைவாழ் பழங்குடியினர் எனில் அவர் பிற இனத்தவரை மணந்து கொண்டால் வழங்கப்படும் நிதியுதவி 60 ஆயிரம் ரூபாய் மற்றும் தாலிக்கு 8 கிராம் (22 கேரட்) தங்கக் காசும் வழங்கப்படும்.

260. அரசு கொள்முதல் செய்து பயன்படுத்தும்,மற்றும் விநியோகித்திடும், அரசு அலுவலகங்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தயாரிப்புகளுக்குக் கொள்முதலில் முன்னுரிமை வழங்கப்படும். அந்தப் பொருட்களை உற்பத்தி செய்யும் உபகரணங்களை வாங்குவதற்குத் தேவைப்படும் மொத்தத் தொகையில் சுயஉதவிக் குழுக்கள் பத்து விழுக்காடு செலுத்தினால், அரசு மானியமாக 25 விழுக்காடு வழங்கி மீதித் தொகையினை வங்கியில் கடனாகப் பெற உதவும்.

## 1 லட்சம் மகளிர்க்கு சிறுதொழில் கடன்

261. வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சார்ந்த 1 லட்சம் கிராமப்புறப் பெண்களுக்குக் கால்நடைகள் வளர்ப்பு, மீன் பிடித்தல், வண்ண மீன் வளர்ப்பு, மண் பானைகள் செய்தல் போன்ற விவசாயம் சார்ந்த சிறிய தொழில்கள் மற்றும் வணிகம் செய்வதற்கு வட்டியில்லாக் கடனாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

262. 35–வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத, ஆதரவற்ற மகளிர்க்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கு ஏற்ப அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

## சுயஉதவிக் குழுக்கள்

263. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு நிலுவையில் உள்ள கூட்டுறவு வங்கிக் கடன் தொகைகள் தள்ளுபடி செய்யப்படும் என்று தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்த பிறகு அ.தி.மு.க. அரசு அதே அறிவிப்பைச் செய்தது. ஆனால், தேர்தல் அறிவிக்கை வெளிவந்த நிலையில் அவர்களால் அதனை முறையாகச் செய்ய இயல்பில்லை. எனவே, கழக ஆட்சி அமைந்தவுடன் இக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். மேலும், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் பூமாலை திட்டம் செம்மைப்படுத்தப்படும்.

264. கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்ற தேர்தலின் போதே கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட 5 பவுனுக்கு உட்பட்ட நகை கடன் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்திருந்தார். இதே அறிவிப்பை சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்படும் சில மணி நேரங்களுக்கு முன்பு தேர்தல் ஆதாயத்திற்காக அதிமுக அரசு அறிவித்தது. அதனை அமல்படுத்த முடியவில்லை. எனவே, கழக அரசு அமைந்ததும் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட 5 சவரனுக்கு உட்பட்ட நகைக்கடன் தள்ளுபடி செய்யப்படும்.மகளிர் சுய உதவிக் குழுக்கள் போலவே வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்காகச் சுய உதவிக் குழுக்கள் புதிதாகத் தொடங்கப்படும்.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

265. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் தமிழகத்தில் நடத்திய பேரியக்கத்தின் காரணமாகவும் – பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கொடுத்த அழுத்தத்தினாலும் – பண்டித நேரு அவர்கள் முன்வந்து இந்திய

அரசியல்சட்டத்தில் 1951 ஆம் ஆண்டு நிறைவேற்றிய முதலாவது திருத்தத்தின் மூலம், இணைக்கப்பட்ட 15(4) என்ற புதிய பிரிவில், சமூகநிலையிலும், கல்விநிலையிலும் (Socially and Educationally) என்ற சொற்றொடர் மட்டும்தான் இணைக்கப்பட்டது. அப்போது சிலர் பொருளாதார ரீதியாக (Economically) என்ற சொற்றொடரும் இடம்பெற வேண்டுமென்று வலியுறுத்தியும், அதனைப் பண்டிதநேரு அவர்களோ, அன்றைய சட்ட அமைச்சர் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களோ ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தச் சூழ்நிலையில், தற்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நிலுவையில் உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கான ஆண்டு வருமான உச்சவரம்பை நீக்குவதற்கு மத்திய அரசு உரிய வழிமுறைகளை ஆய்வு செய்து சட்டரீதியாக அதனை அகற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்திடத் தி.மு.கழகம் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தும்.

## வருமான உச்ச வரம்பு (Creamy Layer) ரூபாய் 25 லட்சமாக உயர்த்துக

266. சாதிகள் அற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பது தி.மு.கழகத்தின் கொள்கையாக இருந்தாலும், சாதிகள் உள்ள வரையில் இடஒதுக்கீடு தொடரவேண்டும் என்பதும், தி.மு.கழகத்தின் கொள்கையாகும். அதைப்போல, இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டிற்குத் தடையாகப் பொருளாதார உச்சவரம்பு கூடாது என்பதுதான் தி.மு.கழகத்தின் கொள்கையாகும். அதே வேளையில், பொருளாதார உச்சவரம்பு (Creamy Layer) தொடரும் வரையில், தற்போதுள்ள வருமான உச்சவரம்பு 8.5 இலட்சம் ரூபாய் என்பதைத் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரைத்துள்ளபடி ஆண்டு வருமானம் (ஊதியம் மற்றும் வேளாண் வருமானம் தவிர்த்து) 25 இலட்சம் ரூபாய் என உயர்த்த வேண்டுமென்று தி.மு.கழகம் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தேசிய ஆதி திராவிடர் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கும் வழங்கப்படவேண்டும் எனத் தி.மு.கழகம் வலியுறுத்தும்.

**267.** அந்தந்த மாநிலங்களில் வாழும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதி திராவிடர் எண்ணிக்கைக்கேற்ப இடஒதுக்கீட்டு அளவை அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக் கொள்ளும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட மத்திய அரசைத் தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

**268.** தி.மு.கழகத்தின் அடிப்படைக் கொள்கையான இடஒதுக்கீட்டினை அனைத்து இந்தியாவிலும் நடைமுறைப்படுத்தும் வகையில் 'மண்டல் குழுவின்' பரிந்துரையினை ஏற்றுக்கொள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியதன் அடிப்படையில் அன்றைய பிரதமர் திரு.வி.பி.சிங் அவர்கள் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கான அறிவிப்பினைச் செய்தார்கள். அதன் பின்னர் 2006 ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அன்றைய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.அர்ஜுன் சிங் அவர்கள் மத்திய அரசு கல்வி நிறுவனங்களிலும் 27 சதவீத இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தினார்.

ஆனால், இன்றளவில் மத்திய அரசுப் பணிகளிலோ, மத்திய கல்வி நிறுவனங்களிலோ, இட ஒதுக்கீடு முழுமையாகப் பின்பிற்றப் படாமல், மிகக் குறைவான இடங்களே, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பது, அவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பெரும் அநீதியாகும்.

சமுதாயத்தில் நீண்டகாலம் பணி வாய்ப்பின்றி, கல்வியின்றி இருந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றளவில் முன்னேறி இருப்பதற்கு அடிப்படைக் காரணமாக இட ஒதுக்கீடு அமைந்துள்ளது.

ஆனால், மத்திய அரசு இந்த இட ஒதுக்கீட்டு முறையை வேண்டுமென்றே முறையாகக் கடைப்பிடிக்காமல், மனுதர்ம சிந்தனையோடு நடந்து கொள்வது கடுமையான கண்டனத்துக்குரியதாகும்.

ஏனவே, மத்திய அரசுப் பணியிடங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் மண்டல் ஆணையப்பரிந்துரையின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தி.மு.கழகம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

## தனியார் துறையிலும் இடஒதுக்கீடு வழங்கிடுக

**269.** தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், தனியார் துறையிலும் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பில் 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளது. தமிழ்நாடு அரசு பின்பற்றி வரும் இடஒதுக்கீடு முறைப்படி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மற்றும் பழங்குடி சமுதாய மக்களுக்குத் தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்க வலியுறுத்துவோம்.

**270.** சென்னை உயர்நீதிமன்றம் தொடங்கப்பட்ட 112 ஆண்டுகளில் நடைபெறாத ஓர் அதிசயமாகத் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 14.2.1973 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக தாழ்த்தப்பட்ட பட்டியலின வகுப்பைச் சார்ந்த ஏ.வரதராசன் நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியின் பரிந்துரையால்தான். அதன்மூலம் முதல்முறையாக உச்சநீதிமன்றத்தில் பட்டியலின வகுப்பைச் சார்ந்த ஒருவர் நீதிபதியாக நியமிக்கப்பட்ட பெருமையும் தி.மு.கழகத்தால்தான் உருவானது.

நீதிபதிகள் நியமனங்களில் கீழமை நீதிமன்றங்களில் தற்போது இடஒதுக்கீடு உள்ளது. ஆனால், உயர் நீதிமன்றங்களிலும், உச்சநீதி மன்றங்களிலும் இடஒதுக்கீடு நடைமுறையில் இல்லை. தமிழ்நாட்டைத் தவிர பிற மாநில உயர் நீதிமன்றங்களில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. தற்போது இந்தியாவில் உள்ள உயர்நீதிமன்றங்களுக்கு ஏறத்தாழ 400 புதிய நீதிபதிகள் நியமனம் செய்யப்பட உள்ள நிலையில், இந்த நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு அளித்திடும் வகையில் மத்திய அரசு உரிய சட்டம் ஒன்றை நிறைவேற்ற தி.மு.கழகம் வலியுறுத்தும்.

**271.** ஆதிதிராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை நாடாளுமன்றத்தில் விவாதித்து, ஏற்றுக் கொண்ட மத்திய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோரைப் பற்றி மட்டும் கணக்கெடுப்பு நடத்தியது. எனினும் இந்தக் கணக்கெடுப்பைத் தி.மு.கழக உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியும் அதனை மத்திய அரசு

வெளியிடவில்லை. உடனடியாக அதனை வெளியிட வேண்டுமென திமுகழகம், மத்திய அரசை வலியுறுத்தும். வறுமைக் கோட்டிற்கான அளவுகோல் அடிக்கடி மாறக் கூடியது. எனவே, முழுமையான சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பினை நடத்திடத் தி.மு.கழகம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

272. மத்திய அரசு நடத்தும் ஐ.ஐ.டி போன்ற அனைத்துக் கல்வி நிலையங்களின் மாணவர் சேர்க்கையிலும் ஆசிரியர் நியமனத்திலும் மண்டல் குழுவின் பரிந்துரையின்படி பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென மத்திய அரசைத் தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

273. விசுவகர்மா சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட வைக்கப்பட்டுள்ள கோரிக்கை கவனத்துடன் பரிசீலித்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

274. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் அறங்காவலர் குழுவில் விசுவகர்மா இனத்தைச் சேர்ந்த ஒருவர் உறுப்பினராக நியமிக்கப்படுவார்.

## ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலன்

275. தி.மு.கழக ஆட்சி அமையும் போதெல்லாம் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலன் பழங்குடியினருக்கு உரிய இடஒதுக்கீட்டின் பங்கினை நடைமுறைப்படுத்திப் பின்னடைவு காலிப் பணியிடங்களை (Backlog vacancies) நிரப்பிவரும் அணுகுமுறை அ.தி.மு.க ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. தி.மு.கழக ஆட்சி அமைந்ததும் மீண்டும் பின்னடைவு காலிப் பணியிடங்கள் கணக்கிடப்படும் நிரப்பப்படும்.

276. கிராமங்களில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களின் முதல் தலைமுறை பெண் வாரிசு மருத்துவம் அல்லது பொறியியல் துறையில் படிக்கத் தகுதி பெற்றால் அரசுக் கல்லூரிகளில் அரசு செலவில் கல்வியும் மற்றும் தங்கும் விடுதி வசதியும் செய்து தரப்படும்.

அது போலவே, இத்திட்டத்தில் முன்னேறிய வகுப்பைச் சார்ந்தவர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்தவரைத் திருமணம் செய்திருந்தால் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

277. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு உதவியுடன் 1980–1981 ஆம் நிதியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிறப்புக்கூறு திட்டம் (Special Component Plan) அ.தி.மு.க அரசினால் சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தை முறையாகச் செயல்படுத்தி அதன் முழுப் பலன்களும் அச்சமுதாய மக்களுக்கு உரிய காலத்தில் சேர்வதற்குரிய நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும்.

278. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை நடத்தும் மாணவர் விடுதிகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இம்மாணவர்களுக்கு உணவுக்காக வழங்கப்படும் உணவுக் கட்டணம் விலைவாசி உயர்வுக்கேற்றவாறு அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு உயர்த்தி வழங்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

279. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் வருடாந்திரக் கல்வி உதவித் தொகை உயர்த்தி வழங்கப்படும்.

280. நரிக்குறவர், குருவிக்காரர், வேட்டைக்காரர், லம்பாடி, படுகர் போன்ற சமுதாயத்தினர் 15 லட்சம் பேர் பயனடைய பழங்குடியினர் பட்டியலில்(ST) சேர்க்கப்படுதற்கு மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தப்படும்.

மேலும், இராமநாதபுரம், கடலூர், தேனி போன்ற மாவட்டங்களில் வழங்கப்படும் சாதிச் சான்றிதழ் திருவாரூர் போன்ற மாவட்டங்களில் வசிக்கும் இந்து கணிக்கர், இருளர் போன்ற சமுதாய மக்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, இந்தச் சமுதாய மக்கள் எந்த மாவட்டத்தில் வசித்தாலும் உரிய விசாரணைக்குப்பின் சாதிச் சான்றிதழ் பெற்றிட வழிவகை செய்யப்படும்.

பழங்குடி மக்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள தடைகள் அகற்றப்பட்டு விண்ணப்பித்த 100 நாட்களுக்குள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

## தூய்மைப் பணியாளர் நலன்

**281.** தற்போதுள்ள 50 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட சிறு நகரங்கள், ஏனைய நகரங்கள் மற்றும் மாநகரங்களில் திறந்த வெளி சாக்கடைகளை அகற்றுவதற்காகப் பாதாள சாக்கடைத் திட்டமும், திடக் கழிவு மேலாண்மைத் திட்டமும் முன்னுரிமை தரப்பட்டு அடுத்த ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். இதன் மூலமாகத் தலைமுறை தலைமுறையாக இத்தொழிலில் ஈடுபட்டு வரும் தூய்மைப் பணியாளருக்குப் பணி விடுதலையும் மாற்று வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

**282.** வாரம் ஒருநாள் அனைத்துத் தூய்மைப் பணியாளர்களுக்கும் விடுமுறை அளிக்கப்படும். அப்படி விடுமுறை நாட்களில் பணிபுரிய நேரிட்டால் கூடுதல் பணிநேர ஊதியம் (Over Time Wages) வழங்கப்படும்.

**283.** தூய்மைப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது உயிர் இழக்க நேரிட்டால், அவருடைய வாரிசுதாரர்களுக்குக் கல்வித் தகுதியின் அடிப்படையில் உடனடியாக அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

**284.** தூய்மைப் பணியாளர் பணியில் இருக்கும்போது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால், அதே துறையில் காலியாக உள்ள பதவிகளில் கல்வித் தகுதிக்கேற்ற பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**285.** ஊராட்சிகள், அரசுப்பள்ளிகள், அரசு மருத்துவமனைகள், அரசு மாணவர் விடுதிகள், நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சிகள் ஆகியவற்றில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் பணி, ஊதியம், ஒய்வூதியம் போன்ற கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும்.

## சிறுபான்மையினர் நலன்

**286.** தி.மு.க ஆட்சிக் காலத்தில் பௌத்த மதத்தைத் தழுவிய தலித் மக்களுக்கு ஆதி திராவிடர் பெறுகிற அனைத்துச் சலுகைகளும், உரிமைகளும் அளிக்கப்பட்டது போல், தலித் கிருத்துவர்களும் ஆதி திராவிடர் பட்டியலில் இடம் பெறுவதற்கும், இது குறித்து நீதியரசர் ரங்கநாத் மிஸ்ரா தலைமையில் அமைந்த ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கும் மத்திய அரசைத் தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

287. கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சிறுபான்மைச் சமுதாயத்தினர் உரிய பங்கினைப் பெறுவதற்கு ஏதுவாக நீதியரசர் சச்சார் ஆணையத்தின் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசைத் தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

288. மாநிலத்தில் சிறுபான்மையினர் கல்வி அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும் பின்தங்கியுள்ள பகுதிகளில் குறிப்பாக, சிறுபான்மைச் சமுதாயப் பெண்கள் பயனடையும் வகையில் சிறப்புச் சலுகைகளுடன் கல்வி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

289. வக்ஃப் வாரியத்தின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## மாற்றுத்திறனாளிகள் நலன்

290. மாற்றுத் திறனாளிகள் சட்டம் (1995) ன் அடிப்படையில், மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான கொள்கைகளை உருவாக்கவும், அவற்றைச் செயல்படுத்துவதைக் கண்காணிக்கவும், மாநிலங்கள் தோறும் ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். ஆனால், சட்டப்படியான இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற கடந்த ஐந்து ஆண்டுகளாக அ.தி.மு.க ஆட்சியில் குழு அமைக்கப்படவில்லை. தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன் ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படுவதோடு, அரசு வழங்கும் சலுகைகளை அதிகமானவர்கள் பெற்றுப் பயனடையும் வகையில் மாற்றுத் திறனாளிகள் சலுகைக்கான குறைபாடுகளை 60 சதவிகித்திலிருந்து 40 சதவிகிதமாகக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

291. மாற்றுத் திறனாளிகளுக்கும், அவர்களுடன் செல்லும் ஓர் உதவியாளருக்கும் தமிழக அரசின் சாதாரண பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகை வழங்கப்படும்.

292. மாற்றுத் திறனாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டு (Smart Card) அட்டை வழங்கப்படும்.

293. மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு 3 சக்கர மோட்டார் வாகனம் வழங்கப்படும்.

294. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் உள்ள 4 சதவிகித இடஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**295.** அரசு அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள் போன்ற அனைத்துப் பொது இடங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்குப் பயன்படும் வகையில் சாய்தள (RAMP) வசதிகளும், கழிப்பறை வசதிகளும் செய்து தரப்படும்.

**296.** மாற்றுத் திறனாளிகளுக்குச் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு அரசுத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் (ITI) பயிற்சி வழங்கப்பட்டுத் தொழில் தொடங்கிட மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும்.

**297.** அரசு வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரிய வீடுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## வணிகர் நலன்

**298.** கந்துவட்டிக் கொடுமையிலிருந்து ஏழை எளிய வணிகர்களைக் காப்பாற்றிட சாலையோரங்களிலும், தள்ளுவண்டிகளிலும், தலைச்சுமைகளிலும் காய்கறிகள், மீன் விற்பவர்கள், பூ விற்பவர்கள், பழம் விற்பவர்கள், சலவைத் தொழிலாளர்கள், காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள், தேநீர் விற்பவர்கள், பழரசம் விற்பவர்கள், இளநீர் விற்பவர்கள், பஞ்சர் ஒட்டும் தொழில் செய்பவர்கள் போன்றவர்களுக்கு வாரத் தவணைமுறையில் திருப்பிச் செலுத்தும் வகையில் வட்டியில்லாக் கடன் 15,000 ரூபாய் வரையில் எளியமுறையில் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், இவர்களது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் அனைத்து நகரங்களிலும் உள்ளாட்சிநிர்வாகம், காவல்துறை, வணிகர் சங்கங்கள், குடியிருப்போர் பிரதிநிதிகள் அடங்கிய ஒழுங்குபடுத்தும் குழு ஒன்று அமைக்கப்படும். சிறு வியாபாரிகளுக்கான வணிகர் சுய உதவிக் குழுக்கள் அமைத்துத் தரப்படும்.

கிராமப்புறத்தில் வாரச்சந்தை, திருவிழா, தெருவோரங்களில், நடமாடும் கடைகள் அமைக்கும் சிறு வணிகர்களிடமும் உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும் கட்டணம் ரத்து செய்யப்படும்.

**299.** சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடுகளை அனுமதிப்பதால் இலட்சக்கணக்கான சிறு வணிகர்களும் அதனை நம்பியுள்ள தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள். மத்திய அரசு இதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்திய

நேரத்தில் மாநில அரசுகளின் அனுமதியின்றி மாநிலங்களில் சில்லரை வணிகத்தில் அந்நிய முதலீடு அனுமதிக்கப்படமாட்டாது என்று தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உறுதி அளித்ததோடு அதற்கான சட்டதிருத்தத்தையும் மேற்கொண்டது. எனவே, சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடுகளைத் தி.மு.கழக அரசு எந்த நிலையிலும் அனுமதிக்காது.

300. வணிக வரி அதிகாரிகள் விதிக்கின்ற உத்தேச வரி விதிப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் வணிகர்கள் 25 சதவிகித வரிவிதிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும் என்ற விதிமுறையைத் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## பன்மடங்கு உயர்த்தப்பட்ட நகராட்சிகள் கடை வாடகைகள் மறு ஆய்வு

301. மாநகராட்சி, நகராட்சிகளுக்கு சொந்தமானச் கடைகளுக்கு அ.தி.மு.க. அரசு வாடகைத் தொகையை அபரிமிதமாக பின் தேதியிட்டு உயர்த்தியுள்ளது. இதனால் பல தரப்பட்ட வணிகர்களும் இந்த கட்டண உயர்வை செலுத்த முடியாமல் அல்லல்படுகின்றனர். இவர்களுக்கு உரிய நிவாரணம் அளித்திடும் நோக்கில், முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அரசு செய்தது போல், அநியாய கட்டண உயர்வு உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு புதிய கட்டண விகிதங்கள் விதிக்கப்படும்.

302. வணிகர் நல வாரியம் சீரமைக்கப்பட்டு, உறுப்பினர் சேர்க்கை செம்மைப்படுத்தப்பட்டுத் திறம்படச் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

303. மத்திய அரசு சிறு தொழில் பட்டியலிலிருந்து நீக்கியுள்ள தீப்பெட்டி, பட்டாசு, மெழுகுவர்த்தி தயாரித்தல் உள்ளிட்ட 21 பொருள்களை மீண்டும் அப்பட்டியலில் சேர்க்க ஆவன செய்யப்படும்.

304. மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், ஈரோடு ஆகிய நகரங்களில் வர்த்தக மேம்பாட்டை உறுதி செய்ய வர்த்தக மையங்கள் (Trade Centre) அமைக்கப்படும்.

305. நலிந்து வரும் உப்பு உற்பத்தி, வெள்ளிக் கொலுசு தயாரிப்பு, பித்தளைத் தொழில், வெள்ளி விளக்குகள் செய்யும் தொழில், பாத்திரத் தொழில் ஆகியவற்றைக் குடிசைத் தொழில்களாக அறிவித்து அவை மேம்படத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

306. பெண்களுக்கு அதிக அளவில் வேலை வழங்கிவரும் பட்டாசுத் திரிதொழில் உரிய பாதுகாப்புடன் கூடிய குடிசைத் தொழிலாக அறிவிக்கப்படும்.

307. இறக்குமதி செய்யப்பட்ட பட்டாசுகளின் விற்பனையை தமிழ்நாட்டில் தடை செய்ய தேவையான முயற்சிகள் எடுக்கப்படும்.

## ஆசிரியர் மற்றும் அரசு அலுவலர்கள் நலன்

308. மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 80–வயது நிறைந்தவுடன் 20 சதவிகிதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதனை மாற்றி 70–வயது நிறையும் பொழுது 10 சதவிகிதமும், 80–வயது நிறையும் பொழுது மேலும் 10 சதவிகிதமும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

## பழைய ஓய்வூதியத் திட்டம்

309. புதிய ஓய்வூதியத் திட்டம் கைவிடப்பட்டு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

310. தமிழக அரசு அலுவலர்களின் பணி தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க மாநில நிர்வாகத் தீர்ப்பாயமும் (STATE ADMINISTRATIVE TRIBUNAL) தலைமைச் செயலாளர் / துறைச் செயலாளர் / துறைத் தலைவர் தலைமையிலான கூட்டு ஆலோசனைக் குழுக்களும் மீண்டும் அமைக்கப்படும்.

## சம வேலைக்கு சம ஊதியம்

311. ரூ.8000/– அடிப்படை ஊதியத்தில் நியமனம் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்பட வேண்டும் என அ.தி.மு.க. ஆட்சியில் பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். அத்தகைய 20,000 ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்றுக் கழக ஆட்சி, அவர்களுக்கு மற்ற ஆசிரியர்களுக்கு வழங்குவது போல் காலமுறை ஊதியம் வழங்கும். ஆசிரியர் பணிக்காலத்தில் உயர்கல்வி கற்று பட்டம் பெறும் ஆசிரியர்களுக்கு கழக ஆட்சியில் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்து வழங்கி வந்த ஊக்கத்தொகை அ.தி.மு.க அரசினால் நீக்கப்பட்டுவிட்டது. இந்த ஊக்கத்தொகை மீண்டும் தொடர்ந்து வழங்கப்படும்.

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம்

312. பல்வேறு கோரிக்கைகளுக்காகப் போராடிய ஆசிரியர்கள் மீது 17B பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக ஏற்பட்ட ஊதிய உயர்வு, மற்றும் பணி உயர்வு முரண்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்குக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, ஆசிரியர்களுக்குப் பாதிப்பிலிருந்து விரைவில் நிவாரணம் கிடைத்திட ஆவன செய்யப்படும்.

## அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் பணி நியமனக் கோரிக்கை

313. தமிழகத்தில் பணியாற்றும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை அரசுப் பணியாளர்களாகப் பணியமர்த்தி காலமுறை ஊதியம் வழங்கப்படும். அவர்களுக்குக் குறைந்தபட்ச ஓய்வூதியமும் பணிக்கொடையும் வழங்கப்படும்.

314. அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் பணிக் காலத்தில் இறந்தால் அவர்களது குடும்பத்தினருக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் குடும்ப நலநிதி ரூபாய் 3 இலட்சம் என்பது 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

315. அ.தி.மு.க அரசினால் பழிவாங்கும் நோக்கத்தில் வேலைநீக்கம் செய்யப்பட்ட மக்கள்நலப் பணியாளர்கள் இயற்கை எய்தியிருந்தால் அவர்களது வாரிசுக்கு அரசு வேலை வழங்குவதோடு, குடும்ப நிவாரண நிதியாக 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

316. பள்ளிக்கல்வித் துறையில் பகுதி நேரப் பணியாளர்களாகப் பணிபுரிந்து நிரந்தரமாக்கப்பட்ட தொழிற் கல்வி ஆசிரியர்கள் உட்பட அனைவருக்கும் 50 விழுக்காடு பகுதிநேரப் பணிக் காலத்தை ஓய்வூதியம் நிர்ணயிப்பதற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

317. கதர் கிராமத் தொழில் வாரியத் தொழிலாளர்கள், சுகாதாரத் துறையில் பணியமர்த்தப்பட்ட கொசு ஒழிப்புப் பரிசோதகர்கள், வேளாண்மை விதை சுத்திகரிப்பு நிலையத் தொழிலாளர்கள் போன்றோரின் பணி மற்றும் ஊதியம் தொடர்பான கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உரிய முறையில் நிறைவேற்றப்படும்.

318. அரசுப் பணியாளருக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் குடும்ப மருத்துவச் செலவு வரம்பை உயர்த்துவதுடன், அறுவை சிகிச்சைக்கு மட்டுமின்றித் தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக (In-Patient) சேர்ந்து சிகிச்சை பெறும் அனைத்து வகையான மருத்துவ செலவினங்களும் அடங்கும் வகையில் அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மாற்றியமைக்கப்படும்.

## கோயில் பணியாளர்கள் ஓய்வூதியம்

319. கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்குக் கோயில்களின் நிதியிலிருந்து வழங்கப்படும் ஓய்வூதியம் 5000 ரூபாய் என்பதை உயர்த்தி வழங்குவது குறித்தும், அவர்களுக்குப் பொங்கல்போனஸ் வழங்குவது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

## திருநங்கையர் நலன்

320. தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தை ஈட்ட இயலாத திருநங்கையருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் 1000 ரூபாய் என்பது 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

321. திருநங்கையரின் தேவைக்கேற்பக் குடிசைமாற்று வாரியம் வாயிலாக வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

## முதியோர் நலன்

322. தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் அனைத்து முதியோருக்கும் வழங்கப்பட்ட உதவித் தொகை அ.தி.மு.க ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன் தகுதியுள்ள முதியோர் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் வழங்கப்படும் 1000 ரூபாய் உதவித்தொகை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். அந்த உதவித் தொகையை அஞ்சல்துறை மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

323. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டு, ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், வழங்க உரிய திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும். மாவட்டந்தோறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரசுத்துறை, தனியார் நிறுவனங்கள் ஆகியவை இணைந்து

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**324.** அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துப் பெரிய சிறிய கோயில்களிலும் மூத்த குடிமக்களுக்குக் காலையிலும் மாலையிலும் ஒரு மணிநேரம் தனி வரிசையில் தரிசனம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**325.** அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தேவையான நவீன வசதிகள் கொண்ட முதியோர் வார்டுகள் (Geriatric Ward) அமைக்கப்படும்.

## குழந்தைகள் நலன்

**326.** தமிழகத்தில் சிறார்கள், சிறுமிகள் மற்றும் கைக்குழந்தைகளைக் கடத்திச் செல்வது அதிகரித்து வருகிறது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களை மீறி இந்தக் கடத்தல்கள் நடைபெறுகின்றன. இந்தச் சமூக அவலத்துக்கு முடிவு கட்டவும், இந்தச் செயலில் ஈடுபடுவோருக்குக் கடுமையான தண்டனை வழங்குவதற்கும், குழந்தைகள் கடத்தல் (தண்டனை) சட்டம் ஒன்று நிறைவேற்றப்படும்.

**327.** பிறக்கும் போதே ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்குச் சத்தான உணவு வழங்கிட குழந்தைகள் நலப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் ஊட்டச்சத்து நிறைந்த உணவு வகைகள் கொண்ட உணவுக் கூடைத் திட்டம் (Food Basket Scheme) செயல்படுத்தப்படும்.

**328.** பெண் சிசு படுகொலைகளைத் தடுக்க கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பெண் சிசுக் கொலை முற்றிலும் தடுக்கப்படும்.

**329.** குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டம் கட்டாயமாக – கண்டிப்புடன் அமல்படுத்தப்பட்டு குழந்தைகள் கல்வி முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தப்படும்.

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம்

**330.** தமிழகத்தில் தற்போது அரசு உதவித்தொகை பெற்று வரும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் ஆதரவற்ற மகளிர், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், திருமணமாகாத 50 வயதிற்கும் மேற்பட்ட பெண்கள், அகதிகளாகத் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும்

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் உட்பட 32 லட்சம் பேருக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித்தொகை 1000 ரூபாய் என்பது 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

## 500 இடங்களில் கலைஞர் உணவகம்

331. எந்த வித வருவாயும் இன்றி ஒருவேளை உணவுக்கும் வழியின்றித் தவிக்கும் ஏழை மக்களுக்கு மிகக் குறைந்த விலையில் உணவு வழங்கிட வேண்டும் என்ற நோக்கில் கலைஞர் உணவகம் திட்டம்அறிமுகப்படுத்தப்படும். முதல் கட்டமாக கலைஞர் உணவகம்" தமிழகம் முழுவதும் 500 இடங்களில் அமைக்கப்படும்.

332. அ.தி.மு.க. அரசு அண்மையில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 7.5 சதவிகிதம் இடஒதுக்கீடு அளித்துள்ளது. ஆனால், இது தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள குழு 10 சதவிகிதம் அளவுக்கு இடஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று பரிந்துரைத்தது. இதில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை மறுக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு மீதமுள்ள 2.5 சதவிகிதத்தைத் தனி ஒதுக்கீடாக வழங்குவது அவசியம். கழக அரசு அமைந்தவுடன் இது செயல்படுத்தப்படும்.

333. இரவு நேரங்களில் சாலை ஓரங்களில் உறங்கும் மக்களுக்கு உதவிடும் வகையில் இரவு நேரக் காப்பிடங்கள் (Night Shelter Houses) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

334. தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் முன்பு மாணவர்களுக்குச் சாதிச் சான்றிதழ்கள் அவரவர் படிக்கும் பள்ளிக் கூடங்களிலேயே வழங்கப்பட்டன. தற்போது இந்தப் பணி நடைபெறவில்லை. பள்ளிக் கூடங்களிலேயே மாணவர்களுக்குச் சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் வழங்கும் முறை மீண்டும் செயல்படுத்தப்படும்.

335. சமூகத்தில் வலியோர்களால் எளியோருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கட்டப் பஞ்சாயத்து, கந்துவட்டி மற்றும் சாதிவெறிக் கொலைகள் போன்ற நிகழ்வுகளால் பொதுமக்கள் மிகவும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் உள்துறைச் செயலாளர், சட்டத்துறைச் செயலாளர், மூத்த

காவல்துறை பெண் அதிகாரி, மூத்த பத்திரிகை ஆசிரியர், அரசு சாரா அமைப்பினர் கொண்ட உயர்நிலைக்குழு அமைத்து உரிய ஆலோசனைகள் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## இடஒதுக்கீடு

336. தமிழகத்தில் உள்ள பல்வேறு சமுதாய மக்கள், சாதிப் பெயர் மாற்றம், உள் ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து வருகின்றனர்.

சமூக நீதிக்கான போர் முழக்கத்தோடு உருவான தி.மு.கழகம், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழிநின்று அனைவரின் நலனையும் பாதுகாக்கக் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## பத்திரிகையாளர்கள் நலன்

337. பத்திரிகையாளர் உள்ளிட்ட ஊடகத் துறையினருக்கான புதிய ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்வதற்கென மும்பை உயர்நீதிமன்ற நீதியரசர் மஜிதியா அவர்கள் தலைமையில் 2011 ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. பல மாநிலங்களிலும் மஜிதியா குழுவின் பரிந்துரைகள் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், தமிழகத்தில் மட்டும் இன்னும் புதிய ஊதிய விகிதம் வழங்கப்படவில்லை. இது குறித்த கேள்வி எழுந்தபோது, அன்றைய அ.தி.மு.க அரசின் தொழிலாளர் நலத்துறை புதிய ஊதியம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தவறான அறிக்கையை மஜிதியா குழுவினரிடம் அளித்துள்ளது. அ.தி.மு.கஅரசின் இந்தப் பத்திரிகையாளர் விரோதப் போக்கைக் கண்டிப்பதோடு பத்திரிகையாளர்களுக்கான ஊதிய நிர்ணயத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மறு சீராய்வு செய்தல், பத்திரிகையாளர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், பத்திரிகையாளர்களுக்கும் நிறுவன உரிமையாளர்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பத்திரிகையாளர்களுக்கும், பொது மக்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பத்திரிகையாளர்களுக்கான குழுக் காப்பீடு, மருத்துவக் காப்பீடு, ஓய்வூதியம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்துதல், பத்திரிகையாளர்களுக்கான குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல்,

பத்திரிகையாளர் குடும்பநல நிதியை உயர்த்தித் தருதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து முடிவெடுக்க மூத்த பத்திரிகையாளர்கள், நிறுவன உரிமையாளர்கள், செய்தித்துறை – தொழிலாளர் நலத்துறை சார்ந்த அரசுப் பிரதிநிதிகள் மற்றும் காவல்துறைப் பிரதிநிதிகள் கொண்ட ஆணையம் அமைக்கப்பட்டு பத்திரிகையாளர் நலன் காக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

338. முந்தைய தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ள பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு மீண்டும் சிறப்பானதாக மாற்றி அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படும்.

339. பணியின் போது பாதிக்கப்படும் பத்திரிகையாளர்களுக்கும், சேதமுற்ற உபகரணங்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படும்.

340. மறைவெய்திடும் பத்திரிகையாளர் குடும்ப நிவாரண நிதியாக 5 லட்சம் வழங்கப்படும்.

341. மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை போன்ற முக்கிய நகரங்களில் பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

342. கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் பத்திரிகையாளர்கள் மீது பழிவாங்கும் நோக்கத்தில் போடப்பட்ட அவதூறு வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்.

## மக்கள் நல்வாழ்வு

## கொரோனாவால் உயிரிழந்தோர்க்கு இழப்பீடு

343. கொரோனா நோய்த் தொற்று தீவிரமாக இருந்த நேரத்தில் பணியில் இருந்தபோது கொரோனா தொற்று தாக்கி உயிர் இழந்த மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், நகராட்சி மற்றும் அரசு அலுவலர்கள், காவலர்கள் போன்ற முன்களப் பணியாளர்களின் குடும்பத்தார்க்கு உரிய இழப்பீடு வழங்கப்படும்.

344. மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டு CT ஸ்கேன் வசதி உள்ளிட்ட நவீன பரிசோதனைக் கூடங்கள், (Clinical Lab), புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, குழந்தையின்மை சிகிச்சைக்கான தனிப்பிரிவு, உயிர் காக்கும் உயர்

சிகிச்சைப் பிரிவு (CCU) ஆகியவை தொடங்கப்படுவதுடன், சிறுநீரகப் பாதிப்பிற்குள்ளான நோயாளிகளுக்கு இரத்தம் சுத்திகரிக்கவும் (Dialysis Centre) குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குக் குறைந்த செலவில் இரத்தம் மாற்றும் சிகிச்சை அளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

345. தொழிலாளர்கள் மிக அதிக அளவில் வசிக்கும் திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் தொழிலாளர் வைப்பு நிதி (ESI) மருத்துவமனைகள் இல்லை. எனவே, மத்திய அரசை வலியுறுத்தி ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் அமைக்க ஆவன செய்யப்படும்.

346. தமிழ்நாடு பிசியோதெரபி கவுன்சில் முழுமையாகச் செயல்பட நடவடிக்கை எடுப்பதுடன், அனைத்து வட்ட மருத்துவமனைகளிலும் இயன்முறை மருத்துவப் பிரிவு(Physiotherapy) தொடங்கப்படும்.

347. ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டுப் பெரும் வரவேற்பைப் பெற்ற உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான “கலைஞர் காப்பீட்டுத் திட்டமும்”, “வருமுன் காப்போம் திட்டமும்” அ.தி.மு.க ஆட்சியில் பயனாளிகளுக்கு உரிய வகையில் பயனளிக்கவில்லை என்கிற குற்றச்சாட்டு பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. எனவே, இவ்விரண்டு திட்டங்களும் மீண்டும் முறைப்படுத்தப்பட்டு உயிர்க் கொல்லி நோய்களான மாரடைப்பு, புற்றுநோய், சிறுநீரகப் பாதிப்பு போன்ற நோய்களுக்கு இலவசச் சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சாலை விபத்துகளுக்கும் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உடனடி மருத்துவ வசதி கிடைத்திட ஏற்பாடுகள் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி பெறுவோரின் நோய் மற்றும் மருத்துவ விவரங்கள் முறையாகப் பதிவுசெய்யப்பட்டு ஸ்மார்ட் கார்டு (Smart card) வடிவில் வழங்கப்படும்.

## புதிய உயர் சிறப்பு மருத்துவமனைகள்

348. கோவை, நெல்லை, திருச்சி மற்றும் கிருஷ்ணகிரியில் மாநில அரசின் நிதியிலிருந்து புதிய உயர் சிறப்பு மருத்துவமனைகள் கட்டப்பட்டு மூன்றாண்டுகளுக்குள் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படும்.

349. கிராம மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்க அதிக அளவில் நடமாடும் மருத்துவமனைகள் தொடங்கப்படும். மேலும், தற்போது செயல்பட்டு வரும் "108" ஆம்புலன்ஸ் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் ஆம்புலன்ஸ் வாகனங்களின் எண்ணிக்கையை முதல் கட்டமாக 2000 அளவிற்கு அதிகப்படுத்தி, மக்கள் பயன்படுத்தத் தக்க வகையில் ஓர் ஒன்றியத்திற்குக் குறைந்தது 6 என்ற எண்ணிக்கையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

350. மாவட்ட நெடுஞ்சாலைகளில் 50 கி.மீ தொலைவிற்கு ஒன்று வீதம் அவசர சிகிச்சை மருத்துவமனை அமைக்கப்படும்.

351. நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி போன்ற மலைப்பகுதி வாழ் மக்கள் உயிர் காக்கும் உயர் சிகிச்சை பெற பலமணி நேரம் பயணம் செய்து சமவெளிப் பகுதிக்குச் செல்ல வேண்டியிருப்பதைக் கருத்தில் கொண்டு நீலகிரி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைநகரங்களில் பல்நோக்கு மருத்துவமனைகள் அமைக்கப்படும்.

352. சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அனைத்து அரசு மருத்துவனைகளிலும் தனிப்பிரிவு தொடங்கப்படும்.

353. பச்சிளம் குழந்தைகளைத் தாக்கும் கொடுமையான நோய்களான மூளைக் காய்ச்சல், வயிற்றுப் போக்கு, மஞ்சள் காமாலை மற்றும் கோவிட்–19 போன்றவற்றைத் தடுக்கத் தடுப்பூசிகள் (rota virus vaccine, meningococcal vaccine, hepatitis vaccine) மாநிலஅரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படும். இந்த வசதி நூறு சதவிகிதம் குழந்தைகளுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

## சென்னையில் மூன்று நவீன அரசு மருத்துவமனைகள்

354. விரிவுபடுத்தப்பட்ட சென்னைப் பெருநகரில் ஏழை மக்களின் உடல் நலத்தையும், அதிகரித்து வரும் மருத்துவத் தேவைகளையும் கருத்தில் கொண்டு தாம்பரம், சோழிங்கநல்லூர், மதுரவாயல் ஆகிய மூன்று இடங்களில் நவீன வசதிளுடன் கூடிய புதிய அரசு மருத்துவமனைகள் கட்டப்படும்.

355. சென்னையிலும் மதுரையிலும் உள்ள அரசு மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை செய்ய வசதிகள் இருப்பதைப் போல மாவட்டங்களில் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் அனைத்திலும் இருதய அறுவை சிகிச்சை வசதிகள் செய்து தரப்படும்.

356. அரசு மருத்துவமனைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவதோடு, ஒப்பந்த நியமன முறையில் தற்போது பணியாற்றும் மருத்துவர்களும், செவிலியர்களும் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள்.

357. மருத்துவம் சார்ந்த பணியாளர்களின் தேவை, வெளிநாடுகளிலும் நம் நாட்டிலும் அதிகரித்து வருவதால் இதற்குரிய மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பட்டயப் படிப்பிற்கான(Para Medical Courses) கல்வி மையங்கள் தொடங்கப்படும்.

358. தமிழகத்தில் தற்போது தடுப்பூசி / மருந்து வழங்கும் திட்டத்தின் கீழ் 56 சதவிகித குழந்தைகளே பயன்பெற்று வருகின்றனர். தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன் 100 சதவிகிதம் குழந்தைகளுக்கும் தடுப்பூசி / மருந்து (Immunisation) கிடைக்கத்தக்க வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

359. முறையான பட்டம் பெற்றுப் பணியாற்றி வரும் ஆயுர்வேதம், சித்தா, ஹோமியோ, அக்குபஞ்சர், யுனானி மருத்துவர்களுக்கு உரிய அரசு அங்கீகாரம் வழங்கப்படும்.

360. மதுவுக்கு அடிமையானவர்கள் மது பழக்கத்திலிருந்து விடுபடவும், படிப்படியாக மது விலக்கை மேற்கொள்ளவும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் மாவட்டங்கள் தோறும் மறுவாழ்வு மையங்கள் (De-Addiction Centres) அமைக்கப்பட்டு,மது பழக்கத்திற்கு ஆளானவர்களுக்கு உரிய மனநலப் சிகிச்சைகளும் பயிற்சியும் வழங்கப்படும்.

## சுற்றுச்சூழல்

361. சென்னை மாநகரில் ஒடுகின்ற ஆறுகளான அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய், மாம்பலம் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், ஒட்டேரி நல்லா, விராங்கல் ஒடை ஆகிய ஆறுகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, சுத்திகரித்து, பின்னர் சுத்திகரிக்கப்பட்ட நீரை மேற்கண்ட ஆறுகளில் விடுவதன் மூலம், திடக்கழிவுகள் அகற்றப்பட்டு, நீரோட்டம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதன் மூலம் கொசு உற்பத்தி, கெட்ட நாற்றம் முற்றிலும் ஒழியும். மத்திய அரசில் தி.மு.கழகத்தின் சார்பில் அமைச்சர்கள் பணியாற்றியபோது கடந்த 2001 ஆம் ஆண்டில் அரசின் தேசிய நதி நீர்த் தூய்மைத் திட்டத்தின் கீழ்த் தமிழகம் முழுவதும் உள்ள நீர் நிலைகளைத் தூய்மைப்படுத்த 1300 கோடி ரூபாயும், இதில், சென்னைக்கு மட்டும் 490 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால்,

இந்தத் திட்டம் முழுமை பெறவில்லை. தற்போது தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன், இத்திட்டத்தை விரைவுபடுத்தி நிறைவேற்றப்படும்.

**362.** தமிழகம் முழுவதிலும் ஓடும் காவிரி, வைகை, தாமிரபரணி, தென்பெண்ணை, பாலாறு, வெள்ளாறு, சிறுவாணி, அக்னியாறு, பாம்பாறு, குண்டாறு, கல்லாறு, நம்பியாறு, கோதையாறு, நொய்யல், கெடிலம், பவானி, மணிமுத்தாறு, அமராவதி உள்ளிட்ட அனைத்து ஆறுகளிலும் கலக்கும் தொழிற்சாலைக் கழிவு உள்ளிட்ட அனைத்துக் கழிவுகளையும் கட்டுப்படுத்தும் வகையில் தமிழ்நாடு ஆறுகள் பாதுகாப்புத் திட்டம் (Tamil Nadu River Conservation Project) உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

**363.** தமிழகத்தில் உள்ள பொதுக் கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், அரசு உடைமைகள், அரசு அலுவலகச் சுவர்கள் ஆகியவற்றின் தூய்மையையும், சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும் வகையில், அவற்றின் மீது சுவரொட்டிகள் ஒட்டுவது, சாயப் பூச்சுகளால் எழுதுவது, எளிதில் மக்கிப் போகாத பாலிதீன் துணிகளில் அச்சிடப்பட்ட சுவரொட்டிகள், பதாகைகள் அமைத்தல் ஆகியவற்றை முற்றிலும் தடை செய்வதற்கு, ஏற்கனவே தமிழகத்தில் நடைமுறையில் உள்ள பொது இடங்கள் சிதைவுபடுத்தும் சட்டத்தில் கடுமையான திருத்தங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்படும்.

**364.** தமிழகத்தில் உள்ள பறவைகள் சரணாலயங்கள் பழவேற்காடு, வேடந்தாங்கல், கரிக்கிளி, கரைவெட்டி, உதயமார்த்தாண்டபுரம், வடுவூர், சித்திரங்குடி, கூந்தங்குளம், வெள்ளோடு, மேல்செல்வனூர், வேட்டங்குடி ஆகிய இடங்களில் சுற்றுலா வசதிகள் மேம்படுத்தப்பட்டு நீர் நிலைகளில் தேவையான நீர் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், முக்கிய பறவைகள் சரணாலயங்களில் பறவைகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளக் கூடிய வகையில் பறவைகள் ஆய்வு மையங்கள் (Ornithology Centres) அமைக்கப்படும்.

**365.** மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்' என்ற வரிகள் நம் நினைவில் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி நமக்கு நினைவூட்டும் பசுமை வரிகளாகும். மக்கள் வாழ்வில் மரம் வளர்ப்பு முக்கியமானதாகும். மனிதன் உயிர் வாழத் தேவையான பிராணவாயு (Oxygen) மரங்களின் மூலமே கிடைக்கிறது.

மேலும், காற்றில் கலக்கும் கரியமில வாயுவை உள்வாங்கிக் கொண்டு தனக்கு உணவாக மாற்றிக் கொள்வதோடு, காற்றையும் மரங்கள் தூய்மைப்படுத்துகின்றன.

தி.மு.கழக ஆட்சிக் காலங்களில் இலட்சக்கணக்கான மரங்கள் நடப்படுவது உறுதி செய்யப்பட்டது. அதுபோல் மீண்டும், தமிழகத்தில் மிக அதிக எண்ணிக்கையில் மரங்களை வளர்ப்பதற்கு உரிய திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**366.** டெல்லியில் இயக்கப்படுவது போல (CNG) எரிவாயுவில் இயங்கும் புகையில்லாப் பேருந்துகள் தமிழகத்திலுள்ள அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் படிப்படியாக இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**367.** சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுப்பதோடு தமிழகத்தின் தனிச் சிறப்புமிக்க இயற்கை வளங்களையும், பறவைகளையும், வன உயிர்களையும் பாதுகாப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மொத்த நிலப்பகுதியில் குறைந்தபட்சம் **33**% காடுகள் உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## வன ஆணையம்

**368.** தமிழகத்தில் உள்ள வன வளங்களைப் பாதுகாக்கவும், வன விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே ஏற்படும் மோதலைத் தவிர்த்து வனவாழ் உயிரினங்களைக் காப்பாற்றிடவும், வனத்துறை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பணி அம்சங்களை ஆய்வு செய்து தேவையான ஊக்குவிப்புகளை வழங்கிப் பணிப் பாதுகாப்பை ஏற்படுத்திடவும், வன வளம் சார்ந்த மற்றும் வனப்பகுதி மக்களின் அன்றாட மற்றும் நெடுங்காலப் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகள் கண்டிடும் வகையிலும் வன ஆணையம்(Forest Commission) அமைக்கப்படும், அதன் பரிந்துரைகள் தாமதமின்றி நடைமுறைப் படுத்தப்படும். மேலும், வன வளங்கள் சார்ந்த கல்வியை மேம்படுத்தும் நோக்கில் புதிய வன இயல் கல்லூரிகள் தருமபுரி, தென்காசி, கோபிசெட்டிப்பாளையம் போன்ற இடங்களில் அமைக்கப்படும்.

## விளையாட்டு

**369.** ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் தமிழ்நாட்டை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஒலிம்பிக் அகாடமிகள் திறக்கப்படும். எல்லா விளையாட்டிலும் சாதிக்கக் கூடிய விளையாட்டு வீரர்களுக்குச் சிறப்பு உயர்நிலைப் பயிற்சி, ஊக்கத்தொகை, போட்டிகளுக்குச் சென்று வர பயணச் செலவு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

**370.** சென்னையில் பிரம்மாண்டமான விளையாட்டு நகரம் அமைத்து எல்லா வகைப் போட்டிகளுக்கும் உயர்தரப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**371.** அரசு வேலைவாய்ப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு நிர்ணயம் செய்யப்படும் முழுமையாகச் செயல்படுத்தப்படுவதோடு, தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் சேர்த்துக் கொள்ளப்படும்.

**372.** விளையாட்டுத் துறையில் பதக்கங்கள் பெற்றுச் சிறந்து விளங்குபவர்களுக்குப் பரிசுகளும், அரசு வேலைவாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படும். மேலும், அவர்கள் ஓய்வு பெற்றபிறகு அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

## ஜல்லிக்கட்டு

**373.** தமிழர்களின் வீரம், பண்பாடு, கலாச்சாரத்தின் அடையாளமாகத் திகழும் ஜல்லிக்கட்டுக் காளைகளை வளர்ப்போருக்கு ஊக்கத்தொகையாக மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கப்படும்.

## சட்டமன்றம்

## சட்ட மேலவை

**374.** அரசியல் அறிஞர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள், சமூக சேவகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோர் இடம்பெற்று, அரிய ஆலோசனைகளைக் கூறத் தக்க வகையில், தமிழ்நாட்டில் மீண்டும் சட்டமன்ற மேலவையை விரைவில் கொண்டுவர உரிய அரசியல் சட்டத்திருத்தம் செய்ய வலியுறுத்துவோம்.

## நேரடி ஒளிபரப்பு

**375.** நாடாளுமன்றம் மற்றும் பல மாநில சட்டமன்றக் கூட்டங்களின் கூட்ட நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பப்படுவது போல் தமிழக சட்டப் பேரவை நிகழ்ச்சிகளும் தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

## குறைந்தது 100 நாட்கள் சட்டப்பேரவை அமர்வு

**376.** தமிழ்நாடு சட்டப்பேரவை **2011–**க்கு பிறகு அமைந்த அ.தி.மு.க ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டிலும் மிகவும் குறைந்த நாட்கள் அளவிலேயே செயல்பட்டுள்ளது. அதனால் பல மக்கள் பிரச்சினைகளுக்கு முறையான தீர்வு காணப்படவில்லை. எனவே, வரும் கழக ஆட்சியில் சட்டமன்றம் குறைந்தது **100** நாட்களுக்கு மேல் முறையாக நடக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## நிர்வாகம்

## நூறு நாட்களில் தீர்வு

377. “உங்கள் தொகுதியில் ஸ்டாலின்” என்ற தலைப்பில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாவட்டந் தோறும் பொது மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் குறித்த மனுக்களைப் பெற்றுக் கழகம் ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தீர்வு காணப்படும் என வாக்குறுதி அளித்துள்ளார்.

அந்த வாக்குறுதி அடிப்படையில் கழக அரசு அமைந்தவுடன் இதற்கென ஒரு தனித்துறை முதமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உருவாக்கப்படும். பெறப்பட்டுள்ள மனுக்களை ஆய்வு செய்ய, தொகுதி அளவில் – ஊராட்சி அளவில் முகாம்கள் அமைத்து இப்பிரச்சனைகள் குறித்து நேரடியாக விசாரணை நடத்தி நிறைவேற்றித் தரப்படும்.

## சட்டமன்றத் தொகுதிகளில் மக்கள் குறைகேட்பு முகாம்கள்

**378.** அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மக்கள் குறைகேட்கும் முகாம்கள் நடத்தப்பட்டு மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

379. தமிழகத்தில் ஆட்சி நிர்வாகம் சிறந்த முறையில் செயல்படும் வகையில் இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் மற்றும் இந்திய காவல்பணி அதிகாரிகள் மட்டத்தில் சீரமைப்பு மேற்கொள்ளப்படும்.

## புதிய மாவட்டங்கள்

380. நிர்வாக வசதிகளை மேம்படுத்திட புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட உயர்மட்டக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பெரிய பேரூராட்சிகளைப் பிரிப்பது குறித்தும் பரிசீலிக்கப்படும்.

## புதிய மாநகராட்சிகள்

381. சாலைகள், போக்குவரத்து, பொது சுகாதாரம், தூய்மைப் பணிகள், குடிநீர், பாதாள சாக்கடை போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவற்காக காஞ்சிபுரம், தாம்பரம், கடலூர், திருவண்ணாமலை, கும்பகோணம், தேனி – பெரியகுளம் - அல்லிநகரம், கரூர், நாமக்கல், காரைக்குடி, புதுக்கோட்டை, விருதுநகர் ஆகிய நகராட்சிகள் மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

மழைக் காலங்களில் வெள்ள நீர் தேங்கிப் பல நாட்கள் வடியாமல் பொது மக்களுக்குப் பல வகையிலும் தொல்லைகள் ஏற்படுவதால், தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதி முழுவதும் மழை வெள்ள நீர் வடிகால் உடனடியாக அமைக்கப்படும்.

## காவல்துறை

382. அனைத்துக் காவலர்களுக்கும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை வழங்கப்படும்.

383. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பணியின்போது காவலர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை வழங்குவதுடன், இழப்பீட்டுத் தொகை உயர்த்தி வழங்கப்படும். உயிர் நீத்தவர்கள் குடும்பத்துக்கு 1 கோடி ரூபாய் ஆறுதல் தொகை வழங்கப்படும்.

## போலீஸ் கமிஷன்

384. தமிழகத்தில் முதல் போலீஸ் கமிஷன் அமைத்து, பரிந்துரைகளைப் பெற்று, நடைமுறைப்படுத்திய பெருமை கலைஞர் தலைமையிலான தி.மு.கழக அரசையே சாரும். அதனை முன்னெடுத்துச் செல்லும் வகையில் மீண்டும் கழக அரசு அமைந்ததும், போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு ஒரு கால வரையறைக்குள் அதன் பரிந்துரைகள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

385. காவலர் குறைகளைக் கேட்டறிந்து, பரிசீலித்து அவற்றைச் சரி செய்வதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்படும்.

386. காவலர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள துறை ரீதியான சிறு தண்டனைகள் அனைத்தும் ரத்து செய்யப்படு வதுடன் அவர்கள் உரிய காலத்தில் பதவி உயர்வுகள் பெறவும் வழி வகுக்கப்படும் .

387. காவலர் பணியிடங்கள் ஆண்டுதோறும் நிரப்பப்படும். கருணை அடிப்படையிலான பணியிடங்கள் கால தாமதமின்றி வழங்கப்படும்.

388. காவலர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப் படி, இடர்காலப் படி உள்ளிட்ட சலுகைகள் உயர்த்தி வழங்கப்படும்.

389. இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணியில் சேருபவர்களும் ஏழு ஆண்டுகள் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்தவர்களும், பத்து ஆண்டுகளில் தலைமைக் காவலராகவும், இருபது ஆண்டுகளில் எஸ்.எஸ்.ஐ என பதவி உயர்வும் வழங்கப்படும்.

## ஊர்க்காவல் படையினர் நலன்

390. காவல் துறையினருக்குப் பல வகையிலும் உறுதுணையாக நிற்கும் ஊர்க்காவல் படையினரின் நலன் காக்கும் நோக்கில் அவர்களின் பணி நாட்கள் உயர்த்தப்படும். ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரிக்கப்படும்.

## நகர்ப்புற மேம்பாடு

391. சென்னை போன்ற பெருநகரங்களில் நவீன அடுக்குமாடி கார் நிறுத்தும் வசதிகள் செய்து தரப்படும்.

392. பெருந்துறை, சேலம், சங்ககிரி, திருச்சி, திருச்செங்கோடு போன்ற தமிழகத்தின் முக்கிய நகரங்களில் ஆட்டோ நகர்கள் அமைக்கப்படும்.

393. சென்னையிலும் மற்ற முக்கிய நகரங்களான மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகியவற்றிலும் நவீன வசதிகள் கொண்ட புதிய புறநகரங்களை உருவாக்கி அங்கே அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் செய்து தரப்படும்.

## குடிநீர் வசதி

394. சென்னை உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் குடிநீர் லாரிகள் மூலமாகக் கொண்டு வரப்பட்டு விநியோகம் செய்யப்படுவதால் அதிக எண்ணிக்கையில் விபத்துகள் நடக்கின்றன. ஆகவே, இதனைத் தவிர்த்துப் புதிய குழாய்கள் அமைத்து அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

## கிராமங்களில் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்க சிறப்புத் திட்டம்

395. அனைத்துக் கிராமங்களிலும் தூய்மையான குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்படும். தமிழகமெங்கும் கிராமங்களில் பல ஆண்டுகளுக்குமுன் கழக ஆட்சிக் காலத்தில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டன. இந்தக் குழாய்கள் எல்லாம் காலாவதியாகி பல ஆண்டுகள் முடிந்த பிறகும் அகற்றப்பட்டு புதிய குழாய்கள் பதிக்கப்படாததால் இவற்றின் வழியே தரப்படும் குடிநீரின் தூய்மையை உறுதிப்படுத்த முடியாது. எனவே, இந்த அத்தியாவசியத் தேவையைக் கருத்தில் கொண்டு அனைத்துக் கிராமங்களிலும் உள்ள பழுதடைந்த, காலாவதியான குடிநீர்க் குழாய்கள் அகற்றப்பட்டு புதிய குழாய்கள் அமைத்திட சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

396. தி.மு.கழக ஆட்சிக் காலங்களில் மீஞ்சூர், நெம்மேலி, நரிப்பையூர் ஆகிய மூன்று இடங்களில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், நரிப்பையூரில் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் அ.தி.மு.க ஆட்சியில் பராமரிப்பின்றிக் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மீண்டும் தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன், அப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவைக்குத் தட்டுப்பாடு எதுவும் ஏற்படாத வகையில் நரிப்பையூர் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுவதோடு, அனைத்துக் கடலோர மாவட்டங்களிலும் பொருத்தமான இடங்களில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

397. பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் குடிநீர்க் குழாய் இணைப்புக்கு விண்ணப்பம் கொடுத்த 15 நாட்களில் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## வீட்டு வசதி

**398.** குடிசைகளே இல்லாத தமிழகம் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தோடு தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட திட்டம், “கலைஞர் வீடு வழங்கும் திட்டம்”. 2010 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தைப் பெயர் மாற்றம் செய்ததோடு, மேலும் தொடராமல் அ.தி.மு.க அரசு முடக்கி விட்டது. இத்திட்டத்தைப் புதுப்பித்துக் கிராமப் புறங்களில் கான்கிரீட் வீடு கட்டுவதற்கான மானியத் தொகை ஒரு வீட்டிற்கு 4 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே தி.மு.கழக ஆட்சியில் அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட அத்தனை குடும்பங்களுக்கும் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும். கட்டட வேலை முடியாமல் பாதியில் நிற்கும் அனைத்து வீடுகளும் முழுமையாகக் கட்டித் தரப்படும். இந்த வீடுகளைப் பெற சிலருக்குத் தகுதியில்லை என்ற நிபந்தனையும் மறுபரிசீலனை செய்யப்படும்.

**399.** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசை மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றில் மாதத் தவணைமுறை (Hire Purchase) திட்டத்தில் ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு உண்டான விற்பனைத் தொகை முழுவதையும் செலுத்தி முடித்துப் பல ஆண்டுகளாகியும் வீடுகளின் விற்பனைக் கிரயப் பத்திரம் (Sale deed) வழங்கப்படாதவர்களின் பிரச்சினை குறித்து, உரிய முறையில் பரிசீலனை செய்து அவர்களுக்கு விற்பனைக் கிரயப் பத்திரம் (Sale deed) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சமத்துவபுரங்கள்

**400.** சாதி, மத பேதங்கள் அற்ற எடுத்துக்காட்டு கிராமங்களை அமைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட 240 தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் கழக ஆட்சி முடிந்த 2011–க்கு பிறகு கட்டுமானப் பணிகள் நிறைவேறிய சில சமத்துவபுரங்கள் இன்றைய ஆட்சியாளர்களால் முறையாக ஒதுக்கீடு செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டு அதன் விளைவாகச் சில சமத்துவபுரங்கள் சமூக விரோதிகளின் கூடாரமாகிவிட்டது. கழக ஆட்சி அமைந்தவுடன் அந்தக் குறிப்பிட்ட சமத்துவபுரங்கள் சீர் செய்யப்பட்டு, அவை உருவானதன் நோக்கம்

நிறைவேறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் புதிய சமத்துவபுரங்கள் உருவாக்கப்படும்.

401. ஆதிதிராவிட மக்களுக்கான தொகுப்பு வீடுகள் திட்டம், வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள ஏழை எளிய மக்களுக்கான இந்திரா நினைவு வீட்டு வசதித் திட்டம் மற்றும் குடிசை மாற்றுவாரிய வீட்டு வசதித் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் கட்டித்தரப்பட்டு, 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழுதடைந்த வீடுகளைச் சீரமைத்தோ அல்லது புதியதாகவோ அமைத்துத் தரப்படும்.

## வீட்டு மனைகளுக்குப் பட்டா

402. பல்லாண்டு காலமாகக் கிராம நத்தம் பகுதிகளில் வீடமைத்து வசித்து வரும் பலருக்கும் இதுவரை மனைப் பட்டா கிடைக்காத நிலை உள்ளது. இப்படிப் பட்டா இல்லாதவர்கள் நெடு நாட்களாகப் பட்டா வழங்கக்கோரி வேண்டுகோள் வைத்து வருகின்றனர். எனவே, இந்த அடிப்படைப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கில் கிராம நத்தத்தில் நீண்ட காலமாக உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு அடிமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

நகர்ப்புறங்களில் ஆட்சேபனை இல்லாத இடங்களில் குடியிருப்போருக்கு மனைப் பட்டா வழங்க ஆவன செய்யப்படும்.

403. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை வேளையில் பால் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட இருப்பதால் பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலை முழுமையாக ஆவின் நிறுவனத்திடமே விற்பனை செய்யும் வாய்ப்பு உருவாக்கப்படும். மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பாலுக்கு உரிய விலையை நிர்ணயம் செய்வதற்கு ஆவின் நிறுவன அதிகாரிகள், அரசுச் செயலாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்படும்.

404. அதிக அளவில் பால் சார்ந்த பொருள்களை உற்பத்தி செய்யவும், பிற மாநிலங்களில் சந்தைப்படுத்தவும், அதிநவீன தொழில்நுட்பம் மிக்கதாக ஆவின் நிறுவனம் மாற்றப்படும். அதிக எண்ணிக்கையில் பால் கூட்டுறவு சங்கங்களும், பால் பொருள் உற்பத்தியைப் பெருக்கிடத் தொழிற்கூடங்களும் உருவாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## இந்து சமய அறநிலையத்துறை

### முக்கிய மலைக்கோயில்களில் கேபிள் கார் வசதி

405. முக்கிய மலைக்கோயில்களான திருத்தணி, சோளிங்கர், திருநீர்மலை, திருச்சிமலைக்கோட்டை, திருச்செங்கோடு, போன்ற கோயில்களில் கேபிள்கார் வசதிகள் அமைக்கப்படும்.

### கிராமக் கோயில் பூசாரிகளுக்கு நிதி உதவி

406. தி.மு.க. அரசு காலத்தில் உருவாக்கப்பட்ட பூசாரிகள் நல வாரியத்தில் இணைந்துள்ள கிராம கோயில் பூசாரிகளுக்கு தி.மு.க. அரசினால் மாதந்தோறும் ஊதியமாக 2000 ரூபாய் வழங்கப்படும். 60 வயதில் ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் 3 ஆயிரம் ரூபாய் என்பது 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

407. திருவண்ணாமலையில் கிரிவலப் பாதை கான்கிரீட் சாலையாகத் தரம் உயர்த்தப்படும். அத்துடன், அந்தச் சாலையின் இருமருங்கிலும் நிழல் தரும் அதிகமான மரங்களும் செடிகளும் வளர்க்கப்படும். கிரிவல மலைப் பகுதியில் மரக்கன்றுகள் நட்டுப் பசுமையான சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

408. திருவண்ணாமலை தேரோடும் வீதி முழுவதும் சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றப்படும்.

409. திருவண்ணாமலை தேரோட்டத்தின்போது மேலேயுள்ள மின் கம்பிகளால் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களையும் வகையில் அக்கம்பிகள் தரைமட்டத்திற்கு கீழ் புதைக்கப்பட்டு புதைவட மின் பாதையாக மாற்றித் தரப்படும்.

410. திருவண்ணாமலை மலைப்பகுதி முழுவதும் மரக்கன்றுகள் நடப்பட்டுப் பசுமைக் காடுகள் வளர்த்திட ஆவன செய்யப்படும்.

411. தமிழகத்தின் அனைத்துக் கோயில்களிலும் உள்ள தெப்பக்குளங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் தூர்வாரப்பட்டு நீர் நிரப்பப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

412. திராவிடர் கட்டடக்கலைச் சின்னங்களாக விளங்கும் தமிழகக் கோயில்களின் பழைமை மாறாமல் அவை புதுப்பிக்கப்படும்.

413. கோயில்களில் தமிழில் அர்ச்சனைகள் செய்யும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

414. தி.மு.கழக அரசு 1989ல் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் அமைத்திருந்த இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி கோயில்களின் நிர்வாகம் மேலும் சிறப்புடன் நடைபெறுவதற்குத் தகுந்த அதிகாரங்களுடன் கூடிய சட்டரீதியான உயர்நிலை ஆலோசனைக் குழு (A High Level Statutory Advisory Committee) அமைத்துச் செயல்படுத்தப்படும்.

## ஆலயங்கள் குடமுழுக்கு

415. தமிழகம் முழுவதும் உரிய காலம் கடந்தும் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்படாத கிராமக் கோயில்கள் உள்ளிட்ட அனைத்துக் கோயில்களிலும் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்படும். இதற்காகக் கழக அரசு 1000 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்யும்.

416. இந்து சமய அறநிலையத்துறை கோயில்களில் பணியாற்றும் பகுதிநேர மற்றும் ஒப்பந்த முறை பணியாளர்கள் அனைவரின் பணிகளும் வரன்முறைப்படுத்தபட்டு முழு நேர அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு காலமுறை ஊதியம், இதர படிகள் மற்றும் ஓய்வூதியம் முதலியன வழங்கப்படும்.

## 14 ஆண்டுகளாக காத்திருக்கும் 205 பேருக்கு அர்ச்சகர் பணி நியமனம்

417. தமிழக அறநிலையத் துறையின் கீழ் உள்ள இந்து சமயத் திருக்கோயில்களில் தகுதி வாய்ந்த பயிற்சி பெற்ற அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என, கழக ஆட்சிக் காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 23.5.2006 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையை நடைமுறைப்படுத்திட நீதி அரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு; அக்குழு வழங்கிய பரிந்துரைகள் அடிப்படையில் இந்துக்களில் 18 முதல் 24 வயது வரை உள்ள தகுதி வாய்ந்தவர்களை அர்ச்சகர்களாகத் திருக்கோயில்களில் நியமனம் செய்வதற்காக, சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள் திருவண்ணாமலை, மதுரை, திருச்செந்தூர், பழனி ஆகிய இடங்களிலும்; வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள் திருவல்லிக்கேணி, திருவரங்கம் ஆகிய இடங்களிலும் உரிய முறையில் 2007 முதல் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பயிற்சி பெற்றவர்களில் ஆதிதிராவிடர்கள் 34 பேர், பிற்படுத்தப்பட்டோர் 76 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 55 பேர், இதர வகுப்பினர்

42 பேர் என மொத்தம் 207 பேர் ஆவர். இடையில் இத்திட்டத்தில் ஏற்பட்ட நீதிமன்ற வழக்குகளால் இவர்களை நியமனம் செய்வதில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. பின்னர், இவர்களில் 2018இல் ஒருவரும், 2020ல் ஒருவரும் என இருவர் மட்டுமே இதுவரை நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய 205 பேரும் அமைய இருக்கும் கழக அரசில் திருக்கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவார்கள். இவர்களது நியமனத்திற்குத் தேவையான வயது உச்சவரம்புச் சலுகை அளிக்கப்படும். இது போன்ற பயிற்சி அளிப்பதும் அப்பயிற்சியில் தேர்வு பெற்றவர்களைத் திருக்கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிப்பதும் கழக அரசு மூலம் தொடரும்.

## ஆன்மிகச் சுற்றுலா நிதியுதவி

418. தமிழகத்தில் உள்ள இந்து சமய மக்களின் வழிபாட்டு உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் அவர்கள் இராமேஸ்வரம், காசி, கேதார்நாத், பத்ரிநாத், திருப்பதி, பூரி ஜகன்னாதர் ஆலயம் முதலிய திருக்கோயில்கள் ஏதேனும் ஒன்றுக்கு ஆன்மிகச் சுற்றுலா செல்வதற்கும்; இத்திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு ஒருமுறை பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களின் பயணத்திற்காக அதிகபட்சம் 25 ஆயிரம் ரூபாய் வரை ஒரு லட்சம் பேருக்கு நிதியுதவிகள் வழங்கப்படும். இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசு சுற்றுலா துறை மூலமாகச் செயல்படுத்தப்படும்.

## வள்ளலார் சமரச சன்மார்க்க சங்கம்

419. சாதி, சமய நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் அருட்பிரகாச வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கப் போதனைகளைப் போற்றும் வகையில் வடலூரில் ஒரு வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கப்படும்.

420. மசூதிகள், தேவாலயங்கள் ஆகியவைகளைச் சீரமைப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

## புனித நகரங்களில் சுற்றுலா வளர்ச்சி

421. புனித நகரங்களான பழனி, திருத்தணி, திருவண்ணாமலை, திருவரங்கம், திருச்செந்தூர், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, சிதம்பரம், நாகப்பட்டினம், குற்றாலம், நாகூர், வேளாங்கண்ணி மற்றும் வடலூர் ஆகியவற்றிற்குப் பக்தர்கள் சுற்றுலா செல்லும் வகையில் பேருந்து நிலையங்கள், தங்கும் இடங்கள் முதலியவை நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

## துறைமுகம்

## சென்னை துறைமுகம் – திருவொற்றியூர் கடல்வழி மேம்பாலம்

422. சென்னை துறைமுகத்திற்குச் செல்லும் அணுகுசாலைகள் மேம்படுத்தப்பட வேண்டியதைக் கருத்தில் கொண்டும், துறைமுகத்தை ஒட்டியுள்ள மாநகரப் பகுதிகளில் உள்ள சாலைகளில் தற்போது காணப்படும் கடும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டும், சென்னை துறைமுகத்திலிருந்து, மணலி சாலை – திருவொற்றியூர் சந்திப்பிற்கு, கடல் வழியாக மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும்.

## போக்குவரத்து வசதிகள்

423. அரசு மற்றும் தனியார் பயணிகள் போக்குவரத்துகளில் புவியிடங்காட்டி (GPS) வசதி செய்யப்பட்டு சிறப்பு உதவிக்கான தொலைபேசி எண்கள் ஒதுக்கீடு (Help line) செய்யப்படும்.

## கொடைக்கானல் பழனி மலைகள் இடையே கேபிள்கார் போக்குவரத்து

424. ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் பழனி மற்றும் கொடைக்கானல் இடையே உலகத் தரம் வாய்ந்த கேபிள்கார் வசதி அமைக்கப்படும்.

425. அனைத்து நகராட்சி, மாநகராட்சி பேருந்து நிலையங்களும் தரம் உயர்த்தப்பட்டு, அங்குப் பெண் பயணிகளுக்கு வசதியாகக் கழிப்பிடம், குளியல்அறை ஆடை மாற்றும் அறைகள் மற்றும் தாய் மார்கள் குழந்தைகளுக்குப் பாலுட்டும் அறைகள் தனியே அமைக்கப்படும்.

426. தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் சாதாரண பேருந்துகள் செல்ல இயலாத கிராமப் புறங்களிலிருந்து விவசாயிகள், தொழிலாளர்கள், பள்ளிக்கூட மாணவர்கள், ஆகியோர் பயணம் செய்வதற்கு வசதியாக மினி பஸ் உரிமம் வழங்கப்பட்டுப் பேருந்துகள் இயக்கப்பட்டுவந்தன. ஆனால், அ.தி.மு.க ஆட்சியில் இத்திட்டம் அவர்களுடைய கட்சியின் சின்னத்தை விளம்பரப்படுத்துவதற்கு மட்டுமே

பயன்படுத்தப்பட்டது. மீண்டும், தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப கிராம மக்கள் பெரிதும் பயன் அடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு நிறைவேற்றப்படும்.

## பேருந்து கட்டணம் சீரமைப்பு

**427.** அரசு போக்குவரத்துக் கழகங்கள் லாபத்தில் இயங்குவதற்காக தி.மு.க குழு 2018 இல் தமிழக அரசுக்கு அளித்த பரிந்துரைகள் செயல்படுத்தப்படும். மேலும், பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பேருந்து பயணக் கட்டணங்கள் சீரமைக்கப்படும்.

**428.** அனைத்து அரசுப் பேருந்துகளிலும் பயணம் செய்வோர் விபத்தில் சிக்கும்போது உரிய இழப்பீடு பெறும் வகையில் காப்பீட்டுத் திட்டம் திருத்தப்பட்டுச் செயல்படுத்தப்படும்.

## சாலைப் போக்குவரத்து

**429.** தி.மு.கழக ஆட்சிக் காலத்தின்போது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட விக்கிரவாண்டி – கும்பகோணம் – தஞ்சாவூர் நான்கு வழிச்சாலைத் திட்டம் விரைந்து நிறைவேற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**430.** தமிழகத்திலுள்ள முக்கிய இருவழிச் சாலைகள் நான்குவழிச் சாலைகளாகவும், நான்கு வழிச்சாலைகள் ஆறு வழிச் சாலைகளாகவும், போக்குவரத்துப் பயன்பாட்டிற்காகப் படிப்படியாக மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**431.** போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் தமிழகத்தில் தேவைப்படும் நகரங்களில் புறவழிச்சாலைகள் அமைக்கப்படும்.

**432.** சென்னை, கோவை, திருச்சி, மதுரை, நெல்லை போன்ற மாநகரங்களில் போக்குவரத்து நெருக்கடி பெரிதும் உருவாகியுள்ள பகுதிகளில் பறக்கும் சாலைத் திட்டம் (Elevated Highway) செயல்படுத்தப்படும்.

**433.** தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு இதுவரை நிறைவேற்றப்படாமல் உள்ள சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவாக்கம், குமரி வரை முழுமையாக நிறைவேற்றப்பட முழு முயற்சி மேற்கொள்ளப்படும்.

**434.** மத்திய அமைச்சரவையில் தி.மு.கழகம் பங்கேற்றிருந்தபோது சென்னை முதல் கன்னியாகுமரி வரை ஆறு வழிப்பாதை அமைப்பதற்குக் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு ஆறு வழிச்சாலைக்கான மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே, இனிமேலும் எந்தவிதத் தாமதமும் இன்றி ஆறு வழிப் பாதைத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலைத் துறையைத் தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

**435.** தமிழகத்தில் வளர்ந்து வரும் பெருநகரங்களில் உருவாகியுள்ள போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த வசதிகள் கொண்ட புதிய பேருந்து நிலையங்களும் அவற்றை இணைத்திட புறவழிச்சாலைகளும் அமைக்கப்படும்.

## சென்னையில் போக்குவரத்துத் துறை மேம்பாடு

**436.** தி.மு.க. அரசினால் சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகத் தொடங்கப்பட்ட மேம்பாலங்கள் பல இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. இந்த மேம்பாலங்கள் எல்லாம் துரிதமான நடவடிக்கையின் மூலம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

**437.** திருவான்மியூரிலிருந்து மாமல்லபுரம் வரை பறக்கும் இரயில் செல்வதற்கு புதிய பாதை அமைக்கப்படும்.

**438.** பயணிகள் போக்குவரத்திற்காக எண்ணூரிலிருந்து சென்னை சென்ட்ரல் வரையிலும்; தீவுத்திடலிலிருந்து மாமல்லபுரம் வரையிலும்; பக்கிங்காம் கால்வாய் சீரமைக்கப்படும்.

**439.** சிறுசேரி பகுதியில் வெளியூர் செல்லும் நவீன பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

## ரயில் போக்குவரத்து

## தமிழ்நாட்டில் சரக்குரயில் போக்குவரத்து நெடும்பாதை

440. விஜயவாடாவிலிருந்து சென்னை, எண்ணூர், தூத்துக்குடி துறைமுகங்களுக்குத் தனித்துவமான சரக்கு இரயில் போக்குவரத்து நெடும்பாதை விரைவில் அமைத்திட மைய அரசினை வலியுறுத்துவோம்.

## திண்டுக்கல் – கம்பம் – கூடலூர் புதிய ரயில் பாதை

441. திண்டுக்கல் – கம்பம் – கூடலூர் வழித்தடத்தில் ஒரு புதிய அகல ரயில் பாதை அமைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்துவோம். மத்திய அரசு அதற்குத் தயாராக இல்லையெனில் ரயில்வே துறையிடம் இருந்து தடை இல்லாச் சான்று பெற்று மாநில அரசு இந்த முக்கியமான ரயில் பாதைத் திட்டத்தை நிறைவேற்றும்.

## 442. புதிய இரயில் பாதைத் திட்டங்கள்

- திருக்குவளை– நாகப்பட்டினம்,
- திருவாரூர் – திருத்துறைப்பூண்டி – காரைக்குடி
- தஞ்சாவூர் –ஒரத்தநாடு– பட்டுக்கோட்டை,
- மன்னார்குடி – மதுக்கூர் – பட்டுக்கோட்டை,
- காரைக்குடி – இராமநாதபுரம் – தூத்துக்குடி,
- மதுரை – தேனி–போடி,
- அரியலூர் – தஞ்சாவூர்
- கும்பகோணம் – அரியலூர் / ஜெயங்கொண்டம் – விருத்தாசலம்
- மதுரை–மேலூர்–காரைக்குடி,
- மதுரை–அருப்புக்கோட்டை–தூத்துக்குடி,
- ஆவடி–திருப்பெரும்புதூர் – கூடவாஞ்சேரி,
- பேரளம் – காரைக்கால்,
- ஈரோடு–பழனி
- மேட்டுப்பாளையம்–சத்தியமங்கலம்–கோபிசெட்டிபாளையம்
- வண்டலூர் – வாலாஜாபாத்

ஆகிய ஊர்களுக்கிடையே புதிய அகல ரயில்பாதைத் திட்டங்களை விரைந்து நிறைவேற்ற மத்திய அரசைத் தி.மு.கழகம் வலியுறுத்தும்.

443. சென்னை ஐ.சி.எப் ரயில்பெட்டி தொழிற்சாலையின் இரண்டாவது அலகு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. ஆனால், இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மத்திய அரசைத் தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

444. ரயில் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் சேவையை மேம்படுத்திடும் வகையில் ஆள் இல்லாத லெவல் கிராசிங்கில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க, ஆங்காங்கே பாலங்கள் கட்டப்படவும் தானாகவே இயங்கும் அறிவிப்பு ஒலி இயந்திரம் நிறுவப்படவும் வேண்டுமென்று மத்திய அரசைத் தி.மு.கழகம் வலியுறுத்தும்.

## மெட்ரோ ரயில்

445. திரிசூலம் முதல் வண்டலூர் வரையிலும், திருமங்கலம் – முகப்பேர் – அம்பத்தூர் வரையிலும், கத்திப்பாரா முதல் பூந்தமல்லி வரையிலும், மெட்ரோ ரயில் திட்டம் விரிவுபடுத்தப்படும். மேலும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும் மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேற்றப்படும்.

446. சென்னை மெட்ரோ ரயிலில் கல்லூரி மாணவர்களுக்கு கட்டணச் சலுகை வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

## விமானப் போக்குவரத்து

447. மதுரை விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக முறைப்படி அறிவிக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதோடு, சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய விமான நிலையங்கள் நவீன முறையில் விரிவாக்கம் செய்யப்பட மத்திய அரசைத் தி.மு.கழகம் வலியுறுத்தும்.

## புதிய விமான நிலையங்கள்

448. வேலூர், கரூர், ஒசூர், இராமநாதபுரம் ஆகிய நகர்களை மையமாகக் கொண்டு பெருகி வரும் பொருளாதார வளர்ச்சியை கருத்தில் கொண்டு இங்கெல்லாம் புதிய விமான நிலையங்கள் அமைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

## கலை மற்றும் பண்பாடு

449. தொன்மையான தமிழர் வாழ்வியலை காட்சிப்படுத்தும் வகையிலான அருங்காட்சியகம் ஒன்றை உலகளாவிய ஆய்வாளர்களையும் பார்வையாளர்களையும் ஈர்க்கும் தரத்தில் சிவகங்கையில் உருவாக்கப்படும்.

450. கல்விக் கூடங்களில் நாட்டுப்புறக் கலைகளை பயிற்றுவிப்பது, நாட்டுப்புறக் கலைகளை அரசு நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக்குவது, ஆண்டுக்கொரு முறை அரசின் சார்பில் நாட்டுப்புறக் கலை விழாக்களை நடத்துவது ஆகியவற்றின் மூலம் இக்கலைகளையும், கலைஞர்களையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

451. மக்கள் தொகையில் அறுபது சதவிகித மக்களின் நலனுக்காக கழக ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் உள்ளிட்ட பல்வேறு நலவாரியங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் சரிவரச் செயல்படவில்லை. நாட்டுப்புறக் கலையை நலிவிலிருந்து மீட்டு மேம்படுத்தி, நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதோடு, அவர்களுக்கான ஒய்வூதியத்தையும் உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

452. ஆண்டுதோறும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் ஒன்றிய அளவிலும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் அனைத்து வகை விளையாட்டுப் போட்டிகளையும் நடத்திப் பரிசுகள் வழங்குவதோடு நாட்டுப்புறக் கலைஞர்களின் கலாச்சாரக் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படும்.

## நினைவுச் சின்னங்கள்

## திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம்

453. தமிழகம் – சாதி, மத பேதங்கள் அற்ற பிறப்பால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமத்துவமும், சமதர்மமும் மலர்ந்து மணம் வீசிடும் எழுச்சி பெற்ற மாநிலமாக திகழ்வதற்கும் இந்திய துணைக் கண்டத்தில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய அளவிற்கு இன்று நிமிர்ந்து நிற்பதற்கும், அடித்தளமான திராவிடப் பேரியக்கத்திற்கு வேரூன்றி அதற்கு அரும்பெரும் உழைப்பெனும் நீரூற்றி ஆலமரமாய் இன்று வளர்ந்து

நிற்பதற்குக் காரணமான டாக்டர் சி. நடேசனார், சர். பிட்டி தியாகராயர், டாக்டர் T M நாயர், ஆகியோரின் சிறப்புகள், பெருமைகளை எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து பெருமிதமும், இன உணர்வும் பெறுகின்ற வகையிலும் இம்மூன்று தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, இவர்கள் காலத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகள், திராவிட இயக்க சரித்திர நிகழ்வுகள் ஆகியவற்றைத் தாங்கி ஒரு வரலாற்றுச் சின்னமாய் அமைகின்ற அளவிற்கு, திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் தலைநகர் சென்னையில் அமைக்கப்படும்.

**454.** ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் தளகர்த்தர் பொல்லானுக்கு ஈரோட்டிலும், வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்று தன் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக் கொண்டு வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கில் குதித்து அதைத் தகர்த்துத் தன்னுயிரைத் தியாகம் செய்த வீராங்கனை குயிலிக்கு சிவகங்கையிலும் சிலைகள் நிறுவப்படும்.

**455.** வெள்ளையர்களை எதிர்த்து முதன்முதலில் தீரமாய்ப் போரிட்ட மாவீரர்கள் வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் ஆகியோருக்குச் சென்னையில் சிலைகள் நிறுவப்படும்.

**456.** சென்னை மாகாணத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் தமிழர் திரு. பி.சுப்பராயன். இவர் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் இட ஒதுக்கீட்டு முறையே சென்னை மாகாணத்தில் நடைமுறைக்கு வந்தது. மிகப் பெரிய செல்வந்தரான இவர் தனது சொத்துகளில் பெரும் பகுதியை ஏழைகளுக்கு இலவசமாக வழங்கியவர். நாடாளுமன்ற உறுப்பினராகவும், மத்திய அமைச்சராகவும் மாநில ஆளுநராகவும் பணியாற்றி உள்ள இவரது பணிகளை நினைவுகூரும் வகையில் திரு. பி. சுப்பராயன் அவர்களுக்கு நாமக்கல் நகரில் மணி மண்டபம் அமைக்கப்படும்.

**457.** தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு மயிலாடுதுறையில் சிலை நிறுவப்படும்.

## தொல்பொருள் ஆய்வு

**458.** உலகிலேயே தொன்மையான இனமாகிய தமிழ் மக்களின் நீண்ட நெடிய வரலாற்றில், இன்றைய வளர்ச்சியடைந்த சமுதாயம் பயன்படுத்துகின்ற அனைத்தையும் 2500 ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்து, பயன்படுத்தி, நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கிய இம்மண்ணின் கடந்த காலப் பெருமைகளைப் பறைசாற்றும் பல பொருட்கள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் கீழடி, ஆதிச்சநல்லூர், கொற்கை போன்ற பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன; இத்தகைய பழம்பெரும் பாரம்பரியத்தின் அடையாளமாகத் திகழும் அரிய பொருட்களைப் பாதுகாத்திட அந்தந்தப் பகுதியில் அருங்காட்சியங்கள் அமைக்கப்படும்.

459. கர்நாடக மாநிலம் மைசூரில் உள்ள இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் அலுவலகத்தில் உள்ள கல்வெட்டுகள், தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட நடவடிக்கை மேற்கொள்வதுடன், அவற்றை உரிய வகையில் பதிப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகைய கல்வெட்டுகள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட உரிய வசதிகள் செய்யப்படும்.

## பேரிடர் மேலாண்மை

**460.** குறுஞ் செய்திகள் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் ஒரே சமயத்தில் அனைத்து மக்களுக்கும் புயல், வெள்ளம் உள்ளிட்டபேரிடர் குறித்த முன்னெச்சரிக்கைச் செய்திகள் கிடைக்கும் வகையில் தக்க தொழில்நுட்ப வசதிகள் உருவாக்கப்படும்.

**461.** கனமழை மற்றும் வெள்ளப் பேரிடர் காலங்களில் அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடுகின்ற காவல் நிலையங்கள், வருவாய் அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகளில் தடையற்ற மின்சாரத் தேவைக்கு ஜெனரேட்டர் வசதி செய்து தரப்படும்.

**462.** சென்னையில் **2015** மற்றும் **2020** ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கடும் பாதிப்புக்கு ஆளாயின. அ.தி.மு.க அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது. இந்நிலையில், வெள்ளப் பாதிப்பினால் அவதியுற்ற பொதுமக்களைக் காப்பாற்ற பல

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், ஆயிரக்கணக்கான இளைஞர்களும் உடனடியாக முன் வந்து பொதுமக்களைக் காப்பாற்றியதோடு, அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, உடனடி மருத்துவ சிகிச்சை கிடைக்கவும் உதவினர். பேரிடர் நேரத்தில் சென்னை மக்களின் மனிதாபிமான நடவடிக்கைகள், உலக மக்கள் பலராலும் வியந்து போற்றப்பட்டன. மீட்புப் பணியில் ஈடுபட்ட பல தனிநபர்களும், தொண்டு நிறுவனங்களும் பேரிடர் மீட்புப் பணிகளில் முழுப் பயிற்சி பெற்றவர்களாக இல்லாவிட்டாலும், தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் பொதுமக்களைக் காப்பாற்றிய அவர்களது செயல் பாராட்டுக்குரியதாகும். எனவே, பேரிடர் மீட்புப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முன்வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனிமனிதருக்கு அரசுத் துறைகளின் மூலம் உரியபயிற்சி அளித்து, அவர்களுடைய தொண்டு மனப்பான்மைக்கு உதவி ஊக்கமளித்திட தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் மூலம் சிறப்பான திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

## கிராமப்புற வளர்ச்சி

**463.** தமிழகக் கிராமப்புறங்களில் கழிப்பிட வசதிகள் உருவாக்கப்படாத காரணத்தால், வெட்டவெளியைக் கழிப்பிடமாகப் பயன்படுத்தும் பழக்கத்துக்கு மக்கள் ஆளாகி உள்ளனர். இதனால், பொதுச் சுகாதாரத்துக்கு ஊறு ஏற்படும் வாய்ப்பு உள்ளதைக் கருத்தில் கொண்டு, தமிழகத்திலுள்ள அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், குடிசைவீடுகள் நிறைந்த பகுதிகளில் பொதுக் கழிப்பிடங்களை அமைத்து அவற்றின் தொடர் பராமரிப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மொத்தத்தில் முழுமையான சுகாதார மயமான மாநிலமாகத் தமிழகம் விளங்க தி.மு.கழகம் முழு முயற்சிகள் மேற்கொள்ளும்.

**464.** தமிழ்நாடு கிராமப்புற மேம்பாட்டு நிதியம் உருவாக்கப்பட்டு கிராமப்புற மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் தரப்படும்.

**465.** கிராமப்புறங்களில் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்க இளைஞர்களுக்கு எலக்டிரிசியன், பிளம்பர் போன்ற தொழில் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, கால்நடைகளைப் பாதிக்கும் கோமாரி போன்ற நோய்கள் குறித்துக் கிராமமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அந்தந்தத் துறை சார்ந்த நிபுணர்களை அழைத்துப் பயிற்சிகளும் அளிக்கப்படும்.

**466.** தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமங்கள், மலையடிவாரக் கிராமங்கள் மற்றும் மலைமேல் உள்ள கிராம மக்களுக்குச் சாலை, மின்சார வசதி, வீட்டு வசதி, மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி, குடிநீர், கல்வி போன்ற வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும்.

## சுய வேலைவாய்ப்புக் குழுக்கள்

**467.** அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகியவற்றுக்குப் புத்துயிர் ஊட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு இல்லாத பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரிகள் கொண்ட சுய வேலைவாய்ப்புக் குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்களின் மூலம் கிராமங்களுக்கான அடிப்படைக் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## கட்டடத் தொழில்

**468.** முக்கியமான கட்டுமானப் பொருள்களான சிமெண்ட், கம்பி, செங்கல், மணல், மரம் போன்ற பொருள்களை அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் கொண்டு வந்து பொதுமக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க தி.மு.கழக அரசு ஆவனசெய்யும்.

**469.** நிலங்களுக்கும், வீட்டு மனைகளுக்கும் பத்திரப் பதிவுத் துறை நிர்ணயம் செய்யும் வழிகாட்டி மதிப்பீட்டை (Guideline Value) அ.தி.மு.க அரசு பன்மடங்கு உயர்த்தியுள்ள காரணத்தால் வீடு கட்டும் தொழிலில் ஈடுபடுவோரும் பெருமளவில் பாதிப்புக்கு ஆளாகியிருப்பதோடு, ஏற்கனவே வீடு கட்டும் தொழிலில் செலவிடப்பட்ட முதலீடுகளும் முடங்கிப் போய் பணப் புழக்கம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அதுபோல, கட்டுமானப் பொருள்களான இரும்பு, மரம், மின் இணைப்புப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்தின் விற்பனையும் முடங்கிப்போய் அதன் விளைவாக வணிகர்களும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இந்த நிலையைப் போக்க வழிகாட்டு மதிப்பீட்டை நியாயமாக நிர்ணயிப்பதற்கு இத்துறைகள் சார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டு, அக்குழுவினரிடம் அறிக்கை பெற்றுக் கட்டுமானத் தொழிலில் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தீர்க்கப்படும்.

**470.** குடியிருப்புகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிகக் கட்டடங்கள், ஆகியவை கட்டப்படுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பித்த 60 நாட்களுக்குள் ஒற்றைச் சாளரமுறையில் (Single Window System) அனுமதி வழங்கப்படும். அடுக்கு மாடி கட்டடங்களில் சூரிய மின்சாரம், மழைநீர் அறுவடை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்குச் சாய்வு தள மேடை அமைப்பது கட்டாயமாக்கப்படும். கட்டட அனுமதிக்கான கட்டணம் சீரமைக்கப்படும்.இரத்த சொந்தங்களுக்குள் சொத்துகளை மாற்றும்போது குறைந்த கட்டணத்தில் பதிவு செய்ய ஆவன செய்யப்படும்.

**471.** மருத்துவர்களுக்கும் (Medical Council), வழக்குரைஞர்களுக்கும் (Bar Council) உள்ளது போல் கட்டுமானத் தொழிலை முறைப்படுத்துவதற்காகக் கட்டுமானப் பொறியாளர்களுக்கும் தனியாக ஓர் அமைப்பு உருவாக்க வல்லுநர் குழு அமைத்து ஆராயப்படும்.

**472.** சொந்த இடத்தில் வீடு, அலுவலகம், தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்டுவதற்குத் திட்ட ஒப்புதல் பெறும் முறைகள் எளிதாக்கப்படும்.

## நீதித்துறை

**473.** வழக்கறிஞர்கள் சேமநல நிதி 7 லட்ச ரூபாய் என்பது 10 லட்சம் ரூபாயாக உயர்த்தித் தரப்படும்.

**474.** மாவட்ட நீதிமன்றங்கள் வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கு அலுவலக அறைகள் கட்டித்தரப்படும்.

475. பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரித்து நீதி வழங்கிட தனி நீதிமன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டு வழக்குகள் விரைவாக விசாரிக்கப்பட்டு நீதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

476. பாலியல் கொடுமைகளால் பாதிக்கப்பட்டோர் குறித்த விபரங்கள் முழுமையான ரகசியத்துடன் பாதுகாக்கப்படும். பெறப்படும் புகார்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளத் தனிப்பிரிவுகள் அமைக்கப்படும்.

## முன்னாள் ராணுவத்தினர்

477. முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நல்வாழ்விற்காகக் குழு ஒன்று அமைத்து ஆய்வு செய்து அவர்களின் நியாயமான கோரிக்கைளுக்கு ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தீர்வு காணப்படும். ஓய்வு பெற்ற ராணுவத்தினருக்கு உரிய வேலைவாய்ப்புகளில் தகுந்த முன்னுரிமை அளிக்கப்படும்.

## கால்நடை வளம்

478. தமிழகத்தில் தேவையான மையங்களில் (Blue Cross) ஆம்புலன்ஸ் வசதிகளுடன் கூடிய கால்நடை மருத்துவமனைகள் அமைத்துத் தரப்படும்.

479. ஒவ்வொரு ஒன்றியத்திலும் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த ஆவன செய்யப்படும்.

480. சாலைகளில் வேகமாகச் செல்லும் வாகனங்களால் அடிபட்டு உயிர் இழக்கும் கால்நடைகளுக்கு அரசு சார்பில் உரிய இழப்பீடு வழங்கப்படும்.

481. தமிழகத்துக்குப் பெருமை சேர்த்து வரும் காங்கேயம் காளைகள், இராஜபாளையம் சிப்பிப் பாறை, கோம்பை வகை நாய்கள் போன்ற தமிழகத்திற்கே உரித்தான அரிய வகை விலங்கு இனங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

482. பொதுமக்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கும் செல்லப் பிராணிகளான நாய்கள், பூனைகள் ஆகியவற்றிற்கும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட விலங்குகளுக்கும் மருத்துவச் சோதனைஅட்டைகள் (Health Card) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## பொது

483. பொதுமக்கள் புழக்கம் அதிகமாக உள்ள அனைத்து இடங்களிலும், குறிப்பாக அரசு, தனியார் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், காவல்நிலையங்கள், அறநிலையத்துறை ஆலயங்கள் ஆகிய இடங்களில் கண்காணிப்புக் காமிராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுக் கண்காணிப்பதற்கு உரிய சட்டம் நிறைவேற்றப்படும்.

## பொய் வழக்குகள் ரத்து

484. அ.தி.மு.க ஆட்சியில், நியாயமான கோரிக்கைகளை முன்னிறுத்தி ஜனநாயக வழியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், ஹட்ரோ கார்பன், மீத்தேன் கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் மீதான பொய் வழக்குகள் அனைத்தும் ரத்து செய்யப்படும்.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வு ஆணையத்தில் – தேர்வு முறைகேடுகள்

485. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அரசுப் பணியாளர்களைத் தேர்வு செய்யும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வு ஆணையத்தில் முறைகேடுகளும் ஊழல்களும் மலிந்து அதன் மாண்பு சீர்கெட்டுப் போனது. அதன் விளைவாக ஆணையம் நடத்தும் தேர்வுகள் அனைத்திலும் தகுதி உள்ளவர்களும் நேர்மையான முறையில் தேர்வு பெற முடியாத சூழல் உருவானது. இது குறித்து விசாரிக்க ஓர் உயர்நிலைக் குழு அமைத்து உரிய நடவடிக்கைகள் எடுத்துக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

486. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட வெளிப்படையான நேர்மையான தேர்வு முறை நடந்திட அனைத்து நடவடிக்கைகளும் உறுதியாக மேற்கொள்ளப்படும்.

## சொத்து வரி கூட்டப்படாது

487. கொரானாவால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் மீண்டும் மேம்படும் வரையில் சொத்து வரி அதிகரிக்கப்படமாட்டாது.

## ரயில்வே தனியார் மயம் ஆவதைக் கைவிட வலியுறுத்தப்படும்

488. 109 வழித் தடங்களில் ஏறத்தாழ 151 விரைவு ரயில்களை 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தனியார் / பன்னாட்டு நிறுவனங்கள் 2023 முதல் இயக்கிட ஒப்புதல் தந்து, ரயில்வேயைத் தனியார் மயமாக்கும் மத்திய அரசின் நடவடிக்கையைக் கைவிடுமாறு தி.மு.க. அரசு வலியுறுத்தும்.

ஏழை எளிய மக்கள் வசதியுடன் பயணித்து வரும் ரயில்வே துறையைத் தனியார் மயமாக்கும் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசின் இந்தத் திட்டம் அதிக அளவு ஏழைகள் வாழும் இந்த நாட்டின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய அளவில் குந்தகத்தை விளைவிக்கும். எனவே மத்திய அரசு ரயில்வே நிர்வாகத்தைத் தனியார் மயம் ஆக்கும் நடவடிக்கைகளைத் தி.மு.க அரசு தொடர்ந்து எதிர்க்கும், ரயில்வே துறையில் தனியார் முதலீட்டை அனுமதிக்கக்கூடாது என்று வலியுறுத்தும்.

## வங்கித் துறையைத் தனியாருக்கு விற்கும் முயற்சியைக் கைவிடுக

489. இந்தியாவில் மிகப் பெரிய அளவில் சிறு குறு தொழில்கள் வளர்ச்சி அடைந்திடவும், தொழில் முனைவோர், வணிகர்கள், மாணவர்கள், மகளிர் என அனைத்துத் தரப்பினரும் பொருளாதார அடிப்படையில் மேம்பாடடையவும், ஒரு சிலருடைய ஆதிக்கத்தில் இருந்த வங்கித் துறையை அரசுடைமையாக்கி அதன் மூலம் அனைத்து மக்களும் பயனடையச் செய்தது காங்கிரஸ் அரசு.

ஆனால், இன்று அரசுடைமை ஆக்கப்பட்ட பல்வேறு வங்கிகளை மீண்டும் தனியாருக்கு விற்பனை செய்யும் திட்டத்தை மத்திய பா.ஜ.க. அரசு நடைமுறைப்படுத்தி வருவது, மீண்டும் வங்கிகள் பொது மக்களுக்குப் பயன்படாமல் ஒருசில தனியாரின் நன்மைக்கே பயன்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிடும் என்பதால் வங்கிகளைத் தனியாருக்கு விற்கும் திட்டத்தைக் கைவிடுமாறு மத்திய அரசை தி.மு.க அரசு வலியுறுத்தும்.

## ஆயுள் காப்பீட்டுக் கழகம் தனியார் மயம் ஆக்கும் முயற்சியைக் கைவிடுக

490. இந்திய மக்களின் நம்பிக்கைக்குரியதும் இந்திய அரசின் பல்வேறு திட்டப் பணிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் பங்களிப்பை வழங்கி வருவதுமான ஆயுள் காப்பீட்டுக் கழகம் தனியார் மயம் ஆக்கப்படும் என இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசு அறிவித்திருக்கிறது. மத்திய அரசின் இந்த அறிவிப்பை ரத்து செய்து ஆயுள் காப்பீட்டுக் கழகம் எப்போதும் போலச் செயல்பட அனுமதிக்குமாறு மத்திய அரசை தி.மு.க அரசு வலியுறுத்தும்.

## புதிய திட்டங்கள் செயலாக்க அமைச்சகம்

491. திட்டங்கள் செயலாக்க அமைச்சகம், எனும் பெயரில் ஒரு புதிய அமைச்சகம் அமைக்கப்பட்டு, மூத்த அமைச்சரின் பொறுப்பில் இயங்கும் இந்த அமைச்சகத்துக்குக் கீழ்க்கண்ட அலுவல்கள் பொறுப்பாக்கப்படும்:–

அ. மாநிலத் திட்டக் குழு இந்த அமைச்சகத்தின் கீழ் இயங்கும். மேலும், இந்தத் தேர்தல் அறிக்கையில் உள்ள கொள்கைகள், திட்டங்கள் வாக்குறுதிகள் மற்றும் செயல் அம்சங்கள் மீதான இலக்குகளைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதை இந்த அமைச்சகம் கண்காணித்து நிறைவேற்றும்.

ஆ. தேர்தல் நேரத்தில் பொது மக்களால் அளிக்கப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை 100 நாட்களுக்குள் எடுக்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றுவதைக் கண்காணிக்கும்.

இ. அரசுப் பதவியேற்ற 100 வது நாளன்று, முதல்வர் அவர்கள் ஊடகவியலாளர்களைச் சந்தித்து இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை மக்களுக்குத் தெரிவிப்பார்.

ஒவ்வொரு மாதத்தின் முதல் பணி நாளன்றும், தேர்தல் அறிக்கை வாக்குறுதிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விரிவான ஆய்வை முதல்வர் மேற்கொள்வார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களைச் சந்தித்து தலைவர் தளபதி அவர்களின் கலைஞர் அரசின் சாதனை அறிக்கையை (REPORT CARD) ஊடகங்களுக்கு வழங்குவார்.

492. சமய நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதில் எந்தவித சமரசமும் செய்து கொள்ளாமல் இயங்கி வரும் தி.மு.கழகம், ஆட்சிப் பொறுப்பேற்றதும், அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 25 வழங்கியுள்ள உரிமைகளின்படி, மத வேறுபாடுகளின்றி அனைத்து மத நிறுவனங்களுக்கும் அவரவருக்குச் சொந்தமான இடங்களில் வழிபாட்டுத் தலங்கள் அமைத்துக் கொள்ள அனுமதி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## மத்திய அரசுப் பள்ளிகள் உட்பட தமிழகப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ் கட்டாயப் பாடம் என சட்டம்.

**493.** தமிழகத்தில் உள்ள பல பள்ளிகள் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கற்பிப்பதில்லை. உலகின் பழைமையான மொழியாகத் திகழும் – 2000 ஆண்டுகளுக்கு மேலான செழுமை மிக்க இலக்கிய வளம் செறிந்துள்ள தமிழ் மொழி – தமிழகப் பள்ளிகளில் கற்பிக்கப்படுவதில்லை என்பதை ஏற்க முடியாது. ஆகையால் தமிழகத்திலுள்ள **(C.B.S.E)** கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் உட்பட அனைத்திலும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து எட்டாம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப் பட வேண்டும் என திமுக அரசு சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தும்.

## 7 பேர் விடுதலை

**494.** ராஜீவ் காந்தி கொலையில் தண்டிக்கப்பட்டு 30 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து சிறையில் வாடிடும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை பெற்றிட அனைத்து முயற்சிகளையும் கழக அரசு முழு முனைப்புடன் மேற்கொள்ளும்.

**495.** தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்பு உறுதி செய்திட தமிழக அரசு மற்றும் தமிழக அரசு நிறுவனங்களில் 100 சதவிகிதம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை நியமிக்கப்பட வேண்டும் என்ற அரசின் விதி கழக அரசால் முழுமையாக பின்பற்றப்படும்.

**496.** பல்கலைக் கழகங்கள் இல்லாத முக்கிய மாவட்ட தலைநகரங்களான காஞ்சிபுரம், ஈரோடு போன்ற முக்கிய இடங்களில் புதிய பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படும்.

497. 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அரசு போக்குவாத்துக் கழகப் பேருந்துகளில் இலவச பயணம் வசதி அளிக்கப்படும். தமிழ்நாட்டிற்குள் மட்டுமே இந்த இலவசப் பயண வசதி தரப்படும்.

**498.** இந்திய குடியுரிமைத் திருத்த சட்டம் 2019ல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நாடுகளுடன் இலங்கையும் நான்காவது நாடாக சேர்த்திட மத்திய அரசு வலியுறுத்தப்படும்.

**499.** எண்ணூர் துறைமுகத்தில் திரவ இயற்கை எரிவாயு முனையம் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இங்கிருந்து, பெரிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள திருப்பெரும்புதூர் பகுதிக்குத் திரவ எரிவாயு எடுத்துச் செல்லப்பட்டு; அதனை எரிபொருளாகப் பயன்படுத்தி 2000 மெகாவாட் தூய்மை மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**500.** இந்திய குடியுரிமை திருத்த சட்டம் 2019 ல் குறிபிடப்பட்டுள்ள மூன்று நாடுகளுடன் நான்காவது நாடாக இலங்கையையும் இணைத்து, இந்தியாவில் முகாம்களில் உள்ள நாடற்ற இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கிட மத்திய அரசு வலியுறுத்தப்படும்.

**501.** தமிழகம் முழுவதும் இலவசமாக (நகரப் பேருந்து Town Bus) உள்ளூர் பேருந்துகளில் மகளிர்க்கு கட்டணமில்லா பயண வசதி அளிக்கப்படும்.

**502.** கொரோனா பெருந்தொற்று நோயினால் இந்தியா உட்பட உலக நாடுகளின் மக்கள் எல்லாம் ஓராண்டு காலமாகப் பாதிக்கப்பட்டுச் சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆளாகி லட்சக்கணக்கானோர் பலியாகிய கொடுமையின் தாக்கம் முற்றிலும் குறைந்தபாடில்லை. தமிழகத்திலும் கொரோனாவினால் அரசு அலுவலகங்கள், தொழிற்சாலைகள், போக்குவரத்து மற்றும் வர்த்தக நிறுவனங்கள், கல்லூரிகள் உட்பட கல்வி நிலையங்கள் எல்லாம் மூடப்பட்டன. பல்லாயிரக்கணக்கான சிறுதொழில்கள் அழிந்து, பெரும்பான்மை மக்கள் வேலை வாய்ப்புகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கிச் சீரழிந்துள்ளனர். இந்தக் கொடுமையில் இருந்து மீள முடியாது தவிக்கும் தமிழக மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கி ஆறுதல் அளிக்குமாறு பலமுறை அ.தி.மு.க. அரசுக்கு வேண்டுகோள் வைத்தும் ஏழை எளியோர் மீது அவர்களுக்கு இரக்கம் பிறந்திடவில்லை. ஆனால், கொரோனா நிவாரணத் தொகையாக பெயரளவுக்கு அ.தி.மு.க அரசு வெறும் ரூ.1000/– தான் வழங்கியது. கொரோனா அச்சுறுத்தல் மீண்டும் திரும்பி உள்ள நிலையில் கட்டுப்பாடுகளும் மக்களின் துயரங்களும் தொடர்வதால் தமிழக மக்களின் துன்பங்களைப் போக்குவதையே கடமையாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் கழக ஆட்சி மலர்ந்ததும் அரிசிக் கார்டு குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த திருநாள் முதல் ரூ.4,000/–வழங்கப்படும்.

## சமையல் எரிவாயு சிலிண்டர் விலை குறைந்திட ரூ.100 மானியம்,

503. ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்குப் பெரும் சுமையினைத் தரும் வகையில் மத்திய அரசு வீடுகளுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை அளவுக்கு அதிகமாகத் தொடர்ந்து உயர்த்தி வருகிறது. சமையல் எரிவாயு மீதான ஜி.எஸ்.டி. வரியை நீக்குமாறு மத்திய அரசைத் தி.மு.க. வலியுறுத்துவதோடு ஏழை, நடுத்தர வர்க்க மக்களுடைய சுமையினைக் குறைக்கும் வண்ணம் மாதந்தோறும் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் (ஒரு சிலிண்டருக்கு மட்டும்) எரிவாயு மானியம் ரூ.100/- வழங்கப்படும்.

## பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள்

504. பெட்ரோல், டீசல் விலைகள் கொரோனா காலத்திலும் அண்மையிலும் கடுமையான வரி உயர்வுகள் காரணமாக முன்பு இல்லாத அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளன. அனைத்துத் தரப்பு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.5/—ம், டீசல் விலை லிட்டருக்கு ரூ.4/—ம் குறைக்கப்படும்.

## பால் விலை குறைப்பு

505. அ.தி.மு.க அரசு 2019 ஆகஸ்ட் 19-ஆம் நாள் முதல் பால் விலையை 6 ரூபாய் உயர்த்தி உள்ளது. இதனால் ஏழை மக்கள் படும் துயரங்களை போக்கும் வகையிலும், ஏழை குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் கட்டுப்படியான விலையில் பால் கிடைக்கும் வண்ணம் ஆவின் பாலின் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்படும்.

இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை எல்லாம் தமிழக அரசின் தற்போதுள்ள கடுமையான நிதி நிலைச் சூழ்நிலையில் அரசின் கடன் ரூபாய் 6 லட்சம் கோடியாகவும், பொதுத் துறை நிறுவனங்களின் கடன் ரூபாய் 3 லட்சம் கோடியாகவும் உள்ள நிலையில், செயல்படுத்த முடியுமா என்கிற ஐயம் ஒரு சிலருக்கு ஏற்படலாம்.

தற்போது அரசின் மேல்மட்டத்தில் தலை விரித்தாடும் ஊழலை ஒழித்தும், அரசின் சார்பில் செய்யப்படும் வீண் செலவினங்களை அறவே தவிர்த்தும், வருவாய்

இழப்புகளைத் தடுத்தும் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் வரி வருவாயைக் கணிசமாக அதிகரித்தும், புதிய வருவாய் ஆதாரங்களைப் பரிசீலித்தும், முறையான நிதி நிர்வாகத்தை உறுதி செய்வதன் மூலமும் கூடுதலாகத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உள்ளது.

தி.மு.கழகம், தனது முந்தைய ஆட்சிக் காலங்களில் எல்லாம், ‘‘சொன்னதைச் செய்வோம்’’ ‘‘செய்வதைச் சொல்வோம்’’ என்பதைத் தாரகமந்திரமாகக் கொண்டு, அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றித் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் சென்றது என்பதைத் தமிழக மக்கள் நன்கு அறிவர். **1996** ஆம் ஆண்டு மற்றும் **2006** ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கைகளில் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியுள்ளோம் என்பதையும் தமிழக மக்கள் நன்கு அறிவர். எனவே, இன்றைக்கு அனைத்து முனைகளிலும் அ.தி.மு.க வின் பத்தாண்டு ஆட்சியில் கண்டிருக்கும் பின்னடைவைப் போக்கி, முன்னேற்றப் பாதையில் மீண்டும் தமிழகம் பீடுநடை போட தி.மு.கழகம் அயராத முனைப்போடு அனுதினமும் பாடுபடும் என்று உறுதி அளிக்கிறேன்.

## தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள ஐந்து ஆண்டு திட்டங்களோடு,

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் அறிவித்த,

## "ஸ்டாலினின் ஏழு" உறுதிமொழிகள் என்ற 10 ஆண்டுகாலத் தொலைநோக்குத் திட்டத்திற்கான வாக்குறுதிகள்:

## 1. பொருளாதாரம்

- பத்தாண்டுகளுக்குள் இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்டுவது முதல் இலக்கு. நமது மாநிலப் பொருளாதாரத்தை ரூபாய் 35 இலட்சம் கோடியாக உயர்த்தி– தனிநபர் வருமானம் ஆண்டுக்கு ரூபாய் 4 இலட்சத்துக்கும் மேலாக உயர்த்தப்படும்.
- ஒவ்வோர் ஆண்டும் 10 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி– தற்போதுள்ள வேலைவாய்ப்பின்மை விகிதம் சரிபாதியாகக் குறைக்கப்படும்.
- பொருளாதார ரீதியாக நலிவடைந்து, கடும் வறுமையில் வாடும் 1 கோடி மக்கள் அடுத்த பத்தாண்டுகளுக்குள் மீட்கப்பட்டு – வறுமைக்கோட்டுக்குக் கீழ் ஒருவர் கூட இல்லாத முதல் மாநிலமாகத் தமிழகம் உருவாக்கப்படும்.

## 2. வேளாண்மை

- தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் ஹெக்டேர் பயிரிடச் செய்து, தற்போதுள்ள நிகர பயிரிடு பரப்பான 60 விழுக்காடு 75 விழுக்காடு உயர்த்தப்படும்.
- 10 இலட்சம் ஹெக்டேர் அளவுக்கு உள்ள இருபோக சாகுபடி நிலங்கள் அடுத்த பத்தாண்டுகளுக்குள் இருமடங்காக, அதாவது, 20 இலட்சம் ஹெக்டேராக உயர்த்தப்படும்.
- உணவு தானியங்கள் மற்றும் தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப்பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம்பிடிக்கும்.

## 3. நீர்வளம்

- தனி நபர் பயன்பாட்டுக்கான தண்ணீர் இருப்பு ஆண்டுக்கு 9 இலட்சம் லிட்டரில் இருந்து 10 இலட்சம் லிட்டராக உயர்த்தி – நாளொன்றுக்கு வீணாகும் தண்ணீரின் அளவு 50 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைக்கப்படும்.
- மறுசுழற்சி செய்து பயன்படுத்தப்படும் நீரின் விகிதம் 5 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்படும்.
- தமிழ்நாட்டின் பசுமைப் பரப்பளவை 20 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்தும் வகையில் 7.5 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் கூடுதலாக இணைக்கப்படும்.

## 4. கல்வி மற்றும் சுகாதாரம்

- மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து தற்போது கல்வி மற்றும் சுகாதாரத்துக்காகச் செலவிடப்பட்டு வரும் நிதியளவு மூன்று மடங்காக உயர்த்தப்படும்.
- கற்றல் வெளிப்பாட்டுக்கான அளவீட்டில் 17 ஆவது இடத்தில் உள்ள தமிழ்நாடு முதல் 10 இடங்களுக்குள் கொண்டு வரப்படும்.
- பள்ளிக் கல்வியில் மாணவர்களின் ஒட்டுமொத்த இடைநிற்றல் விகிதம் 16 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காட்டிற்கும் கீழே குறைக்கப்படும்.
- அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் முன்மாதிரிப் பள்ளிகளும், முன்மாதிரி மருத்துவமனைகளும் அமைக்கப்படும். தரமான கல்வியும் மருத்துவமும் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கும்.

  மாநிலத்திலுள்ள மருத்துவர்கள் – செவிலியர்கள் – துணை மருத்துவர்கள் மற்றும் பிற தொழிற்கல்விப் பட்டதாரிகளின் எண்ணிக்கை இருமடங்காக உயர்த்தப்படும்.

## 5. நகர்ப்புற வளர்ச்சி:

- பத்தாண்டுகளில் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 36 இலட்சம் வீடுகளுக்குப் புதிதாகக் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கப் போகிறோம். இதன் மூலம் குடிநீர் இணைப்பு பெற்ற நகர்ப்புற வீடுகளின் அளவு 35 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடாக உயர்த்தப்படும்.
- அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்படும்.
- குடிசைப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்களுக்குப் புதிதாக 9.75 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் . இதன் மூலம் குடிசைவாழ் மக்களின் அளவு 16.6 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காட்டுக்கும் கீழாகக் குறைக்கப்படும்.
- நாட்டின் தலைசிறந்த 50 மாநகரங்களின் பட்டியலில் தற்போது 11 மாநகரங்கள் இடம் பெற்றுள்ளன. 2031–க்குள் இப்பட்டியலில் தமிழ்நாட்டில் இருந்து 15 மாநகரங்களை இடம்பெற வைப்போம்.

## 6. ஊரக உட்கட்டமைப்பு

- பத்தாண்டுகளில் 20 இலட்சம் கான்கிரீட் வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டு– தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் தற்போது 57 விழுக்காடு உள்ள கான்கீரீட் வீடுகள் 85 விழுக்காடாக உயர்த்தப்படும்.
- கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கும் பெரும்பணி பத்தாண்டுகளில் நிறைவேற்றப்படும்.
- எந்த வானிலைக்கும் அசையாத– தரமான சாலை இணைப்புகளையும், வடிகால் அமைப்புகளையும் ஊரகப் பகுதிகளில் கட்டமைப்போம்.
- எல்லாக் கிராமங்களிலும் அகன்ற அலைக்கற்றை இணைய வசதியை (பிராட்பேண்ட்) ஏற்படுத்துவோம்.
- பத்தாண்டுகளுக்குள் குறைந்தது, தமிழகத்தின் 50 விழுக்காடு கிராமங்களில் திடக்கழிவு மேலாண்மை அமைப்பினைச் செயல்படுத்திக் காட்டுவோம்.

# 7. சமூகநீதி

- தமிழ்நாட்டில் உள்ள குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் 1000 ரூபாய் உரிமைத் தொகை வழங்குவோம்.
- ரேசன் கடைகளில் உணவுப்பொருட்களைப் பெறும் அனைத்துக் குடும்பங்களும் இதனால் பயனடையும்.
- பட்டியலினத்தவர் – பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை தற்போதுள்ளதை விடவும் இருமடங்கு உயர்த்தி வழங்கப்படும்.
- மனிதக் கழிவுகளை மனிதரே அகற்றும் இழிவு முற்றிலுமாக ஒழிக்கப்படும். முழுவதும் தொழில்நுட்ப இயந்திரங்களே இனி இப்பணிக்காகப் பயன்படுத்தப்படும்.

வரிசைப்படுத்தப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவோம்!

* **பாகுபாடு இன்றி அனைத்துப் பிரிவினரையும் அரவணைப்போம்!**
**நேர்மையானதும், சீர்மையானதுமான நல்லாட்சியை**
**நெறிமுறை தவறாது நாளும் வழங்கிடுவோம்!!**

* **இந்தியாவின் ஈடு இணையற்ற மாநிலம்**
**இன்பத் தமிழகம்தான் என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டுவோம்!!!**
**வன்முறை தவிர்த்து வறுமையை வென்று**
**ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!**

**அண்ணா வழியில் அயராது உழைப்போம் !**

**முத்தமிழ் அறிஞர் கலைஞர் கட்டமைத்த நவீன தமிழகத்தை மேம்படுத்துவோம்!**

**ஆதரிப்பீர்**

அன்று,
**சொன்னதை செய்தோம்!**
**செய்ததை சொன்னோம்!**

**உதயசூரியன்!**

இன்றும்,
**சொன்னதை செய்வோம்!**
**செய்வதையே சொல்வோம்!**

அச்சிட்டோர்: ராசி கிராபிக்ஸ் பி. லிமிடெட், சென்னை–14.
வெளியீடு: தி.மு.க. தலைமைக் கழகம்